பக்கங்கள்: பதினாறு+IV=20

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 12 செவ்வாய்க்கிழமை (28.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 244

# அடுத்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் வன்னி அகதிகள் புனர்வாழ்வுக்கு அதிக நிதி

## மீள் குடியமர்வை துரிதப்படுத்தவும் திட்டங்கள்

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்படவிருக்கும் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகளின் நலன்களுக்காக அதிகளவு நிதி ஒதுக்கப்படவிருப்பதாக அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டித் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

2010 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் வன்னிப் பகுதியின் புனர்நிர்மாண, அபி விருத்திப் பணிகளுக்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்து அகதிகளின் மீளக் குடியமர்வைத் துரிதப் படுத்த ஜனாதிபதி திட்டமிட்டிருக்கின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

கல்விச்சுடர்

உள்ளே

ஜி.சி.ஈ.உயர்தர மாணவர்களுக்கான 4 பக்கங்கள் கொண்ட வினாத்தாள்

நாளை

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும் இலகுவழி ஆங்கிலம்

## யாழ்.நகர மக்கள் மத்தியில் தேர்தல் அக்கறை இல்லை

### 'கபே' அமைப்பு சுட்டிக்காட்டுகிறது

கொழும்பு, ஜூலை 28

யாழ். மாநகரசபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளில் வேட்பாளர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்ற போதிலும், அங்கு யழ். மாநகர மக்கள் தேர்தலில் பெரிதாக அக்கறை காட்டவில்லை என்று தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) சுட்டிக் காட்டியிருக்கிறது. (16ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள் கையடக்கத் தொலைபேசியை பாடசாலைக்கு எடுத்துச் செல்ல உடனடித் தடை!

கொழும்பு, ஜூலை 28

மாணவர்கள் கையடக்கத் தொலைபேசிகளை பாடசாலைக்கு எடுத்துச் செல்வதற்கான தடை உடனடியாக நடைமுறைக்கு வரும்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இதற்கான உத்தரவை நேற்று விடுத்துள்ளார்.

மாணவர்கள் கையடக்கத் தொலைபேசிகளை பாடசாலைகளுக்கு எடுத்துச் செல்வதால் வேண்டத்தகாத மற்றும் அநாவசியமான சம்பவங்கள் இடம்பெறுவது கண்டறியப்பட்டது (16ஆம் பக்கம் பார்க்க)

## தபால் வக்களிப்பும் நேற்று மந்தம்

கொழும்பு, ஜூலை 28

யாழ். மாநகர சபை மற்றும் வவுனியா நகரசபை ஆகியவற்றுக்கான தபால்மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பமானது.

(16ஆம் பக்கம் பார்க்க)



## வவுனியா வரை பஸ்ஸில் சென்று அங்கிருந்து ரயிலில் கொழும்பு செல்வதற்கு பயண வசதி

### வடமாகாண ஆளுநர் நடத்திய மாநாட்டில் முடிவு

கொழும்பு, ஜூலை 28

யாழ்ப்பாணத்தில் இருந்து ஏ-9 வீதி ஊடாக விசேட பஸ் சேவை மூலம் வரும் பயணிகள் வவுனியாவில் இருந்து யாழ்தேவி ரயில் மூலம் கொழும்புக்கு செல்ல வசதி செய்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. கூடுதலான பஸ்களை ஏ-9 வீதி ஊடாக சேவையில் ஈடுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டத்தில் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. (16ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படையின் கொழும்பு - யாழ்.சேவை திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்

### நேற்று ஆரம்பம்; இருவழிக் கட்டணம் 19,100 ரூபா

கொழும்பு, ஜூலை 28

யாழ்ப்பாணத்துக்கான முதலாவது உள்ளூர் விமானசேவை நேற்றுக் காலை 8.மணிக்கு ஆரம்பமானது என இலங்கை விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த விமான சேவை திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய நாள்களில் வாரத்துக்கு மூன்று (16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா அகதிமுகாம்களை பார்வையிட்ட அமெரிக்க உதவி அமைச்சர் கவலை தெரிவிப்பு

### 8 மில்லியன் டொலர் வழங்குவதாக அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

இராணுவத்தின் மேற்பார்வையில் நடத்தப்படும் வவுனியா அகதி முகாம்களின் நிலைமை குறித்து அமெரிக்காவின் அகதிகளுக்கான உதவி அமைச்சர் எரிக் பி. சுவாட்ஸ் பெரும் கவலையும் அதிருப்தியும் வெளியிட்டுள் ளார்.



அங்கு அதிருப்தி தரும் பிரச்சினைகள் உள்ளன. அங்கு மேலும் முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும். இடம்பெயர்ந்த பெரும் எண்ணிக்கையானவர்கள் முகாம்களுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் அவல நிலை உள்ளது.

மனிக்பாம் முகாம் பகுதிக்குச் சென்று பார்வையிட்ட பின்னர் கொழும்புக்கு திரும்பிய அமெரிக்க (16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நலன்புரி நிலையங்களில் உள்ள யாழ்.மக்களின் விவரங்களைத் திரட்டுகின்றது மாவட்டச் செயலகம்

### மீளக் குடியமர்வு குறித்த நடவடிக்கைகளுக்காக

யாழ்ப்பாணம், ஜூலை 28

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலயங்களில் தங்கியுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களின் விவரங்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் யாழ். செயலகம் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கென வவுனியா நலன்புரி நிலையங்களில் உள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களின் விவரங்கள் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு (16ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் பெருந்திருவிழாவில் பூபாலசிங்கத்தின் புத்தகத் திருவிழா: மாபெரும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்:

ஆரம்ப பாடசாலை முதல் பல்கலைக் கழகம் வரையிலான அனைத்தும் பாட நூல்களும் (புதிய பாடப்பரப்பிற்கானது) மற்றும்



அறிவியல், பொறியியல், கல்வியியல், சோதிடம், நாவல்கள், கலைக்களஞ்சியம்,
அரசியல், மருத்துவம், உளவியல், யோகக்கலை, சிறுகதைகள், வாழ்வியல் களஞ்சியம்,
ஆன்மீகம் வணிகவியல், கம்பியூட்டர், நுட்பக்கலை, கட்டுரைகள், அகராதிகள்,
இலக்கியம், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், கைத்தொழில், கவிதைகள், Dictionary,
என்பன காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.



பூபாலசிங்கம் புத்தகசாலை நல்லூர் உற்சவகால விற்பனை நிலையம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இலங்கைப் பணியாளர்களுக்கு நன்மையளிக்க குவைத், டுபாய், சவூதியில் புதிய சட்டம் அமுல்

கொழும்பு,ஜூலை 28

மத்திய கிழக்கு நாடுகள் சிலவற்றில் கொண்டு வரப்பட்டிருக்கும் புதிய சட்ட நடைமுறைகள் அங்கு பணியாற்றும் இலங்கையர்களுக்கு மிகுந்த நன்மைகளை கொடுக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குவைத்,டுபாய்,சவூதிஅரேபியா ஆகிய மத்திய கிழக்கு நாடுகள் அங்கு கடமையாற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் நலன்களை உறுதிப்படுத்தும் வகையில் புதிய சட்ட நடைமுறைகளை அமுலுக்கு கொண்டு வந்துள்ளன.

இப்புதிய சட்ட நடைமுறைகள் மூலம் அங்கு கடமையாற்றும் இலங்கையர்களின் தொழில் வாய்ப்புகள், சம்பளக் கொடுப்பனவுகள், தொழில் உத்தரவாதம், தொழில் பாதுகாப்பு, காப்புறுதி நன்மைகள் உட்பட தொழிலாளர் நலன் பேணும் விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

குவைத் நாட்டில் கொண்டு வரப்பட்டிருக்கும் புதிய சட்டத்தின் மூலம் பணிப்பெண்கள் உட்பட இலங்கைத் தொழிலாளர்களை நேரடியாக வேலைக்கு அமர்த்தும் நடவடிக்கைகளில் குவைத் அரசு ஈடுபடுமெனவும் அங்கு வேலைக்கு அமர்த்தப்படும் இலங்கையர்களின் நலன்களை கண்காணிக்கவென விசேட நிறுவனம் ஒன்று சேவையில் ஈடுபடுமெனவும் மேலும் தெரிய வருகிறது. இந்நிறுவனம் தொழில் வழங்குநர்களால் வேலையாள்கள் ஒழுங்காக பராமரிக்கப்படுதல் குறித்தும், சம்பளம் ஒழுங்காக வழங்கப்படுதல் குறித்தும் கண்காணிக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

டுபாய் நாட்டில் கொண்டு வரப்பட்டிருக்கும் புதிய சட்டத்தின் மூலம் இலங்கைத் தொழிலாளர்களுக்கான சம்பளம் உரிய காலத்தில் ஒழுங்காக வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்படுமென நம்பப்படுகிறது. அத்துடன் ஒழுங்காக சம்பளம் கொடுக்காத கம்பனிகள் மீது டுபாய் அரசு புதிய சட்ட நடைமுறைக்கமைய நட்வடிக்கை எடுத்து, அபராதம் விதிக்குமென டுபாய் நாட்டுத் தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

இதே நேரம் சவூதி அரேபியாவில் கொண்டு வரப்பட்டிருக்கும் புதிய சட்டத்தின் மூலம் தொழிலாளர்கள் காப்புறுதி செய்ய வேண்டியது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இதனால் அங்குள்ள தொழில் வழங்குநர்கள் தொழிலாளர்களுக்குக் காப்புறுதி இழப்பீடுகளை வழங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மரண அறிவித்தல்

### திருமதி யோன் சோமசுந்தரம்



குருநாகலைப் பிறப்பிடமாகவும் செம்மணி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோன் (Joan) சோமசுந்தரம் நேற்று (27.07.2009) கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி லெனாட் காலன் பேர்க் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற டாக்டர் போல் ஞானோதயம் சோமசுந்தரம் (ஞானர்) அவர்களின் மனைவியும், ஜோர்ஜ் பாஸ்கரன்.சோமசுந்தரம் (அவுஸ்திரேலியா), நோயல் ரவீந்திரன் சோமசுந்தரம் (அவுஸ்திரேலியா), பத்மினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (28.07.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்று பூதவுடல் புனித பரி.யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*85, செம்மணி வீதி, நல்லூர்,* தகவல்:
*யாழ்ப்பாணம். 021 222 6620* பத்மினி கருணாகரன் (மகள்)

## ஏ-9 பாதையூடாக பொருள்கள் எடுத்துவரும் வர்த்தகர்களுக்கு நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். குடாநாட்டில் இருந்து ஏ-9 பாதையூடாக கொழும்புக்குச் சென்று பொருள்களை எடுத்துவருவதற்கு பதிவுகளை மேற்கொள்ளாத சகல வர்த்தகர்களும் லொறி உரிமையாளர்களும்தமது பதிவுகளை உடன் மேற்கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதி வரை மானிப்பாய் வீதியில் உள்ள யாழ். வணிகர் கழகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும்-நாளை புதன்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கழகத்தில் நடைபெறும் இவ்விடயம் சம்பந்தமான கலந்துரையாடலில் வர்த்தகர்கள், லொறி உரிமையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (7)

## மரண அறிவித்தல்கள்

### தெட்சணா மூர்த்தி ஆச்சாரியார் (சிற்பஆச்சாரி)



வண்ணார்பண்ணை, சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சீனிவாசகம் தெட்சணா மூர்த்தி ஆச்சாரியார் நேற்று முன்தினம் 26.06.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான சீனிவாசகம் - பார்வதி தம்பதிகளின் புதல்வனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர் சுப்பிரமணியம் ஆச்சாரியார் - லெட்சுமி தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி ஆச்சாரி, இராமலிங்கம் ஆச்சாரி மற்றும் செல்லம்மா, அருணாசலம் ஆச்சாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அம்பிகாவின் அன்புத் தந்தையும் விவேகானந்தனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அடக்கத்திற்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*90, சிவன் கோயில் வடக்கு வீதி,* தகவல்:
*யாழ்ப்பாணம்.* குடும்பத்தினர்.

### திருமதி மரியாம்பிள்ளை ஆரோக்கியம்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியாம்பிள்ளை ஆரோக்கியம் நேற்று (27.07.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் யேசுதாசன் (ராசு), அமரர் யோசப்நவரட்ணம், அந்தோனிப்பிள்ளை (முத்து), பிலிப்பொஸ்கோ (லண்டன்), ஜெயரத்தினம், அடைக்கலமேரி றோஸ்பிலோமினா (கொழும்பு), கிருபைராசா (லண்டன்), மேரிவிறிசிற்றா (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும், மேரி கிறேஸ் கனகமணி, மரியசோதி, கிறேஸ்ருக்குமணி, விக்ரோறியா டெய்சி (லண்டன் ), மேரிறோசலின், அஞ்சலோ ஜீவரட்ணம் (கொழும்பு), எட்விஸ்சாந்தினி (லண்டன்), பிலிப்பத்மராஜா (சுவிஸ்) ஆகியோரின் அருமை மாமியாரும், தேவன், றொபேட்றூபினா, சுனித்தா நேசன், றூபன், மனோ, மரிஸ்ரா மேசி, லென்சி, குயின்சி, அமல், ஹட்சன், மரின், ஜெல்சன், லொசின்ரன், அலெக்ஸ், ஏட்ரியன், கிருபாலினி, கிபிர்சன், ஹெலன்சி, ஹெலின்ரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.07.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் புனித மரியன்னை தேவாலயத்தில் நல்லடக்க ஆராதனையின்பின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தும்பளை,* தகவல்:
*பருத்தித்துறை.* பிள்ளைகள்.


- முகாம்களில் உள்ள மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப
- முகாம்களில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு புதுவாழ்வு கிடைக்க
- இளைஞர்கள் அனைவருக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக் கிடைக்க
- யாழ்.நகரம் அபிவிருத்தியும் புது வாழ்வும் பெற



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

யாழ்.மாநகரசபைத் தேர்தல் 08.08.2009



| | | |
|---|---|---|
| | X | |
| 7 | X | X |

R.இரத்தினேஸ்வரன்

(பிள்ளையார் ஸ்ரோர்ஸ், பிள்ளையார் இன் ஹோட்டல்)

அவர்களுக்குப் பேராதரவு தாரீர்

நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் உங்கள் உறவுகளுக்கு கைகொடுக்கும் என்பது நிச்சயம்.

குறிப்பு: கடந்தவியாழக்கிழமை (23.07.2009) காலையில் இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்) எனும் முகவரியில் திரு.ஆர் இரத்தினேஸ்வரன் அவர்களின் கட்சிக் காரியாலயம் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டு மக்கள் தமது குறைகளைத் தீர்ப்பதற்காக எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும். அந்தக் குறைகள் உடனடியாக மேன்மைதங்கிய பஸில் ... கொண்டு செல்லப்பட்டுத் தீர்த்து வைக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இறுதிக் கட்டத்தை நெருங்கும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு

''வட்டுக்கோட்டைக்குப் போக வழி என்ன என்று கேட்டால் 'கொட்டைப்பாக்கு துட்டுக்கு எட்டு' என்றானாம்'' என்ற பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டம் போகின்ற போக்கைப் பார்த்தால் இந்த மொழிதான் நினைவுக்கு வருகின்றது.

இலங்கையில் நீண்டகாலமாக நிலவும் 'தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான மார்க்கங்களை சிபாரிசு செய்வதற்காக' என்ற பெயருடன் தென்னிலங்கை அரசுகளால் காலத்துக்காலம் - அவ்வப்போது - கூட்டப்படும் சர்வ கட்சி மாநாடு, வட்டமேசை மாநாடு, பல கட்சிப் பிரதிநிதிகள் கூட்டம் என்ற நாடகங்களின் வரிசையில் இப்போதைய அரசுத் தலைமையால் அமைக்கப்பட்டதே இந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவாகும்.

சுமார் இரண்டு வருடங்களுக்கும் அதிக காலமாக, நூற்றுக்கும் அதிகமான அமர்வுகளை நடத்தி, 'மலையைக் கெல்லி எலியைப் பிடித்த' கதையாக அது இப்போது இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

தான் முன்வைக்கவிருக்கும் சிபாரிசுகளின் உரைவடிவத்தை நேற்று மாலை கூடி அது இறுதி செய்யவிருந்ததாகக் கூறப்பட்டது. பெரும்பாலும் தனது இறுதி சிபாரிசுகளை அறிக்கை வடிவில் இவ்வாரத்தில் அந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு வடக்கு - கிழக்கைத் தாயகமாகக்கொண்ட தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்வதே என்பதைப் பல தரப்புகளும் ஏற்றுக்கொண்டு வலியுறுத்தி வருகின்றன. அந்த அடிப்படையில் அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் சிபாரிசும் அதனை மையமாக வைத்ததாகவே அமையும் எனப் பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனால், அந்த மூல இலக்குப் பிரச்சினைக்கு மருந்து தேடுவதற்கு அப்பால் தென்னிலங்கை அரசியல் பிரச்சினை குறித்து அது கவலைப்படுகின்றது போலதாகவே விடயங்கள் தோன்றுகின்றன.

தமிழர் தாயகப் பகுதிக்கு அதிகாரங்களைப் பகிர்வது குறித்து நழுவல், வழுவல் நிலைப்பாட்டில் இருக்கும் அது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்தல், மீண்டும் நாடாளுமன்றுக்குப் பதில் கூறத்தக்க பிரதமரின் கீழான ('வெஸ்ட்மினிஸ்டர்') ஆட்சி முறையை ஏற்படுத்தல், இரண்டாவது மேல் சபையை உருவாக்குதல், கிராமக் குழுக்கள் என்ற அமைப்பை ஸ்தாபித்தல் என்று வேறு விடயங்கள் குறித்தே அதிக கவனம் செலுத்தியிருப்பதாக இப்போது வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவைதான் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தின் சிபாரிசுகளில் முக்கிய அம்சங்கள் என்றால் அது, 'வட்டுக்கோட்டைக்கு வழி' கேட்க, 'துட்டுக்கு எட்டுக் கொட்டைப் பாக்கு' என்று பொருத்தமற்ற பதிலை வழங்குவதற்கு ஒப்பானதாகத்தான் இருக்கும்.

தமிழர் தாயகத்துக்கு அதிகாரத்தைப் பரவலாக்கும் விடயத்தில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு வழங்கப்போகும் அலகு எது? வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகமா? அல்லது தமிழர் தாயகத்தை வடக்கு - கிழக்காகத் துண்டாடி மாகாண மட்டத்திற்கா? அல்லது அதிலும்விட கீழே, மாவட்டம், பிரதேச செயலகப் பிரிவு போன்றவற்றையும் தாண்டி கிராம மட்டத்திற்கா? பரவலாக்கப் போகின்ற அல்லது பகிரப் போகின்ற அதிகாரங்கள் எவை? காணி அதிகாரங்கள், பொலிஸ் அதிகாரங்கள் போன்றவையும் பகிரப்படுமா? அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மூலம் அரசமைப்பில் சேர்க்கப்பட்டு, சட்டரீதியாக எழுத்தில் உறுதிப்படுத்தப்பட்டும் நடைமுறைப்படுத்தப்படாமல் இழுபறிப்படும் - காணி மற்றும் பொலிஸ் அதி காரங்களையும் - மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் சிபாரிசும் உண்டா? - இவை போன்றவை குறித்துத்தான் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவிடம் இருந்து முக்கியமாக முடிவு எதிர்பார்க்கப்படுகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதா அல்லது தொடர்வதா என்பது தமிழரின் இனப்பிரச்சினைக்குப் பிரதான விடயமே அல்ல.

இவ்வளவு நீண்டகாலம் இழுபறியோடு அமர்வுகளை நடத்திவந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு சர்வதேச அழுத்தத்தைச் சமாளிக்கும் நோக்குடன் ஜனாதிபதி கேட்டதும் அவசர அவசரமாக இடைக்கால அறிக்கை ஒன்றை கடந்த ஜனவரியில் ஜனாதிபதிக்குக் கையளித்தது. அதில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மூலம் இருபது வருடங்களுக்கு முன்னர் கொண்டு வரப்பட்ட அதி காரப் பகிர்வு நடவடிக்கைகளையாவது இடைக்கால ஏற்பாடாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அது சிபாரிசு செய்திருந்தது.

இடைக்கால ஏற்பாடாக அதனை ஏற்கனவே முன்வைத்திருப்பதால் இனி அது முன்வைக்கப்போகும் இறுதி அறிக்கையில், அந்த இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டதைவிட கூடிய அதிகாரப்பகிர்வை அது சிபாரிசு செய்வதே முறையாக இருக்கும்.

அந்த வகையில் நோக்கின், இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்த ஏற் பாடுகளுக்கும் அப்பால், இனி மேலதிகமாகச் செய்யுமாறு அது வலியுறுத்தப்போகும் அதிகாரப்பகிர்வுகள் எவையாக இருக்கும் என்பதே இப்போதைய கேள்வியாகும்.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டியபடி இந்த அமைப்பு 'அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு' என அழைக்கப்பட்டாலும், அந்த நாமத்துக்கு அது பொருத்தமேயற்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

ஆக, அரசுக் கட்டமைப்பில் இருக்கும் பல்வேறு கட்சிகளில் பதினொன்றும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியவையும் மட்டுமே இந்த 'அனைத்துக் கட்சிகளில்' உள்ளடங்குகின்றன.

பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று முக்கிய தரப்பு எதுவுமே இந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுமத்தில் இல்லை.

இந்தப் பின்புலத்தில் இப்படி அரைகுறைத் தோற்றத்தில் இருக்கும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு வழங்கப்போகும் இறுதிச் சிபாரிசு அர்த்தம் மிக்கதாக இருக்குமா? அது அமைதித் தீர்வுக்கு வழி வகுக்குமா? பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

# நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்துக்கென 150 மில்லியன் ரூபா செலவில் புதிய படகு.

## கட்டுமானப் பணிகள் டிசெம்பருக்குள் பூர்த்தியாகும்

நல்லூர், ஜூலை 28

நெடுந்தீவுக் கடற்போக்குவரத்துச் சேவைக்கென 150 மில்லியன் ரூபா செலவில் புதிய படகு கட்டும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

4 அடி தண்ணீரில் மிதக்கக் கூடியவாறு அமைக்கப்படவுள்ள இந்தப் படகின் கட்டுமானப் பணிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் பூர்த்தியாகும் எனவும் வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்படும் தரமான தகடுகள் இதற்குப் பயன்படுத்தப்படும் எனவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டப் பணிப்பாளர் எஸ். தர்மகுலசிங்கம் தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேச பதில் உதவி அரசாங்க அதிபர் மு.நந்தகோபாலன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டப் பணிப்பாளர் எஸ். தர்மகுலசிங்கம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் கடந்த சனிக்கிழமை நெடுந்தீவுக்கு விஜயம் செய்தனர்.

நெடுந்தீவுக்கான புதிய படகுக் கட்டுமானப் பணிகளுக்கும் துறைமுகப் புனரமைப்புப் பணிகளுக்கும் 300 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதிய படகினை அமைப்பதற்கு 150 மில்லியன் ரூபாவும் துறைமுக நுழைவாயிலை அண்டியுள்ள இரும்புப் பாலம் அமைப்பு. துறைமுகம் ஆழமாக்கும் பணிகள் ஆகியவற்றுக்கு 150 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நுழைவாயிலை அண்டியுள்ள இரும்புப் பாலத்துக்குப் பதிலாக 'கொங்கிறீற் பாலம்' அமைக்கப்படவுள்ளதுடன் அருகே உள்ள துறைமுக ஆற்றுவழிக்கான பாதையின் அடையாளத் தூண்கள் இரண்டும் திருத்தியமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(50-111)

# நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களை நாம் தொடர்ந்தும் தங்க வைக்கப்போவதில்லை

## அமைச்சர் பியசேன கமகே கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 28

போரினால் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை நாம் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்போவதில்லை. அவர்களின் விசாரணைகள் முடிந்ததும் சொந்த இடங்களில் அவர்களை மீளக்குடியமர்த்துவோம். இவ்வாறு தெரிவித்துள்ளார் தொழிற் பயிற்சி வழங்கல் அமைச்சர் பியசேன கமகே.

நேற்று யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பக்கல்லூரிக்கு விஜயம் செய்த அமைச்சர் பியசேன கமகே முகாம்களில் உள்ள தமது உறவுகளை விடுவிக்குமாறுகோரி விண்ணப் பங்களை சமர்ப்பிக்கக் காத்திருந்த மக்கள் மற்றும் தொழில்நுட்பக் கல் லூரி மாணவர்களிடையே உரையாற்றினார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு;

'நான் முதன் முதலாக வந்ததைவிட இன்று எனக்கு மிகச்சிறந்த வரவேற்பை வழங்கியுள்ளீர்கள். நாம் முன்பு உங்களுடன் தொடர்புகொள்ள முடியாத நிலை காணப்பட்டது. எனினும் அக்காலப்பகுதியிலும் தொழில்நுட்பக் கல்லூரி மிகச் சிறப்பான முறையில் இயங்கியது. வடக்கு மக்களும் தெற்கு மக்களும் இணைந்து ஒரே நாட்டவர்களாக சுதந்திரமாக வாழும் உரிமை அனைவருக்கும் உண்டு. எமக்குள் எவ்விதமான பேதங் களும் இல்லை.

அன்பார்ந்த பெற்றோர்களே, மாணவர்களே உங்களுக்குத் தேவையான போக்குவரத்து, கல்வி, சுகாதாரம் போன்ற அனைத்து வசதிகளையும் அரசாங்கம் செய்து தரும். வடக்கும் தெற்கும் அனைவருக்கும் சொந்தமானது. சகலரும் வாழவேண்டும் எனும் நிலை ஏற்படுத்தப்படவேண்டும்.

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்துக்கும் எமக்கும் தொடர்பு இல்லாத போதும்தான் அமைச்சராகப் பதவியேற்றதும் இந்தத் தொழில்நுட்பக் கல்லூரியை உயர் தொழில்நுட்பக் கல்லூரியாக தரம் உயர்த்தினேன். யாழ்ப்பாணத்தில் தொழிற்பயிற்சி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக 5 தொழிற்பயிற்சி நிறுவனங்களை விரைவில் நிறுவ உள்ளோம்.

யாழ்.மாணவர்கள் படிப்பில் மிகவும் கெட்டிக்காரர்கள். பாடசாலையை விட்டும் விலகும் மாணவர்களுக்கு அவர்களின் திறமைகளை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான தொழிற் பயிற்சிகளையும் நாம் வழங்கவுள்ளோம். இலங்கையிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரியே முதலாவதாக உள்ளது. இங்கு பட்டமேற்படிப்பினை வழங்கவும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். என்றார் அமைச்சர் பியசேன.

இந்நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டார்.

(50-06)

# நெடுந்தீவுக்குப் புதிய பஸ்

நெடுந்தீவு, ஜூலை 28

நெடுந்தீவில் உள்ளூர் போக்குவரத்துச் சேவைக்கென புதிய பஸ் ஒன்று எடுத்து வரப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்று இதற்கென காரைநகரில் தரித்து நிற்பதாகவும் குறிப்பிட்ட பஸ்ஸை கடற்படையினர் நெடுந்தீவுக்கு எடுத்து வருவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இங்கு சேவையில் உள்ள பஸ் அடிக்கடி பழுதடைவதால் பொது மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்வதும் குறிப்பிடத்தக்கது.

(50-111)

# இலங்கை வங்கி நடத்தும் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 28

ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் ஆர். ஜெயேந்திரா தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கியின் யாழ்.அதிமேற்தரக்கிளையின் பாடசாலை சேமிப்புப் பிரிவில் இணைந்துள்ள வேம்படி மகளிர்கல்லூரி, திருக்குடும்ப கன்னியர்மடம், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, பரியோவான் கல்லூரி, பத்திரிசியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவர்களை இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(203)

# நாளை

| | |
|---|---|
| ஆடி 13 | 29.07.2009 புதன்கிழமை |
| திதி: | அட்டமி மு.இ. 08.56 வரை |
| நட்சத்திரம்: | சுவாதி பி.இ. 12.02 வரை |
| சுபநேரம்: | 04.33 - 06.03 |
| ராகுகாலம்: | 12.03 - 01.33 |

# நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை விடுவிக்கக்கோரி 3 ஆயிரம் விண்ணப்பங்கள்

## நேற்று அமைச்சர்களிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள உறவுகளை விடுவிக்குமாறு கோரி 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் அமைச்சர்களான பியசேன கமகே, டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன.

நேற்று யாழ்.தொழில் நுட்பக் கல்லூரிக்கு விஜயம் செய்த அமைச்சர்களிடம் பொதுமக்கள் இந்த விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர்.

யாழ்.தொழில் நுட்பக்கல்லூரிக்கு நேற்று விஜயம் செய்திருந்த வாழ்க்கைத் தொழிற் கல்வி அமைச்சர் பியசேன கமகே, சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் மத்தியில் உரையாற்றினார்கள்.

அமைச்சர் பியசேன கமகே உரையாற்றிய பின்னர் இரண்டு அமைச்சர்களையும் பொதுமக்கள் சூழ்ந்து கொண்டனர்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள தமது உறவினர்களை விடுவிக்குமாறு கோரும் விண்ணப்பங்களை அவர்கள் தமது கைகளில் தாங்கியிருந்தனர்.

நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தமது உறவினர்களை விரைவில் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்த விண்ணப்பங்களில் கோரப்பட்டிருந்தது.

அமைச்சர்களிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்காக நேற்றுக் காலை முதல் பெரும் எண்ணிக்கையான மக்கள் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் கூடியிருந்தனர்.

(50-9-6-224)

# வடமாகாணத்திற்கான போக்குவரத்துக்கு 580 தனியார் பஸ்கள் ஈடுபடுத்தப்படும்

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

வடக்கு மாகாணத்தின் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 580 தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என இலங்கை தனியார் போக்குவரத்துச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தவென பஸ்களை இந்திய நிறுவனங்களிடம் இருந்து கடனடிப்படையில் கொள்வனவு செய்யவுள்ளதாகத் தனியார் போக்குவரத்துச் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்திய அரசிற்கும் தூதரகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்று தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் ஹெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

இந்தப் பஸ்கள் கொள்வனவு தொடர்பாக பேச்சுகளை நடத்த ஓகஸ்ட் முதலாம் திகதியளவில் தான் இந்தியா செல்லவுள்ளார் என்றும் ஹெமுனு விஜயரத்ன மேலும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ச.வல்லவாம்பிகை அவர்களின் அன்புத் தந்தை

## அமரர் கனகசபை சிவசரணம்

அவர்கள் சிவபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அவரது குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

யா/கரம்பொன் சண்முகநாத ம.வி,
ஊர்காவற்றுறை.
(87378)

அதிபர், ஆசிரியர்கள்,
அலுவலர்கள், மாணவர்கள்,
பாடசாலைச்சமூகம்.

# அந்தியேட்டிக் கிரியையும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



கடந்த 30.06.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் கந்தையா பசுபதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.07.2009) செவ்வாய்க்கிழமை காலை 7மணிக்கு புனித வில்லூன்றி தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (30.07.2009) வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளன.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

(இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

105/1, கண்டி வீதி,
கச்சேரியடி.
யாழ்ப்பாணம்.

தகவல்:
மயூரன்,மயூரி,
(பேரப்பிள்ளைகள்).

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பட்டப் படிப்பு பதிவு -2008/2009

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் 2008/2009 கல்வியாண்டுக்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாகப்பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து 30.09.2009 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1.வர்த்தக முதற் கற்கை நெறி
2.கலை முதற் கற்கை நெறி
3.பொது/சிறப்பு கலைமாணி/வணிகமாணி பகுதி - 1
4.இசைமாணி/நடனமாணி முதலாம் வருடம்
5.இசைமாணி/நடனமாணி இரண்டாம் வருடம்
6.இசைமாணி/நடனமாணி மூன்றாம், நான்காம் வருடம்

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்பு கலைமாணி பகுதி - 1 கற்கை நெறிக்குப்பதிவு செய்து கொள்ளலாம்.

இந்துநாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், மெய்யியல், அரசறிவியல்.

| கட்டண விவரம் | ரூபா |
|---|---|
| விண்ணப்பப்படிவம் | 100.00 |
| பதிவுக் கட்டணம் | 1,000.00 |
| பாடத்திட்டமும், விதி முறைகளும் | 650.00 |

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெறவிரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் உரியதொகைகளைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து எமது அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட ரூபா 40 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28×20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன் உதவிப்பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வெளிவாரிப் பட்டப் படிப்பு பதிவு - 2008/ 2009' எனக் குறிப்பிடல் வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.
27.07.2009

# நல்லூரில் நேற்று தங்க நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 28

நேற்று நடைபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் கொடியேற்ற திருவிழாவில் கலந்துகொண்ட பெண்ணொருவரின் கைப் பையினை வெட்டி ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 3 பவுண் நிறையுடைய சங்கிலிகள் மூன்றும், கையடக்கத்தொலைபேசி மற்றும் அடையாள அட்டைகள் என்பவை திருடப்பட்டுள்ளதாக ஆலயத்தின் மேற்கு வீதியிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை மாநகர சபையின் அருகாக உள்ள இந்து விடுதிக்கு அண்மையில் இருந்து 5 ஆயிரம் ரூபா பணம் கண்டெடுக்கப்பட்டு இந்து விடுதியில் அமைக்கப்பட்டுள்ள உற்சவகால அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (06-86-111)

# முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் முத்தமிழ்விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி திருநாவுக்கரசு கமலநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

போட்டிகளில் வெற்றிபெற்ற முகிழ் நிலை ஆசிரியர்களுக்கான பரிசில்களை திருமதி இராஜாம்பிகை கமலநாதன் வழங்கவுள்ளார். (204)

# உலக உணவுத்திட்ட ஜூலை மாத நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

உலக உணவுத்திட்டத்தின் தொழில் ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கான ஜூலை மாத நிவாரணம் வழங்கப்படவிருக்கின்றது.

இந்த நிவாரணத்துக்கான வழங்கற் கட்டளைகளை இன்று முதல் செயலக புனர்வாழ்வுப் பிரிவில் பெற்று நாவற்குழி களஞ்சியத்தில் பொருள்களை எடுத்து விநியோகத்தை உடன் ஆரம்பிக்குமாறு செயலக திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் கேட்டுள்ளார்.

# கொடிகாமத்தில் மீண்டும் மக்கள் வங்கிக் கிளை திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 28

மூன்று வருடங்களின் பின்னர் மக்கள் வங்கியின் கொடிகாமக்கிளை மீண்டும் நேற்று அங்கு திறக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஏ-9 பாதை மூடப்பட்டதை அடுத்து பாதுகாப்புக்காக அந்தக்கிளை சாவகச்சேரிக்கு மாற்றப்பட்டிருந்தது.

மீண்டும் கொடிகாமத்தில் அந்தக் கிளை நேற்றுத் திறக்கப்பட்டது. (1-131)

# உயர்தொழில்நுட்ப நிறுவன பெறுபேறுகள்

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் எச்.என்.டி.ஈ., எச். என்.டி.பி.எஸ். ஆகிய கற்கைநெறி மாணவர்களின் ஒப்படைப் பெறு பேறுகள் கிடைத்துள்ளன என நிறுவனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

உடனடியாக நிறுவனத்துக்கு வந்து பட்டமளிப்புக்கு விண்ணப்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (1)


## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் மூன்று மாதகாலங்களுக்குள் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில.
BY. N.விக்னேஸ்வரன் ஆர்ச்சி 426 (302), K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
பிளாக் வீதி, சங்கானை.
'THE ROYAL IS THE BEST'


## சக்தி கல்வி நிறுவனம் - சுன்னாகம்

புவியியல் கருத்தரங்கு - 2009
காலம் 30.07.2009
நேரம் - காலை 9
எதிர்பார்க்கும் வினாக்கள் வழங்கப்படும்.

ஆசிரியர். S.P.கரன்
நிர்வாகி.

# பெயர் மாற்றம்

மாலு சந்தி, அல்வாய் தெற்கு, அல்வாயை வசிப்பிடமாகக் கொண்ட ரங்கநாதன் ஆகிய நான் எனது பெயரை ரகுநாதன் என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் ரகுநாதன் என கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசிற்கும் மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# வீடு விற்பனைக்கு

உரும்பிராய், பலாலி வீதியில் கற்பகப்பிள்ளையார் கோயிலுக்கும் உரும்பிராய்ச் சந்திக்கும் இடையில் சகல வசதிகளுடன் கூடிய 2½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. அனைவரும் நேரில் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு:
0602002819

# 31 ஆம் நாள் வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த 29.06.2009 திங்கட்கிழமைஅன்று இறைபதமடைந்த எமது இல்லத்தரசி

## திருமதி கதிரவேலு சரஸ்வதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 29.07.2009 புதன்கிழமை காலை 8.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம். குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

## கந்தையா சிவானந்தம் (பிரபல சட்டத்தரணி)



கொக்குவில் இந்துக்கல்லூரியின் சிரேஷ்ட பழைய மாணவனும் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் சிரேஷ்ட தலைவரும் ஆகிய கந்தையா சிவானந்தம் அவர்களின்பிரிவால்வாடும் அவரின் குடும்பத்தவர்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில்.

# மரண அறிவித்தல்

## செல்லையா வடிவேல்

(இளைப்பாறிய இராணுவ உத்தியோகத்தர்)



கட்டுவனைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா வடிவேல் நேற்று (27.07.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஞானாம்பிகையின் அன்புக் கணவரும் சுபீகரனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஜெயலக்ஷ்மி மற்றும் தர்மராசா, ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கதிர்காமநாதன் மற்றும் செல்வரத்தினம், சரஸ்வதி, கனகநாயகம், அருணகிரிநாதன், காமதேனு ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.07.2009) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோவிலடி,
பிரதான வீதி,
சித்தன்கேணி.

தகவல்:
மனைவி, மகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு நேற்று விஜயம் செய்திருந்த வாழ்க்கைத் தொழில்நுட்பக் கல்வியமைச்சர் பியசேன கமகே குழுவினர் வரவேற்கப்படுவதையும் அமைச்சர் பியசேன கமகே, சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: தமிழரசன்)

# ஆயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் நல்லூர் கந்தன் ஆலயத்தில் நேற்று கொடியேறியது

யாழ்ப்பாணம்,ஜூலை28

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலயப் பெருந்திருவிழா நேற்று முற்பகல் 10 மணிக்கு ஆயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

கொடியேற்றத்தைக் கண்டு தரிசிப்பதற்குக் குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து ஆயிரக்கணக்கானோர் ஆலயத்துக்கு வருகை தந்திருந்தனர்.

ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் நலனைக் கருத்திற்கொண்டு தொண்டர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பெரும் எண்ணிக்கையான அடியார்கள் அடியளித்தும், அங்கப்பிரதிஷ்டை செய்தும் தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்தனர்.

ஆலய சூழலில் பொலிஸாரும் படையினரும் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

குடாநாட்டின் ஏனைய பாகங்களில் இருந்தும் வருகை தரும் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஆலய சூழலில் உள்ள அன்னதான மடங்களில் அன்னதானம் இடம்பெற்றது.

ஆலயச் சூழலில் குடிதண்ணீர் வசதிகள், சுகாதார வசதிகள் என்பன முழுமையாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கோயில் வீதியில் சங்கிலியன் வீதி பிராமணக் கட்டுப் பகுதி, பருத்தித்துறை வீதியில் அரசடிச்சந்தியில் இருந்து நல்லூர் குறுக்கு வீதி மற்றும் செட்டித்தெரு வீதி என்பன திருவிழாக்காலங்களில் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளன.

இந்த வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள தடைமுகாம்களில் யாழ்.மாநகரசபை ஊழியர்கள், தொண்டர்களு ன் பொலிஸாரும் கட மையில் ஈடுபட்டுள்ளனர்.

(203- 236-86-111)

## மக்கள் வங்கியின் கருமபீடம் நல்லூரில் நேற்றுத் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை28

மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையின் உற்சவகால விசேட கருமபீடம் நேற்று முற்பகல் 11மணிக்கு நல்லை ஆதீனத்துக்கு முன்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

திருவிழா நிறைவடையும் வரை மாலை 6 மணிவரை இந்தக் கருமபீடத்தில் வாடிக்கையாளர்களுக்கான சேவை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(203)

## சுந்தரமூர்த்திநாயனாரின் குருபூசைத் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை28

ஆனைக்கோட்டை இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் சுந்தரமூர்த்திநாயனாரின் குருபூ சைத்தின நிகழ்வு நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு ஆனைக்கோட்டை ஸ்ரீவல்லியப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சைவப்புலவர் என்.நித்தியதசீதரன் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

* * *

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் சுந்தரமூர்த்திநாயனாரின் குருபூசை நிகழ்வுகள் நாளை புதன்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்.மணிக்கூட்டு வீதி அரசடிப் பிள்ளையார் ஆலயத்திலும், காலை 9.30 மணிக்கு நல்லூர் சட்டநாத சுவாமி ஆலயத்திலும் நடைபெறவுள்ளன.

அன்றையதினம் காலை ஆலய பூசையைத் தொடர்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அபிஷேக ஆராதனை வழிபாடு ஆகியவை நடைபெற்று நாயனார் பாடியருளிய பதிகப்பாராயணம், சொற்பொழிவு ஆகியன இடம்பெறும். (201)

## வலி.கிழக்குப் பிரதேசத்தில் விவசாய அபிவிருத்தித் திட்டம்

கோப்பாய்,ஜூலை28

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 89 லட்சம் ரூபா செலவில் விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் தூவல் நீர்ப்பாசன வசதிகள், சொட்டு நீர்ப்பாசனம், மீள் மர நடுகைத் திட்டம், பழச்செய்கையில் நவீன இன பயன்பாடு ஆகிய திட்டங்களே முன்னெடுக்கப்படவுள்ளன.

இப்பிரதேச செயலர் பிரிவின் 31 கிராம அலுவலர் பிரிவிலும் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் ஆரம்ப கட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

(203-72)

# தமிழ் மரபின் செழுமையை அறிந்திருந்தமையால் பண்பாட்டின் ஆழத்தைப் படைப்புகளூடாக முன்வைத்தவர் முருகையன்

## ‘தாயகம்’ ஆசிரியர் க.தணிகாசலம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

தமிழ் மரபின் செழுமையைத் தெரிந்திருந்தமையால் தமிழ்ப் பண்பாட்டு வேரின் ஆழத்தை இலக்கியப் படைப்புக்களூடாக முன்வைத்தவர் முருகையன்.

தேடல் முயற்சியுள்ள அவர் தமது கவிதைகள் மூலமும் நாடகங்கள் மூலமும் மக்கள் மத்தியில் அதிர்வுகளை ஏற்படுத்தினார்.

அவரது 2000 ஆண்டுப் பழஞ்சுமை என்ற படிமம் வேண்டாத குப்பையை விலக்கி மணிகளைப் பொறுக்கவேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தியது.

திருமுறைகளிலும் சித்தர் பாடல்களிலுமுள்ள சிறந்த கருத்துக்களை மக்களுக்குப் புரியும்படி தனது இலக்கியங்களில் எடுத்துப் பயன்படுத்தினார்.

'தாயகம்' சஞ்சிகையின் ஆசிரியரான க.தணிகாசலம் இவ்வாறு கூறினார்.

இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கவிஞர் இ.முருகையனின் நினைவஞ்சலிக் கூட்டத்திலே கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனின் தலைமையில் இடம்பெற்றது.

தலைமையுரையாற்றிய ஸ்ரீகணேசன் தெரிவித்ததாவது:

முருகையன் மரபுக் கவிதைத் துறையில் வீச்சாக நின்ற அதேவேளை புதுக்கவிதைப் பண்புடைய கவிதைகளையும் எழுதி இளம்பரம்பரையை ஈர்த்தவர்.

நாடகத்துறையிலே கந்தபுராணக் கதையமைப்பை அடியொற்றித் தொழிலாளர் பிரச்சினையை முன்வைத்தமை ஈழத்தமிழர் மரபில் முக்கியமானதாக அமைந்தது.

மொழிபெயர்ப்பு, விமர்சனத்துறைகளிலும் கூடத் தனக்கெனத் தனிமுத்திரை பதித்தவர் கவிஞர் முருகையன் என்றார்.

இந்நிகழ்வில் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா உரையாற்றுகையில்:

கவிஞர் முருகையன் பல்கலைக்கழக மட்டத்தில் பயிற்சி அளிக்கவென ஒரு சிறப்பான மொழி பெயர்ப்பு நுட்பத்தைத் தெரிவு செய்தார்.

பண்பாட்டில் சங்கமித்து வெளிக்கிளம்பிய கருத்துக்களூடாக மொழிபெயர்ப்பைச் செய்வதில் வல்லவராகவும் குறியீடுகள், நகைச்சுவை என்பவற்றைச் சிறப்புறப் பயன்படுத்தி மனிதப் பண்புகளை வெளிப்படுத்துபவராகவும் அவர் விளங்கினார் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்விலே இணுவில் கலை இலக்கிய வட்டத் தலைவர் த.சிவகுமாரன், பலாலி ஆசிரிய கலாசாலை இளைப்பாறிய அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன், குழந்தை ம.சண்முகலிங்கம், இணுவில் கலை இலக்கிய வட்டப் பொருளாளர் ந.ஞானசூரியர் ஆகியோரும் உரையாற்றினர்.

இணுவில் மத்திய கல்லூரி மாணவர்களின் 'வெயில் போ மழை வா' என்னும் கவிதா நிகழ்வும் இடம்பெற்றது.

(203-55)



கவிஞர் இ.முருகையனின் நினைவஞ்சலிக் கூட்டம் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் கலாநிதி க.ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் குழந்தை ம.சண்முகலிங்கம் முருகையனின் உருவப்படத்துக்கு ஒ ளக்கேற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். கலாநிதி க.ஸ்ரீகணேசனும் படத்தில் காணப்படுகிறார்.

'தாயகம்' இதழாசிரியர் க.தணிகாசலம், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் ஏனைய மூன்று படங்களிலும் காணலாம். (படங்கள்: லிங்கன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மீளக் கட்டமைக்கப்பட்ட புலிகள் அமைப்பின் தலைவராக கே.பி. வருவதை எதிர்க்கும் புலிகளின் சதிக் கூட்டம்' என்ற தலைப்பில் கடந்த சனியன்று 'டெய்லி மிரர்' பத்திரிகையில் டி.பி.எஸ்.ஜெயராஜ், தமது பத்தியில் வரைந்த கட்டுரையின் முதல் அங்கம் நேற்று இங்கு பிரசுரமானது. இலங்கைத் தமிழர்களின் போராட்ட நிலைமையை ஒட்டி பல்வேறு கட்டுரைகளை எழுதி சர்ச்சையை ஏற்படுத்தி வருபவர் அவர். கொழும்பில் தமிழ், ஆங்கில ஊடகங்களில் நீண்டகாலம் பணி புரிந்த டி.பி.எஸ்.ஜெயராஜ் தற்போது கனடா வில் வாழ்ந்த படி ஊடகப்பணி ஆற்றி வருகின்றார். djeyaraj2005 @-yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் அவருடன் தொடர்பு கொள்ளலாம் என 'டெய்லி மிரர்' பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இரண்டாவது அங்கம் இங்கு பிரசுரமாகிறது.



டி.பி.எஸ்.ஜெயராஜ்

### பிளவுபட்டது

இப்படி புலம்பெயர் சமூகம் பிளவுபட்ட பின் புலத்திலேயே, வெளிநாட்டில் உள்ள புலிகளின் ஆதரவாளர்கள் மத்தியில் பரந்தளவிலான தொடர் கலந்தாலோசனைகளை முன்னெடுக்கத் தொடங்கினார் கே.பி.

அவர் தமது கருத்து நிலையைத் தெளிவுபடுத்தி, விளங்கவைத்தமை மாத்திரமன்றி, புலிகளின் தலைமைத்துவத்துடன் தாம் மேற்கொண்ட கருத்துப் பரிமாற்றங்களின் பிரதிகளைக்கூட வழங்கினார். உரையாடல்களின் பதிவு அடங்கிய ஒலி நாடாக்கள் கூட விநியோகிக்கப்பட்டன. அதன் மூலம் தமது கருத்து நிலைக்குப் பலரை கே.பியினால் திருப்ப முடிந்தது.

விசுவாசம் மிக்க பல பழைய கைகள் கே.பியைச் சுற்றி இணைந்த அதேசமயம், அந்த மூத்த புலி உறுப்பினருக்கு ஏனையோரிடம் இருந்தும் ஆதரவு கிட்டத் தொடங்கியது.

பிரபாகரன் உயிருடன் உள்ளாரா என்ற விடயத்தில் கே.பிக்கு மாறாக முன்னர் அறிக்கை வெளியிட்டிருந்தது புலிக

இரண்டு காரணங்கள் உள்ளன.

முதலாவது - புலிகளின் பிரபஞ்சத்தைப் பொறுத்தவரை ஒரே சூரியன் பிரபாகரன் என்பதால் அவரது மறைவை ஒப்புக்கொள்வது ஆதரவாளர்களின் மனோ வலிமையை முற்றாக சிதைவுறச் செய்யும். போராட்டத்தைத் தொடர்வதற்கு பிரபாகரனின் சிரஞ்சீவித்தன்மை (பிரபாகரனுக்கு மரணம் இல்லை) என்ற நம்பிக்கையைப் பேண வேண்டும்.

அதைவிட யதார்த்தபூர்வமாகப் பார்த்தால், புலம்பெயர்ந்தோரிடமிருந்து நிதியைப் பெற்று வழமைபோல அலுவல்களைத் தொடர்வதற்கு பிரபாகரன் பற்றிய நம்பிக்கையைப் பேண வேண்டியது முக்கியமானது. இதற்கு ஆயுதப் போராட்டத்தைத் தொடர்வது போல காட்டுவதும் அவசியமானது.

பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்றும், ஆயுதப் போராட்டம் தொடர்கிறது என்றும் ஒரு மாயையைக் காட்டுவதன் மூலம்

உள்ளடக்கத்திலும், கட்டமைப்பிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மாற்றி அமைக்கும் திட்டத்தை கே.பி. பிர சாரப்படுத்தி, முன்னிலைப்படுத்தி வருகின்றார் என அவருக்கு நம்பிக்கையானவர்கள் கூறுகின்றனர். இலங்கையில் மாற்றமடைந்திருக்கும் அரசியல் - இராணுவக் களநிலைவரங்களுக்கு அமைய விடுதலைப் புலிகளும் மாற்றமடைவது தவிர்க்க முடியாதது என்பதை கே.பி. வற்புறுத்துகின்றார்.

புலிகளின் 'கேணல்' தரத்தைச் சேர்ந்த இருவரால் கே.பியின் கைகள் இப்போது மேலும் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒருவர் சுரேஷ் அல்லது அமுதன், மற்றவர் ராம்.

சுரேஷ் மன்னாரைச் சேர்ந்தவர். மன்னாரின் இராணுவத் தளபதியாக பானு இருந்த சமயம் மன்னார் அரசியல் பிரிவுப் பொறுப்பாளராக இருந்தவர் இவர். தமிழ்ச்செல்வனுடன் பின்னர் பிசகுப்பட்டதால் சில வருடங்களாக ஒதுக்கப்பட்டார்.

எனினும், பின்னர் கிட்டு பீரங்கிப் படைப் பிரிவின் பொறுப்பாளராக பானு நியமிக்கப்பட்டதும் சுரேஷ் அவரின் பிரதிப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். புலி உறுப்பினர்களின் பெயர்கள் மறுசீரமைக்கப்பட்டபோது சுரேஷ் தமது பெயரை அமுதன் எனச் சுவீகரித்துக் கொண்டார்.

யுத்தப்படையணியின் முழு அளவிலான தளபதியாக உயர்த்தப்பட்ட அவர், கடந்த ஏப்ரலில் இடம்பெற்ற சண்டையில் காயமடைந்தார்.

துக்கு உதவியாளராகவும், செயலாளராகவும் பணிபுரிந்த 'சின்ன ரஞ்சித்' என்பவரே நெடியவனின் சிரேஷ்ட பேச்சாளராக இருந்தவர்.

புலிகளின் ஆதரவு வானொலியான சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு (ஐ.பி.ஸிக்கு) லண்டனில் தலைமை வகித்த ரஞ்சித் என்பவரில் இருந்து வேறுபடுத்துவதற்காக இவரது பெயருக்கு முன்னால் 'சின்ன' என்ற அடைமொழி சேர்த்துக்கொள்ளப்பட்டது. சின்ன ரஞ்சித்தும் முன்னர் ஐ.பி.ஸியில் பணியாற்றியிருந்தார். நெடியவனின் பேச்சாளராக உரையாடல்களில் பங்குபற்றிய சமயம் அவர் தம்மை 'மாறன்' என்று அழைத்துக்கொண்டார்.

இணக்கத்துக்கு வர இரண்டு தரப்பும் மறுத்ததால், பெரும் இழுபறி ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் புலனாய்வுப் பிரிவின் ஆள்கள், நெடியவன் - சின்ன ரஞ்சித் குழுவின் இறுக்கப்பிடி நிலையால் பொறுமை இழந்தது, சமரசப் பேச்சு முயற்சி முடிவுற்றது என அறிவித்தனர். கே.பிக்கு முழு ஆதரவு நல்கிய அவர்கள், நெடியவன் மற்றும் அவரது சதிக்கூட்டத்தின் பங்களிப்பின்றியே தமது செயற்பாட்டைத் தம்பாட்டில் தொடருமாறு கே.பியைக் கோரினார். ஆனால், கே.பியோ ஐக்கியம் எட்டப்படவேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தார்.

### உடன்பாடு

இறுதியாக ஓர் உடன்பாடு எட்டப்பட்டது. கே.பியின் தலை

# கே.பிக்கு எதிராக நெடியவன் குழு!

மட்டுமே புலம்பெயர்ந்தோர் என்ற நிதிப் பசுவிடமிருந்து தாராளமாகக் கறக்க முடியும் என நெடியவனும் அவரது சதிக்கூட்டத்தினரும் நம்பினர்.

வின் வெளிநாட்டு உளவுப் பிரிவு. அது, அப்போது கே.பியின் விரோதிகளைப் பலப்படுத்தியது.

ஆனால் குறிப்பிடத்தக்க மாற்றமாக, அந்த உளவுப்பிரிவு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு பிரபாகரன் இனிமேல் இல்லை என்பதை ஒப்புக்கொண்டது. கதிர்காமத்தம்பி அறிவழகன் என்ற பெயரில் உளவுப் பிரிவின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு, மறைமுகமாக கே.பியின் கருத்தை உறுதிப்படுத்தினார்.

அறிவழகன் முன்னர் புலிகளின் இராணுவ உளவுப் பரிவின் தலைவர் லெப்டினன்ட் கேணல் சாள்ஸ் அன்ரனியுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றியவர். அவர் இலங்கைக்கு வெளியே ஓரிடத்தில் உள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அத்தோடு மேலும், வெளிநாட்டில் உள்ள புலி ஆதரவாளர்களிடையே இந்த உளவுப் பிரிவினர் கருத்துக் கணிப்புத் திரட்டல் ஒன்றையும் மேற்கொண்டனர். பெரும்பாலான இந்த நேர்காணல்கள், புலிகளின் ஆரம்ப வருடங்களில் அவர்களுடன் நின்ற பழைய விசுவாசிகளுடனானவையாக அமைந்தன; பின்னைய வருடங்களில் புலிகளின் பதாகைக்குக்கீழ் திரண்டவர்களுடன் அல்ல.

அப்படி நேர்காணல் காணப்பட்டவர்களுள் பெரும்பாலானவர்களின் கருத்து, இந்தக் கட்டத்தில் இடைக்காலத் தலைவராகக் கே.பியே இருக்க வேண்டும் என்பதாகவே அமைந்தது.

வெளிநாட்டில் செயற்படும் புலிகளின் இன்னொரு பிரிவு 'கடற்புலிகள்' ஆகும். கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த கடற்புலிகளின் பிரதிநிதிகள் பல்வேறு நாடுகளிலும் சிதறுண்டுள்ளனர். இந்த உறுப்பினர்களும் தமது ஆதரவை கே.பிக்குக் காட்டியுள்ளனர்.

எனவே உளவுப் பிரிவும், கடற்புலிகளும் கே.பியை முழுப் பலமாக ஆதரித்தனர். இதைத் தொடர்ந்து அரசியல் பிரிவின் பல செயற்பாட்டாளர்களும் நிதானமாக நெடியவனை அலட்சியப்படுத்திக்கொண்டு கே.பியை நோக்கி நகரத் தொடங்கினர்.

### கலந்துரையாடல்

கே.பிக்கும் நெடியவனுக்கும் இடையில் நேரடி கலந்துரையாடலை மேம்படுத்தியதன் மூலம் புலனாய்வுப் பிரிவு தன்னுடைய பங்களிப்பை உயர்த்திக்கொண்டது. அது, கே.பிக்கும் அவரின் ஆதரவாளர்களுக்கும் மற்றும் நெடியவனுக்கும் அவரது அணியினருக்கும் இடையில் தொலைபேசி மூலம் பல சுற்று கலந்தாலோசனைக்கும் வழி செய்தது. பூகோளத்தின் பல்வேறு நேர மையங்களில் வதியும் - விரக்தியுற்ற நிலையில் இருக்கும் - புலிகளின் பல செயற்பாட்டாளர்கள் தங்களுக்கிடையில் தொலைபேசி மற்றும் 'ஸ்கைப்' ஊடாக நடத்திய தொடர் பேச்சுகள், கலந்துரையாடல்கள் காரணமாக பல நாடுகளில் இரவுநேர எரிபொருள் நீண்டநேரத்துக்கு எரிந்தது.

தங்கள் தலைவர் பிரபாகரனும் அவரின் ஏனைய சிரேஷ்ட உதவியாளர்களும் உயிருடன் இல்லை என்பதை நெடியவனும் அவரது குழுவினரும் முற்றாகத் தெரிந்துகொண்டதே இந்தக் கலந்துரையாடல்களின்போது முக்கியமாக வெளிப்பட்ட அம்சமாகும்.

இது, பெரும்பாலான ஆதரவாளர்கள் பிரபாகரன் உயிருடன் உள்ளார் எனத் தவறுதலாகவும் - அதே நேரம் நேர்மையான கருத்துடனும் - நம்பிக்கொண்டிருப்பதற்கு முற்றிலும் முரண்பாடான நிலையாகும்.

கே.பி. எதிர்ப்பு அணியினர் தனிப்பட்ட முறையில் உண்மையை ஒப்புக் கொண்டாலும் அம்பலத்தில் வேறுவிதமாக நடிக்கின்றனர். அதற்கு

### பொறுப்புகள்

கே.பிக்கு நெருக்கமான வட்டாரங்கள் வெளியிட்ட தகவல்களின்படி, பிரபாகரன் கடைசிக் காலகட்டத்தில் தமது சர்வதேச உறவுகளுக்குப் பொறுப்பான தலைவரிடம் இரண்டு பொறுப்புகளை ஒப்படைத்திருக்கின்றார் எனத் தெரிகின்றது.

ஒன்று - வன்னியில் இடம்பெயர்ந்தோரின் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்தி மேற்கொள்ளுதல்.

அடுத்தது - பிடிபட்ட அல்லது சரணடைந்த உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தவர்களை விரைந்து விடுவிக்க ஆவன செய்வது.

இந்த விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்காகத் தாம் பிரபாகரனுடன் மேற்கொண்ட இறுதி உரையாடல்களின் ஒலிப்பதிவுகளையும் கே.பி. போட்டுக் காட்டினார்.

விடயமறிந்த வட்டாரங்கள் வெளியிட்ட தகவல்களின்படி, தலைவரின் இந்த விருப்பை நிறைவு செய்வதற்கு சிறந்த வழி ஆயுதப் போராட்டத்துக்கு முற்றாக விடை கொடுப்பதுதான் எனப் பத்மநாதன் கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு வன்முறைகளைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்புவதன் மூலம் இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்தலையும், காவலில் உள்ள உறுப்பினர்களை விடுவிப்பதையும் விரைந்து மேற்கொள்வதற்கான வலிமையான நிலைமை ஒன்றை ஏற்படுத்த முடியும். அத்தோடு வன்முறையற்ற விடுதலைப் புலிகள் இயக்கம், தன்னுடைய 'பயங்கரவாதிகள்' என்ற நாமத்தைத் துடைத்தழித்து, மேற்குலகில் தனக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையையும் நீக்கச் செய்யலாம்.

பிரபாகரனும் அவரது சிரேஷ்ட தலைவர்களும் உயிரிழந்தமை பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப்பட்டு உரிய அஞ்சலிகள் அவர்களுக்குச் செய்யப்பட வேண்டும் என்றும் கே.பி. வலிமையாக வாதிட்டார்.

போராட்டத்துக்காகவும், இலட்சியத்துக்காகவும் தமது வாழ்நாளின் பெரும்பகுதியை அர்ப்பணித்த தங்களின் ஒப்புயர்வற்ற தலைவரினதும், ஏனைய தளபதிகளினதும் நினைவை கௌரவப்படுத்தித் தாங்கள் செய்யக்கூடிய குறைந்தபட்ச நடவடிக்கை இதுதான் என அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

"நாங்கள் அவர்களுக்குக் கடன்பட்டிருக்கின்றோம். இது எங்களின் புனிதமன கடமை." - இப்படி கே.பி. வலியுறுத்தினார் எனக் கூறப்படுகின்றது.

ஆயுதங்களை வாங்குவதற்கு மட்டுமே பெரும் தொகையான பணம் தேவைப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார் எனக் கூறப்படுகின்றது. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வருவதால் பெருமளவில் நிதி திரட்டல் அவசியமற்றதாகின்றது. விடுதலைப் புலிகளினால் வெளிநாட்டில் சட்டபூர்வமாக மேற்கொள்ளப்படும் வர்த்தகங்கள் மூலம் கிட்டும் நிதியும், புலிகளின் தீவிர பற்றாளர்கள் தாமாக விரும்பி வழங்கும் நிதி உதவியும் மட்டுமே புலிகளின் அரசியல் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கப் போதுமானவை என்பதையும் கே.பி. தெளிவுபடுத்தினார்.

"போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் இலட்சியம் மாறாது" - என்று 1987 ஓகஸ்ட் 5 ஆம் திகதி சுதுமலைக் கூட்டத்தின் உரையில் பிரபாகரன் சுட்டிக்காட்டியதைக் குறிப்பிட்ட கே.பி., இயக்கத்தின் கொள்கைப் போக்கிலும் அணுகு முறையிலும் ஒரு மாற்றத்தை வேண்டி நின்றார்.

உயர் வைத்திய வசதிக்காகக் கடல் வழியாக வெளிநாடு ஒன்றுக்கு விரைந்து கொண்டு செல்லப்பட்டார் அமுதன். காயத்திலிருந்து தேறிக் கொண்ட பின்னர் இன்னொரு நாட்டில் அவர் கால்ஊன்றினார். வெளிநாட்டில் உள்ள புலிகளின் மூலங்களுடன் தொடர்பாடல் உறவுகளை விரிவுபடுத்திய அவர், கே.பியின் தரத்தைப் பலப்படுத்துவதில் பயனுள்ள வழியில் பங்காற்றினார்.

மற்றவர் - அம்பாறை, மட்டக்களப்புக்குப் பொறுப்பான புலிகளின் இராணுவத் தளபதி கேணல் ராம்தான். அம்பாறை மாவட்டத்திலிருந்து வந்த இவர், கருணாவின் புரட்சிக்குப் பின்னரும் பிரபாகரனின் விசுவாசியாகவே உள்ளார்.

2007 இல் பெரும் எண்ணிக்கையான புலிகளின் உறுப்பினர்கள் கிழக்கிலிருந்து வெளியேறிய பின்னரும், நூறு முதல் நூற்றியைம்பது வரையான உறுப்பினர்கள் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டக் காடுகளில் கேணல் நகுலனின் தலைமையின்கீழ் தங்கியிருந்தனர். கடும் மோசமான - வலிமையான எதிர்ப்பு நிலவும் - சூழலிலும் கூட இந்த உறுப்பினர்கள் வலுக்குன்றந்த கெரில்லாத் தாக்குதல்களைத் தொடர்ந்த வண்ணம் இருந்தனர். வன்னி இராணுவப் பின்னடைவுகளுக்குப் பின்னர் இந்தப் புலி உறுப்பினர்களின் எதிர்காலம் சந்தேகத்துக்குரியதாயிற்று.

இராணுவப் போராட்டத்தைத் தொடர்வதைப் பற்றிப் பீற்றிக்கொள்ளும் வெளிநாட்டுப் பதவி மூலங்கள், அதற்கு நல்ல ஆதாரமாக கேணல் ராமும் அவரது குழுவினரும் உள்ளனர் என்றும் சுட்டிக்காட்ட விளைந்தனர்.

இந்த சுயநலம் மிக்க - பொறுப்புணர்வற்ற வாய்ப்பேச்சு வீரர்கள், புலம்பெயர்ந்தோரின் கற்பனைக் கோமாளித்தனத்துக்காக மேற்படி பரிதாபத்துக்குரிய கிழக்கு உறுப்பினர்கள் தோல்வியடைந்த யுத்தத்தில் தொடர்ந்து மோதவேண்டும் என விரும்புகின்றனர்.

ஆனால், கே.பியோ மதிப்பாய்ந்த முறையில் விரைந்து செயற்பட்டு, கைவிடப்பட்ட இந்த உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டார். கிழக்கு மாகாண உறுப்பினர்கள் கலைந்து செல்வதற்கு 'நம்பவே முடியாத' ஒரு தரப்பு மூலம் உதவிகள் வழங்கப்பட்டன. பெரும் எண்ணிக்கையானோர் வீடுகளுக்கும், வேறு பாதுகாப்பான இடங்களுக்கும் அனுப்பப்பட்ட அதேசமயம், ராம் மற்றும் அரசியல் பிரிவுத் தலைவர் தயாமோகன் உட்பட கிழக்கின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கிழக்குக் கடற்கரையோரம் வழியாக வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பப்பட்டனர். இரண்டாவது அணியும் சில நாட்கள் கழித்து வெளியேறியது.

விடுதலைப் புலிகளின் உள்ளகக் கலந்துரையாடல்களில் கே.பியை ஆதரிக்கத் தொடங்கினார் கேணல் ராம். பிரபாகரனின் மறைவை ஒப்புக்கொண்டு, கே.பியின் தலைமைத்துவத்தை ஏற்று, விடுதலைப் புலிகளின் கட்டமைப்பை மறுசீரமைத்து, அதன் செயற்பாட்டு உத்தியை மாற்றியமைக்க வேண்டும் என அவரும் சுரேஷுடன் சேர்ந்து வாதிடத் தொடங்கினார்.

கே.பிக்கு ஆதரவாக தமது சொந்தக் கையெழுத்தில் கடிதங்களை எழுதி விநியோகிக்கத் தொடங்கிய ராம், அக்கடிதங்களில் பிரபாகரன் தமக்குப் பின்னர் தமது இடத்தை கே.பியே பொறுப்பேற்கவேண்டும் என விரும்பினார் என்பதை கடைசிக் காலகட்டங்களில் அரசியல் பொறுப்பாளர் நடேசன் தம்மிடம் (ராமிடம்) தெரிவித்தார் என்றும் தெளிவாகக் குறிப்பிட்டார்.

### சின்ன ரஞ்சித்

நெடியவனுக்கும், கே.பிக்கும் இடையிலான உரையாடல்கள் வாரக் கணக்கில் தொடர்ந்தன. புலிகளின் முன்னாள் அரசியல் ஆலோசகரும், உத்தி வகுப்பாளருமான அன்டன் பாலசிங்கத்

மைத்துவத்தை ஏற்க நெடியவன் உடன்பட்டார். புலிகளின் கட்டமைப்பை மறுசீரமைக்கவும் இணக்கம் காணப்பட்டது.

அந்த இணக்கத்தின்படி, தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவு இனி பல



துறைகளை அல்லது செயலகங்களைக் கொண்ட தனி நிறுவனமாக மீள்கட்டமைப்புச் செய்யப்படும். கே.பி. அதன் 'தலைமைச் செயலாளர்' பதவியில் முழுப் பொறுப்பாளராக இருப்பார்.

அந்த நிறுவனத்தின்கீழ் மனித உரிமைகள், மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, மீள்கட்டமைப்பு, சமாதானத்தைக் கட்டி எழுப்புதல், அபிவிருத்தி, பேச்சுகள், அரசியல் நடவடிக்கைகள், கொள்கை வகுப்பு, பொதுசனத் தொடர்பாடல், ஊடகத் தொடர்பாடல், வள முகாமைத்துவம் போன்ற பல்வேறு துறைகளிலும் பணிகளை முன்னெடுப்பதற்காக தனித்தனிச் செயலகங்கள் பிரத்தியேகச் செயற்பாட்டு இலக்குடன் இயங்கும் என்றும் முடிவானது.

புலம்பெயர்ந்தோர் விவகாரத்துக்கான பிரிவுக்குப் பொறுப்பாக நெடியவன் என்று அழைக்கப்படும் சிவபரன் இருப்பார். அதன்படி புலம் பெயர்ந்த தமிழர்களின் பல்வேறு கிளைகள் மற்றும் நிறுவனங்களின் அன்றாட நிர்வாக விடயங்களுக்குப் பொறுப்பாக நெடியவன் இருப்பார். இது, அவருக்கு செயலதிகாரத்தையும், தன்னாளுகை வசதியையும் அளிக்கும் அதேசமயம் அவரும், புலம்பெயர்ந்தோரின் கிளை அமைப் புகளும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முற்றும் முழுதான தலைவராக கே.பியை ஏற்று அங்கீகரிக்கவேண்டும்.

புலிகள் இயக்கத்தின் பல்வேறு விடயங்களையும் கவனிப்பதற்காக நிறைவேற்றுக்குழு ஒன்றும் இருக்கும். இந்த நிறைவேற்றுக் குழுவின் இணைத் தலைவர்களாக இருக்கும் கேணல் சுரேஷும், கேணல் ராமும் தேவைப்படும் சமயங்களில் நிறைவேற்றுக் குழுவின் கூட்டங்களைக் கூட்டுவர்.

புலிகளின் தலைவருக்கும் ஏனைய சிரேஷ்ட தளபதிகளுக்கும் அஞ்சலி செலுத்துவது சம்பந்தப்பட்ட விடயம் நவம்பருக்குத் தள்ளிப் போடப்பட்டது. நவம்பர் 21 முதல் 27 வரையான மாவீரர் வாரம், நவம்பர் 27 ஆம் திகதிய மாவீரர் தினம், நவம்பர் 26 ஆம் திகதி வரும் பிரபாகரனின் பிறந்த தினம் ஆகியவை பெரிய ஏற்பாடுகளுடன் அனுஷ்டிக்கப்படும்.

பிரபாகரனையும், ஏனைய தலைவர்களையும் நினைவு கூர்ந்து பெரிய எழுச்சியுடன் இந் நிகழ்வுகளை புலம்பெயர்ந்தோரும் தமிழ் நாட்டில் உள்ள ஆதரவு சக்திகளும் முன்னெடுக்க வேண்டும் என கே.பி. விரும்புகின்றார்.

பிரபாகரனுக்கு மரியாதை அளிப்பதற்காக, கே.பி.தம்மை இயக்கத்தின் தலைவர் எனக் குறிப்பிடுவதற்கு மறுத்துவிட்டார். ஒரேயொரு 'தலைவர்' ஆகப் பிரபாகரன் மட்டுமே இருக்க முடியும் என்பதால் தாம் 'தலைமைச் செயலாளர்' ஆக விளிக்கப்படவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். 1949 இல் திராவிடக் கழகத்தில் (தி.க.) இருந்து அண்ணாத்துரை பிரிந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய போது இடம்பெற்றதற்கு இது ஒப்பானது.

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரவணைக்கும் போக்குடனான உளவியல் கல்வியூட்டலே ஆரோக்கியமான மாணவ சமுதாயத்தைத் தோற்றுவிக்கும்

வேகம் மிகுந்த உலகில் எல்லாமே வேகமாகி விடவேண்டும் என்று இன்றுள்ள நவீன சிந்தனைவாதிகளின் கொள்கை. மாற்றம் என்பது நிரந்தரமாகிவிட்ட இன்றைய உலகியல் ஒழுங்கில் கல்வித்துறையானது பல தள பரிமாண வளர்ச்சி கண்டு வருகிறது.

யாழ்.குடாநாட்டு மாணவர்களின் கல்வி நிலை உயர்ந்து செல்வதற்குப் பதிலாகத் தாழ்ந்து செல்வதற்குப் பிரதான காரணம் திணிப்பு முறைசார் கல்விமுறையே இங்கு காணப்படுகிறது.

எனவே மாணவர்களின் நுண்மதி ஆற்றலைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கேற்ப கல்விக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். அதனால் குறித்த மாணவர்கள் குறிப்பிட்ட துறைகளில் முன்னேறுவதற்கு வழி ஏற்படுத்தப்படும். இல்லையேல் அவர்களின் அறிவு மழுங்கடிக்கப்பட்டு கற்றலில் இடர்ப்பட நேரிடும்.

அண்மைக்காலத்தில் போர் மற்றும் சுனாமி அனர்த்தங்களால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைந்து காணப்படுகின்றன. குறிப்பாக தற்போது இடைத்தங்கல் முகாம்களில் வாழும் மாணவர்களின் கல்வி பாதிப்படைந்து அவர்களின் எதிர்காலம் சூனியமாக்கப்படுகிறது.

எம்மைப் பொறுத்தவரை போர் என்பது புதியதல்ல. பல தசாப்தங்களாகத் தொடர்ந்து போருக்குள் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். இடப்பெயர்வுகள் உடைமையிழப்பு மற்றும் சொந்த பந்தங்களின் உயிரிழப்பு, அவயவங்கள் இழப்பு என்பவை எமக்குப் புதியவை அல்ல.

இவற்றின் மத்தியில் வாழ்ந்து எமது மனம் புடம் போடப்பட்டுள்ளது. இதனால்தான் இன்றும் நாம் ஆரோக்கியமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளும் குறிப்பிடத்தக்களவு நடைபெற்று வருகின்றது.

இருப்பினும் மாணவப் பருவம் பின்னர் வரும் பாதிப்புக்களை உய்த்துணர முடியாத கட்டிளமைப் பருவம். ஆதலால் அவர்களின் உள விருத்தியை முன்னிறுத்தி அவர்களுக்கு கல்வி போதிக்க ஆசிரியர்கள் முன்வரவேண்டும்.

நடந்து முடிந்தபோரின் எச்சங்களாகப் பல பாரதூரமான உளத்தாக்கங்கள் மாணவர்கள் மத்தியில் உறங்கு நிலையில் காணப்படுகின்றன.

அவற்றை வெளிப்படுத்துவதற்கே சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கப் பொருத்த மானவர்கள் முன்வரவேண்டும்.

குறிப்பாக பாதுகாப்பற்ற உணர்வு, நிச்சயமற்ற உணர்வு, பய உணர்வு, எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கம் முதலிய பாதிப்புக்கள் மாணவர்கள் மத்தியில் காணப்படும். இதனால் மாணவர்கள் மத்தியில் உள நோய்கள் மற்றும் கற்றலில் இடர்ப்பாடுகள் பாடசாலை செல்ல மறுத்தல், கருத்தூன்றிக் கற்க இயலாமை, ஞாபக சக்தி குன்றல், நடத்தைக் கோளாறுகள், உணர்ச்சிகுழப்பங்கள் மற்றும் உறவுநிலையில் பாதிப்புக்கள் போன்ற பலவித பாதிப்புக்களை மாணவ சமூகம் எதிர்நோக்கலாம்.

இங்கு பாதிப்பு என்று கூறும்போது உளவியல் ரீதியாகப் பாதிப்படையும் ஒரு மாணவனிடம் பின்வரும் விளைவுகள் காணப்படலாம். அதாவது இயற்கையான சாதாரண எதிர்த் தாக்கம், அசாதாரண பாதிப்பின் அறிகுறிகள்.

நெருக்கீட்டுச் சம்பவங்களால் இயற்கையாக உண்டாகும் உடல் உள விளைவுகளும் உணர்ச்சிகளும் ஆரோக்கியத்தின் துலங்கல்கள். ஏனெனில் இவை நம்மை அபாயமான சூழலிலிருந்து விலக்கிக் கொள்ளவும் தற்பாதுகாப்பு முயற்சிகளை எடுக்கவும் மன சமநிலையைப் பேணவும் ஊக்குவித்து சூழலுக்கேற்ப இயைந்து வாழ்க்கையை தொடர உதவும்.

ஆனால் சிலநேரம் தீவிரமாக - தொடர்ச்சியா நீடித்திருந்தால் அவற்றின் தாக்கம் நம்மிடமுள்ள தாங்கும் சக்திக்கு அப்பாற்பட்டு பாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கும். எனவே இப்படியான நீடித்த உள பாதிப்புக்களால் மாணவர்களின் கல்வி பாதிப்படைய ஏதுவாகிறது.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் செயற்படவேண்டும். மாணவர்களின் விடயத்தில் ஆசிரியர்களின் செயற்பாடு தொடர்பில் உரிய கவனம் செலுத்த வேண்டும். ஆசிரியர்களுக்கு உரிய உளவியல் பயிற்சிகளை வழங்க வேண்டும். உளவியல் வாண்மை விருத்தி செய்யப்பட வேண்டும்.

ஆசிரியர்கள் ஒரு சமூகத்தின் முன்னோடிகள். மாணவர்களுக்கு ஏற்படக்கூடியஉளப் பாதிப்புக்கள், தாக்கங்கள், விளைவுகள் என்பவற்றை அறிந்து, அவதானித்துச் செயற்பட வைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். மாணவர்களின் உளச் செயற்பாடுகளை அறிந்து கொள்ளும் ஆற்றல் வளர்க்கப்படவேண்டும்.

குறிப்பாக உளரீதியாகப் பாதிப்படைந்த மாணவனிடத்தில் ஆசிரியர்களின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் எனப் பார்த்தால் பாதிக்கப்பட்ட மாணவனை இனங்கண்டு அவனுடன் அன்புடன் அணுகி, ஆதரவளித்து அவனுக்கு நடந்தவற்றைப் பகிர்ந்து வெளிப்படுத்த உதவுதல், பல சந்தர்ப்பங்களில் அம்மாணவனின் பாதிப்பை குறைப்பதற்கு உதவும்.

அடுத்து பாதிப்பைப் பற்றிய சிந்தனைகள், உணர்ச்சிகள் முதலியவற்றை அடக்கி அல்லது மறுப்பது இத்தாக்கங்களை உணராது இருப்பதற்கு வழிவகுக்கும். இதனால் மனவடு முதலிய உளப் பாதிப்புகள் ஏற்பட வழிவகுக்கும்.

எனவே மாணவர்களின் உணர்வுகள் வெளிப்படுத்த உதவ வேண்டும். இதனால் தாக்கத்தின் கடுமையை குறைக்கலாம். உணர்வுகளை வெளிப்படுத்தும் அதாவது மாணவர்களிடமிருந்து எவ்வாறு உணர்வுகளை வெளிப்படவைப்பது என்பது பற்றி வெளிப்படுத்தும் செய்முறைகளைக் கையாள வேண்டும். கடுமையாக உளரீதியாகப் பாதிப்படைந்திருந்தால் அதற்கேற்ற சிகிச்சை முறைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாணவர்களின் மனங்கள் பலதரப்பட்டவையாக இருப்பதால் அவர்களின் மனங்களைப் புரிந்து செயற்பட வேண்டும். இன்றைய சூழலில் குடும்ப, சமூக ஆதரவு மாணவர்களுக்குக் குறைவாகவே காணப்படுவதால் மாணவர்களின் மனங்கள் பாதிப்புற்று இருக்கும். எனவே மாணவர்களின் உள நலனில் விசேட அக்கறை காட்ட வேண்டும்.

இப்படியான செயற்பாடுகளின் மூலம் தான் மாணவர்களின் உளப் பாதிப்புக்களை இனங்கண்டு குணப்படுத்தலாம். இல்லையேல் உளப் பாதிப்புக்கள் தீவிரமடைந்து நிரந்தரமாகவே மனம் பாதிக்கப்பட ஏதுவாகின்றது.

இந்நிலையைக் கருத்திற் கொண்டு மாணவர்களின் உளநலனில் ஆசிரியர்கள் அக்கறையுடன் செயற்படவேண்டும்.

இவ்வாறான பிரச்சினைகளையும் கையாளும் முறைகள் சம்பந்தமான பொருத்தமான கருத்தரங்குகளை ஆசிரியர் சமூகத்தில் ஏற்படுத்துவதன்மூலம் மாணவர் மத்தியில், சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி தமது உள நலனில் தாமே அக்கறை கொண்டு செயற்பட வழிவகுக்கும். இல்லையேல் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் சூனியமாகி ஏடு தூக்கிப் படிக்கும் இன்றைய இளம் சந்ததி நாடுகாக்கும் தலைவராக மாறாமல் நாட்டைக் கெடுக்கும் சாத்தான்களாக உருவெடுப்பர்.

**ஆக்கம்: S.நதிபரன் (B.A.Hons)**

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை28

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் ஆன்மீக நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ''சுந்தரரும் தோழமை நெறியும்'' என்னும் தலைப்பில் ஆசிரிய ஆலோசகர் திருமதி பா.பாலசிங்கத்தின் சிறப்புச் சொற்பொழிவுஇடம்பெறும்.

* * *

நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தினர் நல்லூர்ப் பெருந்திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தெய்வீக இசையரங்கு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இன்றுசெவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு திருமுறைக் கச்சேரி இடம்பெறவுள்ளது. பாட்டு- ஆர்.திருஞானசம்பந்தா, வயலின் -கே.பத்மநாதன், ஹார்மோனியம்- ஜோன் கவாஸ், மிருதங்கம்- சதாவேல்மாறன், தென்திரா- செல்வன் வி.சிவமூர்த்தி. (201)




# நல்லூர் பெருந்திருவிழாக் கால உதயனின் சிறப்பம்சம்

### குறைதீர்ப்பாய் குமரேசா!

ஆதிசிவன் தந்த பாலன் - எந்தை
ஆறுமுகன் கந்த - வேலன்
ஜோதி மயில் வந்த கோலன் - சிவ
சுப்பிரமணியன் பவ காலன்
சிவ நாதனின் அனல்மேல் விழி
வழியாக வரும் ஒளியாகவே
கங்கை அனல் காற்றுத் தாங்கவும் - அந்த
வானமும் பூமியும் ஓங்கவும்
வடி வாகியே நடமாடியே
வலமே பெற விளையாடிய
நல்லூரில் அருள் தரவந்தவன்

சைவப்புலவர்செ.பரமநாதன்
தாவடி.

### உன்பார்வை பட்டால் தீவினை பறந்தோடும்

நல்லையில் ஆட்சி புரியும்
ஆண்டவனே
ஆறுபடை கொண்டவனே
நாடியே வந்தோம்
உன்னை
தந்திடுவாய் மனதில்
ஆறுதலை
பறந்தோடிவிடும் தீவினை
உன் பார்வை
பட்டாலே

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை.

### விடிவற்ற வாழ்வில் ஒளியேற்றி வைப்பாய்!

குறத்தி மகளை மணந்தவனே
குறைகள் பல தீர்ப்பவனே
நல்லை பதியில் வீற்றிருக்கும்
நல்லூர் கந்த சுவாமியே
அழகுத் தெய்வம் முருகா
விடியலின் தரிசன மயிலோனே
விடிவின்றி வாடும் எமக்கு
ஒளியேற்றி வாழ்வை உயர்த்திடப்பா

வே.அகிலேஸ்வரன்
மருதங்கேணி.

### வீதி வலம் வந்து அருள்கொடுப்பாய்...

நல்லைப் பதிதனிலே உறைபவனே
நலமோடு வாழ்வுதரும் இறையவனே
தேவர்சிறை மீட்டுவந்த வேலவனே
எங்கள்குறை தீர்த்திடும்நற் காவலனே!

அலங்காரக் கந்தனாய் நீ அடியவர்க்கு
சங்காரம் செய்பவனாய்க் கொடியவர்க்கு
சக்திதரும்வேல் கைத் தடியுனக்கு
பக்திசெயும் பக்தரில் பிடிப்புனக்கு!

சிங்கார வேலவனே சண்முகனே
ஓம்கார நாயகனே சுவாமிநாதா
வேண்டிக் கரமெடுத்தோமுன் பதியினிலே
வீதியுலா வந்து நம் குறை தீர்ப்பாய்!

இரா.ஷிவதர்சினி
யாழ்.பல்கலைக்கழகம்.

### துணையாகி எம் துயர் தீர்ப்பாய்!

உலகெங்கும் பல துன்பம் உன் தாளில் பேரின்பம்
எனவோடி வரும் போது கரம் நீட்டுவாய்!
சிலகாலம் அலைந்தோடி... சீரற்று முகம் வாடி
சிந்தைக்குள் உயிர்தேய அருள் கூட்டுவாய்!
கலகங்கள் வந்திங்கு கர்வங்கள் மிகும்போது
கண்ணோடும் சிரிப்போடும் தலை ஆட்டுவாய்!
விலகாதே துயரங்கள் என வேண்டி அழும்போது
கர்வங்கள் பொடியாகும் துணையாகுவாய்!

அருளோடு உறவாடி அன்புக்குள் சுழியோடி
உனைத் தேடி வரும் போது அழகாகுவாய்!
நெருப்பாகித் துன்பங்கள் நெஞ்சுக்குள் தணலாக
நேருக்கு நேர் வந்து நீர் ஊற்றுவாய்!
துரும்பாகிக் கிடக்கின்றோம் துன்பத்தில் அலைமோதி
துவளாமல் எப்போதும் நீ காக்கிறாய்!
அரும்பாகிப் பூவாகி நறுமணமும் தந்துமே
சருகாகும் வரை நீயும் துணை ஆகுவாய்!

உடலுக்குள் உயிராகி மலருக்குள் மணமாகி
உலகெங்கும் நீ உந்தன் முகம் காட்டுவாய்
கடலுக்குள் முத்தாகி கவினாகிக் கவியாகி
கலகங்கள் தீர்க்கின்ற சபை ஆகுவாய்!
திடமோடு நாம் வாழ திட்டங்கள் பல தந்து
தினந்தோறும் எமக்காக வழக்காடுவாய்
விடமான துன்பங்கள் நிறம் மாறி அமுதாக
விளையாட்டாய் நீ வந்து வினையோட்டுவாய்!

அஞ்சலி
சங்கத்தானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எச்.என்.பி. அசூரன்ஸ்சினரில் குழுக்களுக்கிடையிலான மே மாத விற்பனை மேம்படுத்தல் போட்டி நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.
வடக்கு, கிழக்கு வலய முகாமையாளர் மா.புவிராஜ் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், சிறந்த விற்பனை முகவருக்குரிய வெற்றிக்கிண்ணத்தை வடக்கு, கிழக்கு வலய முகாமையாளர் மா.புவிராஜ் ச.சந்திரசேகரத்துக்கு வழங்குவதை இரண்டாவது படத்திலும் வெற்றிபெற்ற அணித்தலைவர் கோ.பிரதீபன், உதவிக் குழு வெளிக்கள முகாமையாளர் பே.அலன்கியூமர், வடக்கு, கிழக்கு வலய முகாமையாளர் மா.புவிராஜ் மற்றும் வெற்றிபெற்ற அணி முகவர்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# யாழ்ப்பாணத்தில் ஒலிக்கும் 'லங்கா பெல்'

'லங்காபெல்' நிறுவனம் யாழ்ப்பாணத்தில் அதன் தள நிலையம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. நாட்டின் மிகப்பெரிய CDMA நிரந்தர இணைப்புச் சேவை வழங்குநர்களான 'லங்கா பெல்'லு ன் குடாநாட்டு மக்களுக்குத் தொடர்பை ஏற்படுத்தும் வகையில் இது அமைந்துள்ளது.

'லங்கா பெல்'லின் இந்தப் புதிய அலுவலகம் இல.303, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ளது. இங்கு தொலைபேசிகள், தொலைபேசி உதிரிகள், பட்டியல் கொடுப்பனவுகள், தொழில்நுட்ப உதவிகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

**விளம்பர விவரணம்**

இது பற்றிக் கருத்து வெளியிட்ட லங்கா பெல் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரசாந் சமரசிங்க 'யாழ்ப்பாண மக்களுக்கு தரத்தில் உயர்ந்ததும் செலவில் குறைந்தது மான தொலைத்தொடர்புச் சேவையொன்று அவசியமாகின்றது நாட்டின் ஏனைய பாகங்களில் வாழும் அல்லது கடல்கடந்து வாழும் தமது உறவினர்களுடன் மற்றும் இடம் பெயர்ந்து வாழும் உறவுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தவேண்டிய தேவையில் அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளனர்''

'லங்காபெல்' அவர்களுக்கு விரைவான, தெளிவான சேவைகளை வழங்கும். உள்ளூர் மற்றும் சர்வதேச நேரடி அழைப்புச் சேவைகள் என்பவற்றோடு இடையூறின்றி அகலப்பட்டை சேவையும் வழங்கப்படவுள்ளது'' என்றார்.

''நாட்டின் முற்று முழுவதும் இலங்கைக்கே சொந்தமான ஒரேயொரு தொலைபேசி சேவைக் கம்பனியான லங்காபெல் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த மக்களுக்குச் சேவை புரிவதை தனது கடமையாகக் கருதுகின்றது'' என்றும் அவர் மேலும் சொன்னார்.

'லங்காபெல்' CDMA மற்றும் அழைத்தல் சேவை மூலமான இலவச இணையத்தள சேவையானது தனிப்பட்ட வாடிக்கையாளர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தவர்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்று திரு சமரசிங்க அவர்கள் மேலும் சொன்னார்.

நாட்டில் நேரடி சர்வதேச தொலைபேசி அழைப்புச் சேவையை ஆகக்குறைந்த கட்டணத்தில் வழங்கும் 'லங்காபெல்'லின் ''டயல்15'' யாழ்ப்பாணத்தில் குறிப்பாக வரவேற்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். இந்த நேரடி அழைப்பு பெற்றுக்கொள்வதற்கு வாடிக்கையாளர் 15ஐ சுழற்றி குறியீட்டு எண் (00) நாட்டின் குறியீடு, பிராந்தியக் குறியீடு ள்னபவற்றோடு தொலைபேசி இலக்கத்தையும் அழைக்க வேண்டும்.

'லங்காபெல்' அண்மையில் ஏழு நாடுகளுக்கான அதன் கட்டணங்களை குறைத்தது. வாடிக்கையாளர்கள் தற்போது இந்தியாவிலுள்ள எந்தவொரு நிரந்தர இணைப்புக்கு அல்லது நடமாடும் தொலைபேசிக்கோ நிமிடத்துக்கு ஏழு ரூபா கட்டணத்தில் அழைப்பை மேற்கொள்ளலாம். விரைவில் இந்தக் கட்டணமும் குறைக்கப்படவுள்ளது.

இது தவிர அவுஸ்திரேலியா, கனடா, இத்தாலி, ஜப்பான், ஐக்கிய இராச்சியம், மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் ஏழு ரூபா கட்டணத்தில் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்ளலாம்.

தொலைத்தொடர்புத் துறையில் முற்று முழுதாக இலங்கைக்கு மட்டுமே சொந்தமான ஒரே கம்பனியான 'லங்காபெல்', சுமார் 12 லட்சம் வாடிக்கையாளர்களைக் கொண்ட நிரந்தர தொலைபேசி இணைப்புக்களை வழங்கும் இரண்டாவது பெரிய நிறுவனம் ஆகும். 1997ஆம் ஆண்டு 150 மில்லியன் அமெரிக்க டொலரை ஆரம்ப மூலதனமாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்நிறுவனம் இலங்கையில் CDMA தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்த முன்னோடி நிறுவனமாகும். இலங்கையின் தொலைத்தொடர்பு சந்தையின் சகல பிரிவுகளுக்கும், சகல புவியியல் பிரதேசங்களுக்கும் தனது சேவைகளையும் தொழில்நுட்பத்தையும் விரிவுபடுத்துவதற்காக 'லங்காபெல்' தொடர்ந்தும் கணிசமான முதலீடுகளை செய்துவருகின்றது. *


**SECOUND YEAR DEATH ANNIVERSARY**



**Mrs. SAROJA KANDASAMY**
(Retired Teacher, Uduvil)

08 * 06 * 1945 — 21 * 07 * 2007

GOD OUR FATHER
Tranquil rest grant untoher. O' Lord
And let perpetual light shine upon her
May her soul rest in eternal peace
You are the dream that will
live in our hearts forever.

UDUVIL. Husband Kandasamy.

(86977)


# வலிகாமம் வலயப் பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,ஜூலை28

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற தமிழ்மொழி தினப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விவரம் வருமாறு:

***விசேட கூத்து*** - பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

***வடமோடி*** - ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.

***தென்மோடி*** - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, பண்டத்தரிப்பு பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்.

***சிந்துநடை*** - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி.

***இசை நாடகம்*** - இணுவில் மத்திய கல்லூரி.

***பிரிவு I (எழுத்து)*** - ர.அபிராமி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஜெ.சமீனா (ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம்), த.சுரபிகா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி).

***பிரிவு II (கட்டுரை)*** - ச.பாகிசா (மாதகல் சென். யோசேப் வித்தியாலயம்), ஸ்ரீ. சாளினி (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), அ.சிந்துஜா (தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை).

***பிரிவு III (ஆக்கம்)*** - தே.காயத்திரி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), அ.ஹரிகரன் (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), உ.லதுசா (தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை).

***பிரிவு IV (கட்டுரை)*** - சி.துளசிகா (சுங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம்), வி.பானுஜா (மானிப்பாய் சென்.ஆன்ஸ் வித்தியாலயம்), வ.யஸ்விகா (தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை).

***பிரிவு V (கட்டுரை)*** - ஜெ.துளசிகா (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), சு.சுஜிதா (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி), இ.சுகன்யா (மல்லாகம் மகாவித்தியாலயம்).

***பிரிவு IV (இலக்கணப் போட்டி)*** - அ.ரதீபனா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), இ.சாம்பவி (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), த.வெங்கடேஸ்வரன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி).

***பிரிவு V (இலக்கணப் போட்டி)*** - ம.நிருசா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ப.மயூரி (சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம்), ம.புலேந்திரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

***பிரிவு V (திறனாய்வுப் போட்டி)*** - செ.பிரதர்சனா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), த.பார்த்தீபன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), வி.அன்ரனி (மானிப்பாய் இந்துக்தல்லூரி).

***குறுநாடக ஆக்கம்: பிரிவு IV*** - சி.கார்த்திகா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), அ.ஆன் அனோபியா (மானிப்பாய் சென்.ஆன்ஸ் வித்தியாலயம்), மு.வாசுகி (மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்).

***பிரிவு V*** - ம.உதயதர்சினி (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), இ.பிரமிளா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ச.சிந்துஜா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி).

(203-86)

(தொடரும்)


**45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

தோற்றம் 09 * 06 * 1924



மறைவு 14 * 06 * 2009

**திருமதி செல்லையா பாறுப்பிள்ளை**

எமது தாயாரின் மரணச்செய்தி அறிந்து வருகை தந்து உதவிகள் புரிந்தவர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (28.07.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய தபாற்கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். குடும்பத்தினர்

(3331)



**31ஆம் நாள் நினைவஞ்சலி**

**திருமதி மகாதேவா தனபூபதி**

மணம் மகிழ 10*01*1949



மணம் நெகிழ 28*06*2009

என்ன பாவம் நாங்கள் செய்தோம்
அம்மா நீ எங்களை விட்டு நீண்ட தூரம் சென்றுவிட்டாய் எங்களை
ஆதரிப்பதற்கு ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உன் அன்புக்கும் அரவணைப்புக்கும் ஈடாகுமா?
அம்மா உன்னை நினைத்து நாங்கள் தினமும் துடிக்கிறோம்
நீ எப்போது அம்மா எங்களிடம் வருவாய்.

இன்று (28.07.2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மகன் - தனராஜ்
(இ.போ.சபை காரைநகர் சாலை).

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(87355)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிகளில் இடம்பெற்ற நிகழ்வுகளில்....



மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளையின் சிசு உதான அலகு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் திறந்து வைக்கப்பட்டது.

படத்தில் அதிபர் கே.ஆர்.இராஜசேகரம் மங்கள விளக்கேற்றுகிறார். கிளை முகாமையாளர் ரி.சிவகுமாரன், பிரதி அதிபர் எஸ்.சிவானந்தம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



வவுனியா அருணாசலம் நலன்புரி முகாமில் உள்ள வலுவிழந்த பிள்ளை ஒன்றுக்கு இலங்கை வங்கியின் தலைவர் காமினி விக்கிரமசிங்க முச்சக்கரவண்டி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். பிரதிப் பொது முகாமையாளர் திருமதி கே.குலதுங்க, வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.



இலங்கை வங்கி சேமிப்பு பிரிவில் கடமை புரிந்த மாணவ வங்கி உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட பாடசாலைச் சேமிப்புப் பிரிவு தலைமை அலுவலக இணைப்பதிகாரி ஆர்.சுதாகரன் மாணவனுக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



இலங்கை வங்கியில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட "ஸ்மாட் இன்வெஸ்ரா" கணக்கு சேகரித்தலில் சாதனை படைத்த கிளைகளின் முகாமையாளர்கள் கொழும்பில் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் மானிப்பாய் இலங்கை வங்கியின் மேற்றரக் கிளை முகாமையாளர் க.இலட்சுமண சர்மா இலங்கை வங்கியின் பொது முகாமையாளரும் பிரதம சட்ட அதிகாரியுமான மு.கிரிதரனால் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (100)



மக்கள் வங்கியின் முழு உரித்தான "பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி" தனது துணைக்கிளை அலுவலகம் ஒன்றை அண்மையில் வவுனியா மக்கள் வங்கி, பிராந்திய அலுவலகத்தில் திறந்து வைத்தது. இதன்போது மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் த.க. ஆனந்தராசா மங்கள விளக்கேற்று வதையும் அருகில் ஊழியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# செய்திச்சரம்..... செய்திச்சரம்.....

## சுழிபுரம் கிழக்கில் மாதர் சங்கம் அமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

சுழிபுரம் கிழக்கில் அண்மையில் புதிதாக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. சங்கத்தின் மூலம் (பெண்களுக்கான) அங்கத்தவர்களுக்கு சுயதொழில் முயற்சிகள் மற்றும் இலவச கல்விச் சேவைகள், கடன் உதவிகள் போன்ற சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இச்சேவைகள் அப்பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு வழிகாட்டியாக அமையவுள்ளன. (201-119)

## அனுமதிப் பத்திரமின்றி வீடுகளில் கள் வைத்திருந்தவர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

அனுமதிப் பத்திரமின்றி வீடுகளில் கள் வைத்திருந்த மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 13 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தால் தென்மராட்சிப் பிரதேசத்தில் கைதடி, வரணி, மிருசுவில் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையில் அகப்பட்ட மூவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வரணி வடக்கைச் சேர்ந்த நபருக்கு 8 ஆயிரம் ரூபாவும் மிருசுவில் வடக்கைச் சேர்ந்த நபருக்கு 3 ஆயிரம் ரூபாவும் கைதடி மத்தியைச் சேர்ந்த நபருக்கு 2 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் முறையே 8 மாதம், 3மாதம், 2 மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (201-207)

## சுயதொழில் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்தோர் விவரங்களை அனுப்புமாறு அறிவுறுத்து

சித்தங்கேணி, ஜூலை 28

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்துக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலிருந்து ஊனமுற்றோருக்கான சுயதொழில் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்தவர்கள் அவர்கள் மேற்கொள்ளும் சுயதொழிலை எழுத்து மூலம் விரைவாகச் சமர்ப்பிக்குமாறு சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (201-112)

## உள்ளூராட்சி வார விளையாட்டு நிகழ்வு

நாவற்குழி, ஜூலை 28

உள்ளூராட்சி வார நிகழ்வை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேசசபை தமது எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றிக்கிடையே ஏழு பேர் கொண்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டம் மற்றும் பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இப் போட்டியில் பங்குகொள்ள விரும்பும் சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் கொடிகாமத்திலுள்ள சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் க.சிவராஜலிங்கம் கேட்டுள்ளார்.

போட்டிகள் நடைபெறும் காலம் இடம் என்பன பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203-288)

## மின்தடையால் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

கோப்பாய், நீர்வேலிப் பிரதேசங்களில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மின்சாரம் அதிகாலை மற்றும் இரவு நேரங்களிலும் அதிகமாகத் தடைப்படுகின்றது.

மின்விநியோகம் அடிக்கடி தடைப்படுவதால் மேற்படிப் பிரதேசங்கள் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.

மின்தடையால் இரவில் கல்வி கற்கும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதனைவிட மின் விநியோகம் தடைப்படும் சமயம் பார்த்து திருடர்களும் மறுபக்கத்தில் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர் என அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (201-224)

## இராமாவில் நலன்புரி முகாமில் காத்தவராயன் கூத்து நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 28

தென்மராட்சி இராமாவில் இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாமில் கடந்த வாரம் காத்தவராயன் கூத்து நாடகம் இடம்பெற்றது.

நலன்புரி முகாமில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களில் கலைஞர்கள் ஒன்று சேர்ந்து பயிற்சி செய்து இந்தக் காத்தவராயன் கூத்து நாடகத்தை மேடையேற்றினர்.

முகாம் பகுதியில் மேடைகள் அமைத்து அழகுற காட்சிகள் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வை அங்குள்ள பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

இதேவேளை படையினரும் நிகழ்வைப் பார்வையிட்டதுடன் அதனை வீடியோப் பதிவும் செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (201-131)

## இலகு வேலைத்திட்டத்தின் கீழ் நுணாவில் மத்தியில் வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

தென்மராட்சிப் பிரதேச செயர் பிரிவில் உள்ள நுணாவில் மத்தி (ஜே/321) பிரிவில் நலிவுற்றோர் நிவாரண இலகு வேலைத் திட்டத்தின் கீழ் அப்பகுதியில் உள்ள வீதிகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பிரிவில் உள்ள வேலாயுதம் வீதி, கத்தாப்படி வீதி, ஐயர் வீதி, வீரபத்திரர் வீதி, வனுவில் வீதி, வேலாயுதம் பிள்ளை வீதி ஆகிய வீதிகள் திருத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரிவு கிராம அலுவலர் திருமதி ச.சுந்தரலிங்கம் மேற்பார்வையில் 50 இற்கு மேற்பட்டோர் 11 தினங்கள் இப்பணிகளில் ஈடு பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (201-207)

## ஏ-9 வீதியூடாக மாநகரசபை தார் பரல்கள் எடுத்துவர நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்.மாநகரசபை ஏ-9 வீதியூடாக தார் பரல்களை எடுத்து வருவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது தரைப்பாதையூடாக வாகனப் போக்குவரத்து நடைபெறும்பட்சத்தில் ஒரு தொகுதி தார் பரல்களை பாரவூர்திகள் மூலம் எடுத்துவருவதற்கு மாநகரசபை ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

மாநகரப் பகுதியில் உள்ள வீதிகள் பலவற்றை புனரமைப்புச் செய்வதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (201-224)

## தென்மராட்சிப் பிரதேசத்தில் படையினரால் மரக்கன்றுகள் நடப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 28

தென்மராட்சிப் பகுதியில் படையினரால் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன.

கண்டி வீதி, கொடிகாமம் -பருத்தித்துறை வீதி, கனகம்புளியடிச் சந்தி உட்படப் பல இடங்களில் நிழல் மரக்கன்றுகளைப் படையினர் நட்டு வருகின்றனர்.

நடப்படும் நிழல் மரக்கன்றுகளைப் பாதுகாத்து கூடுகளையும் அமைத்து வருகின்றனர். (201-131)

## சைக்கிளைத் திருட முயன்றவர் பிடிபட்டார்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்.நகரப் பகுதியில் பூட்டிய நிலையில் இருந்த சைக்கிள் ஒன்றைத் திருட முயன்ற திருடன் ஒருவன் பொதுமக்களிடம் வகையாக மாட்டிக்கொண்டான்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை பிற்பகலில் கஸ்தூரியார் வீதியில் இடம்பெற்றது.

சைக்கிளைக் களவாக எடுத்துச் செல்ல முற்பட்ட சமயம் சம்பந்தப்பட்ட திருடனை அங்கு நின்ற மக்கள் துரத்திப் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்தனர். (201-224)


## விபத்தில் மாணவனுக்கு கால் முறிந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 28

கொடிகாமம், நாவலடிப் பகுதியில் மோட்டார் சைக்கிள்-மிதிவண்டி விபத்தில் பாடசாலை மாணவனுக்கு கால் முறிந்தது.

விபத்தில் காயமடைந்த ரி.தனேஸ்குமார் (வயது 12) என்னும் மாணவன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (201-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கரவெட்டிப் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட கணனி வன்பொருள் பயிற்சி நெறியில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.
கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், கரவெட்டிப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் சி.ஸ்ரீபாஸ்கரன் ஆகியோர் பயிற்சி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குகின்றனர்.
பயிற்சியாளர்களுடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பயிற்சி ஆசிரியர், திட்ட உதவியாளர்கள் ஆகியோரும் காணப்படுகின்றனர். *(படங்கள்: சுந்தா)*




சித்தங்கேணி, ஜூலை28

நீர்வேலி வாய்க்கால் தரவை மூத்த விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திரு விழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (201-112)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 28

மிருசுவில் படித்த மகளிர் திட்ட ஞான துர்க்கா அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஆறாம்திகதி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும். (204-207)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 28

சரவணை தேவபுரம் கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 7.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (204-167)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 28

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வரலட்சுமி விரதத் திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது.

வரலட்சுமி விரத காப்பு அணிய விரும்புவோர் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 28

சாவகச்சேரி வாரிவளநாத சிவன் ஆலயத்தில் வரலட்சுமி விரதத் திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும்.

வரலட்சுமி விரத காப்பு அணிய விரும்புவோர் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (201-207)

* * *

வடமராட்சி, ஜூலை 28

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 22ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-236)

# சுற்றுலாத்துறை முதலீடு குறித்து ஆராய அமெரிக்க தூதுக்குழு இலங்கை விஜயம்

கொழும்பு, ஜூலை 28

வடக்கு, கிழக்கில் சுற்றுலாத்துறை சார்ந்த முதலீடுகளை மேற்கொள்வது குறித்து பரிசீலிப்பதற்காக அமெரிக்கத் தூதுக் குழு ஒன்று ஐந்துநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளது.

இத்தூதுக்குழுவுக்கு ஜேக் விகோடா என்ற அமெரிக்கமுதலீட்டாளர் தலைமை தாங்கின்றார்.

இவர்கள் இலங்கையில் தங்கியிருக்கும் நாள்களில் திருகோணமலை, அறுகம்குடா ஆகிய இடங்களுக்கு நேரில் சென்று முதலீடு செய்வது தொடர்பாக ஆராய்வார்கள். தற்போது அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய உல்லாசப் பிரயாண ஹோட்டல்களை இணங்கண்டு அவற்றை நட்சத்திரக் ஹோட்டல்களாகப் புனரமைப்புச் செய்வது குறித்து இக் குழு பரிசீலிக்கும். குறித்த குழுவினர் பிரதமர் ரட்ண சிறி விக்கிரம நாயக்கவை பிரதமரின் அலுவலகத்தில் சந்தித்து உரையாடியுள்ளனர். பிரதமர் ரட்ண சிறி விக்கிரம நாயக்க வடக்கு, கிழக்கில் ரின் மீன் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது சிறந்த முதலீடாக அமையும் என்று அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். பிரதமர் அங்கு மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு.

வடக்கு, கிழக்கில் சுதந்திரமான கடற்றொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் ரின்மீன் தொழிற்சாலைகளை வடக்கு, கிழக்கில் ஆரம்பிப்பது மிகவும் சிறந்த முதலீடாகும். இலங்கையில் மேற்குலக நாடுகளை விட வளங்கள் அதிகம். சிறந்த காலநிலையும் உண்டு. பயங்கரவாதம் ஒன்றே முதலீட்டாளர்களுக்குத் தடையாக இருந்தது. அது தற்போது ஒழிக்கப்பட்டுவிட்ட்து. 30 வருடங்களின் பின் வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தியானது நாட்டின் அபிவிருத்திக்கு சிறந்த அடித்தளமாக அமையும் என்றார்.






உ
சிவமயம்

தெல்லிப்பழை மேற்கு பன்னாலையம்பதி
**சிவனடியார் தொண்டர் மடாலயம் - 2009**
அஷ்டோத்திர (108) சங்காபிஷேகமும், சுந்தரமூர்த்திநாயனார்
குருபூஜையும், மடஸ்தாபகர் வீ.இளையதம்பி அவர்களின்
திருவுருவப்படம் திரைநீக்கமும் சிறப்புவிழாவும்

ஆடிச்சுவாதி நன்னாளில் (29.07.2009) புதன்கிழமை காலை 8.30 மணியளவில் ஆரம் பமாகி அபிஷேக ஆராதனையுடன் கலைநிகழ்வும் சுந்தரர் பதிகம் ஓதுதலும் நடைபெறும். தில்லைக்கூத்தனின் திருவருளோடு, அன்னதான வைபவத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைத்து அடியார்களை வேண்டிக்கொள்கின்றோம்.

பிரதமகுரு: கிரியாதிலகம் சிவஸ்ரீ சதா.சுகுமாரக்குருக்கள் (பிரதமகுரு-திருநெல்வேலி சிவன்கோயில்)
ஆலயகுரு: பிரம்மஸ்ரீ ம.மகேந்திரசர்மா (வருத்தலம் கற்பக விநாயகர் ஆலய ஆதீனகர்த்தா)
கூட்டுப்பிரார்த்தனை: திருவெம்பாவைச்சபை (பன்னாலை-சிவபூதவராயர்)
சைவச்சொற்பொழிவு: சைவநெறித்திலகம், சைவப்புலவர் க.நித்தியதசீதரன் (இந்துதர்மாசிரியர்)

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

சிவனடியார் தொண்டர்பணியில்,
தர்மகர்த்தாசபை.

(87372)





## வணிகவியல் துறைக்கு தெரிவாகிய யாழ்.மாணவனின் வேண்டுகோள்

இதுவரை காலமும் யாழ்.பல்கலைக்கழகம் முகாமைத்துவம், வணிகவியல் என இரு பீடங்களுக்கும் மாணவர்களை உள்வாங்கி வந்தது. ஆனால் இம்முறை முகாமைத்துவ கற்கை நெறிகளுக்கு 300 மாணவர்களை உள்வாங்க உத்தேசிக்கப்பட்டதாக கூறப்பட்டு யாழ்.மாவட்டம் உட்பட 126 மாணவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வணிகக் கல்விக்கான Z வெட்டுப்புள்ளி உள்ளடங்கலாகவே முகாமைத்துவக் கற்கைக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்பதே பொதுவாக எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாறு இடம்பெறவும் இல்லை. அதிகமான மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படப் போவதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில் மாணவர்களாகிய நாம் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது ஓர் கற்கை நெறிக்கு உள்வாங்கப்படுவோம் எனும் நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் எமது அடுத்த நடவடிக்கைகளாகிய (பரீட்சைக்கு தயார்படுத்தல், பரீட்சைமீள எடுத்தல்) ஆகிய செயற்பாடுகளினை மேற்கொள்ளவில்லை. ஆனால் தற்போது வணிகவியல் கற்கை நெறிக்காக களனி, கொழும்பு, கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளோம். எதிர்பாராத செயற்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களாகிய நாம் எமது கற்கை நெறியினை மேற்காட்டிய பல்கலையில் மேற்கொள்ளத் தயாராகவில்லை. இந்நிலையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் வணிகவியல் கற்கை நெறியினைத் தொடர்வதற்கு சம்பந்தப்பட்ட கல்விச் சமூகத்தினர் ஏற்பாடுகள் செய்து தரப்படவேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட வணிகவியல் கற்கை நெறிக்கு தகுதியுடைய மாணவராகிய எமது எதிர்பார்ப்பாகும்.

இதற்கான பதிலை கல்விச் சமூகத்திடம் இருந்து எதிர்பார்க்கிறோம்.

*யாழ்ப்பாணம்.* வசந்தா.

## 'உ' அட்டை உள்ளவர்களின் உள்ளக் குமுறல் இது

கடந்த வருடம் (2008) பிற்பகுதியில் ''நிஷா'' புயல் அனர்த்தம் கோரத் தாண்டவமாடி இருந்தவற்றை யெல்லாம் அழித்து விட்டு மறைந்து பல மாதங்கள் கடந்து விட்ட போதிலும் அதனால் ஏற்பட்ட பாதிப்பின் வடுக்கள் இன்னும் மறையவில்லை.

நிஷா அழித்த போது ஏழை, பணக்காரன் என்று பார்க்கவில்லை. உள்ளவன், இல்லாதவன் என்று பார்க்கவில்லை ''உ'' காட், ''இ'' காட் என்றும் பார்க்கவில்லை. சீறி வந்த இயற்கை அனர்த்தம் யாவரையும் சமனாகவே மதித்து இழப்புகளை உண்டாக்கியது.

இந்த இழப்புகளின் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு (''உ'' அட்டை என்கின்ற உதவாத அட்டை வைத்திருப்பவர்கள்) தவிர ஏனைய சகலருக்கும் அரச,மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் மூலமாக பெருமளவு உத்விகள் கிடைத்தன. இவ் உதவிகள் கட்டாயம் அவர்களுக்கு கிடைக்க வேண்டும். ஆனாலும் ''நிஷா'' வின் அழிவுகளிலும் கூட ''உ'' அட்டை'' வைத்துள்ளவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். சில பிரதேசங்களில் உள்ள சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிவாரணமாக அரிசி, சீனி மாவு வழங்கிய போதிலும் கூடுதலான சங்கங்கள் ''உ'' அட்டை உடையவர்களை ஒன்றுக்கும் உதவாதவர்களாக மதித்து நிவாரணத்தைக் கூட வழங்க மறுத்து விட்டன.

''உ'' அட்டை உடையவர்களின் இழப்புகளை யாரிடம் சொல்லி அழுவது. இந்த நிலையில் தற்போது உத்தியோகத்தர்களுக்கு நிஷாவின் பாதிப்புக்காக ஒரு மாத அடிப்படைச் சம்பளத்தை கடனாக அதுவும் பத்து மாதங்களில் அறவிடக்கூடியதான நிபந்தனையில் வழங்கப்படுகின்றது.

இதில் எமது கோரிக்கை என்னவெனில் பாதிக்கப்பட்ட ''உ'' அட்டை உடையவர்களுக்காவது இவற்றை இலவசமாக வழங்கினால் என்ன? அழிவுகள் உண்மையில் எல்லோரையும் பாதித்த விடயமாகும். அப்படி இருக்கும் போது இந்த ஒரு மாத அடிப்படைச் சம்பளத்தை பத்து மாதங்களில் அறவிட்டு எடுப்பது ஏற்கக்கூடியதா?

அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் இப்போது யாழ்ப்பாணத்துக்கு வந்து போகின்றனர். போரினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்ட ''உ'' அட்டை உடையவர்களிற்கு எந்த விதமான இழப்பீட்டு நிதியும் வழங்கப்படாத பாரபட்சமான நிலையில் உள்ள ''உ'' அட்டை உயைடவர்களின் நிலைமைகளை அமைச்சர்களுக்கு எடுத்துச் சொல்லி உதவுவதற்கு உயர் அதிகாரிகள் முன்வருவார்களா?

தற்போது வழங்கப்பட்டுவரும் ஒரு மாத அடிப்படைச் சம்பளத்தை இலவச நிவாரணமாகவோ அல்லது, அச் சம்பளத்தை 10 மாதங்களில் அறவிட்டு எடுப்பதை விட்டு இரண்டு வருட கால அடிப்படையில் கழித்து எடுத்தால் ''உ'' அட்டை உடையவர்களின் தலைப்பாரம் சற்றுக் குறைய வாய்ப்புகள் வரலாம்.

*பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் சார்பில்*
ப. உதயகுமார்.

## மூட நம்பிக்கை இன்னமும் ஒழிந்த பாடில்லையே!

சென்னை பொதிகை தொலைக்காட்சியில் சில நாள்களுக்கு முன்பே - 22.07.2009 அன்று சூறாவளி வரவாய்ப்பில்லை என்றும் வீண் வதந்திகளை நம்பவேண்டாம், மீன்பிடிப்பவர்கள் கடலுக்குச் செல்லலாம் என்றும் தெரிவித்தார்கள். சூரியன், சந்திரன், பூமி போன்றவை நேர்கோட்டில் வரும்பொழுது சூரியகிரகணம் தோன்றுகின்றது. இது காசி மற்றும் அதனை அண்டியுள்ள மாநிலங்களில் தெரியவாய்ப்புண்டு என்றும் தெரிவித்திருந்தனர். 21ஆம் நூற்றாண்டில் வாழும் நாம் வீண்வதந்திகளை நம்பி ஏமாறுகின்றோம் என்பது ஒரு பெரிய புதிராகவே உள்ளது. பாம்பு சூரியனை விழுங்குவதாக இருந்த மூடநம்பிக்கை தகர்த்து எறியப்பட்டுவிட்டது. சுவாமி விவேகானந்தர் இந்த கோள்களுக்கு நான் ஒரு நாளும் செவிசாய்க்கமாட்டேன் என்று உறுதிபடக் கூறியிருக்கின்றார். படித்தவர்கள் கூட இந்த வதந்தியை நம்பியிருந்தார்கள் என்பதை அறிய வெட்கமாக இருக்கிறது.

சுவாமி சித்ரூபானந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
வேற்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராய் வசந்த மண்டபத்தில் இருந்து எழுந்தருளி வருவதையும் பெரும் எண்ணிக்கையான பக்தர்களின் அரோகரா கோசத்துடன் கொடியேற்றம் இடம்பெறுவதையும் முதல் இரண்டு படங்களிலும் சுவாமி உள்வீதியுலா வருவதையும் பக்தர்கள் அங்கப் பிரதிஷ்டை செய்வதையும் அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன், நேசன்)

# சுழிபுரம் பிரதேசத்தில் பொலித்தீன் பாவனைக்கு முற்றாகத் தடை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவுறுத்து

## ஆலோசனைக் கூட்டத்தில் பிரதேச சபைச் செயலாளர்

யாழ்ப்பாணம்,ஜூலை28

சுழிபுரம் பிரதேச செயலர் பிரிவில் பொலித்தீன் பாவனைக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறுபவர்கள் மீது பிரதேச சபையின் கட்டளைச் சட்டத்தின்கீழ் தண்டப்பணம் அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் இது அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

சுழிபுரம் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி இவ்வாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

வலி.மேற்குப் பிரதேச சபையின் ஆலோசனைக் கூட்டம் பிரதேச சபை மண்டபத்தில் சபைச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு - கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் வாழ்வாதாரத்தை உயர்த்தும் அபிவிருத்திகள் முன்மொழியப்படவுள்ளன. அதற்கான திட்டங்கள், அபிவிருத்திகள் இருப்பின் அதனை முன்வைக்க பொதுஅமைப்புகள், ஆலோசனைப் பிரதிநிதிகள் முன்வரவேண்டும்.

சங்கானைச் சந்தைக்கு அருகில் அல்லது ஏதாவது பொருத்தமான இடத்தில் வாழைக்குலைச் சங்கம் அமைக்க நிதி கிடைத்துள்ளது.

அதற்குப் பொருத்தமான காணி கிடைக்குமாயின் அவ்வேலைத் திட்டத்தினை உடன் ஆரம்பிக்கலாம்.

மேலும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம் ஆகிய பகுதிகளில் 3 பொது நூலகங்கள் அமைக்கப்படவுள்ளன.

மேலும் எமது பிரதேச சபைக்குட்பட்ட அராலி - காக்கைதீவு வெளியில் திண்மக்கழிவு - மலக்கழிவுகளினால் எமது பிரதேசம் உட்பட அயல் பிரதேசங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்படி விடயம் தொடர்பாக யாழ்.அரசாங்க அதிபர், மானிப்பாய் மற்றும் நல்லூர் பிரதேச சபைகளின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எமது சபைக்குட்பட்ட திண்மக்கழிவுகள் பொருத்தமான தொழில்நுட்பத்தின் கீழ் சூழல் மாசு ஏற்படாத வகையில் புதைக்கப்பட்டு வருகின்றன.

எமது சபைக்குட்பட்ட பகுதிகளில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது:

அனைத்து தேநீர் கடைகளிலும் உணவு உட்கொள்ளும் போது பாவிக்கப்படும் பொலித்தீன் பாவனைக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதனை மீறுவோர் மீது பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் தண்டப்பணம் அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகின்றது.

இந்நடைமுறை 01.08.2009 முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

பொலித்தீன் பாவனைக்குப் பதிலாக சூழலை மாசுப்படுத்தாத வாழையிலை, தாமரையிலை, வாழை மடல் மற்றும் இலைகளைப் பயன்படுத்தி உதவுதல் வேண்டும் - என்றார்.

இதேவேளை - வலி.மேற்கு ஆலோசனைப் பிரதிநிதி வண.பிதா யோசுவா அடிகளார் மது ஒழிப்புக் கலாசார சீரழிவு தொடர்பான "தெருக்கூத்தினை" நான்கு உப - அலுவலகங்களிலும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகக் கூறினார். (203-230)

## மயில்வாகனம் சுவாமிகளின் 24ஆவது குருபூசை

யாழ்ப்பாணம்,ஜூலை28

ஸ்ரீமத் முத்துகுமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 24ஆவது குருபூசைத் தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அன்னைதாஸன் க. ஆனந்தராசாவின் இசைச் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. (201-236)




# வாசிப்பு வாரத்தையொட்டிய போட்டியும் பரிசில் வழங்கலும்

வலி.வடக்கு,ஜூலை28

யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் வாசிப்பு வாரத்தையொட்டி மயிலிட்டி கலைமகள் வித்தியாலய மாணவர்களிடையே கல்விசார் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

பாடசாலை மண்டபத்தில் அதிபர் க. உதயமோகன் தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சட்டத்தரணி றோட்டேரியன் செல்வி சிவஞானம் ஞானலோஜினி உரையாற்றும்போது:

மாணவர்கள் எப்போதும் முன்னோக்கிப் பார்க்கவேண்டும்.

நம்பிக்கையும் விடாமுயற்சியும் கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

பாடசாலைக்குச் சீராகச் செல்வதன் மூலம் தம்மையும் வளர்த்துக் கொள்வதுடன் சமூகத்திற்கும் நல்லவர்களாக வாழமுடியும் - என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தொழிலதிபர் குமாரசுவாமி, றோட்டேரியன் செல்வி சி.சாருமதி உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர். (203-86)

# புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தி வரையான பஸ் சேவையை வடக்குச் சந்தி வரை நீடிக்குக

## மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

வலி.வடக்கு,ஜூலை28

பலாலி வீதியில் புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தி வரை நடைபெறும் இலங்கை போக்குவரத்து பஸ் சேவையை புன்னாலைக்கட்டுவன் வடக்கு சந்தி வரை நீடிக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தி வரை பலாலி வீதி ஊடான இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை இடம்பெறுகிறது.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு மற்றும் குப்பிளான், கட்டுவன் போன்ற இடங்களுக்குச் செல்லும் மக்கள் சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் இருந்து இரண்டரைக் கிலோமீற்றர் தூரம் வரை நடந்து செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தியுடன் நிறுத்தப்படும் பஸ் சேவையை புன்னாலைக் கட்டுவன் வடக்குச் சந்தி வரை நீடிக்கும் சந்தர்ப்பத்தில் குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் வடக்கு மக்கள் பெரும் நன்மை அடைவார்கள் எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

தற்போது தனியார் மினி பஸ்கள் புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தி வரை சென்று தரித்து நின்று சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (203-86)

# விதை உ.கிழங்குக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

விதை உருளைக்கிழங்கு தேவையான விவசாயிகள் திருநெல்வேலி பலாலி வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத்தின் விவசாயிகள் கூடத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று சம்மேளனச் செயலாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் நேற்று திங்கட்கிழமை தொடக்கம் ஏற்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 5ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என தேசவள விவசாயிகள் சம்மேளனச் செயலாளர் அறிவித்துள்ளார்.

உருளைக்கிழங்குப் பயிரை மேற்கொள்ளும் விவசாயிகள் தமது பதிவுகளை ஒரு பெட்டிக்கு 5ஆயிரம் ரூபா வீதம் கட்டி மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201)



யாழ்.நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் பிரசார வாகனப் பேரணியைத் தொடர்ந்து முற்றவெளியில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள். பேரணியில் கலந்துகொண்ட கட்சியின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் நிற்பதையும் பேரணியில் கலந்துகொண்ட கட்சியின் ஆதரவாளர்களுடன் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஓங்காரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாமிடம் சோதனை: மன்மோகன் வேதனை

புதுடில்லி, ஜூலை 28

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமை விமானத்தில் சோதனை செய்தது மிகவும் மோசமான நடவடிக்கை என்று பிரதமர் மன்மோகன் வேதனை தெரிவித்துள்ளார்.



அவருக்கு உரிய மரியாதையை விமான நிறுவனம் அளித்திருந்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற சம்பவங்கள் நடந்திருக்கவே கூடாது. இந்த நாட்டில் மிகவும் மதிக்கப்படும் உயரிய மனிதர்களில் கலாமும் ஒருவர்.

நாட்டின் உயரிய பதவியான குடியரசுத் தலைவராக அவர் பணியாற்றியுள்ளார். அத்தகைய சிறப்புமிக்க மனிதரை விமான ஊழியர்கள் சோதனை செய் திருப்பது மிகவும் மோசமான நடவடிக்கையாகும்.



உயர்ந்தபட்ச மரியாதைக்குரியவர் கலாம். அவருக்கு அனைத்து விதமான மரியாதைகளும் அளிக்கப்பட வேண்டும். இத்தகைய சிறப்பு மிக்கவருக்கு இது போன்ற நிகழ்வு ஏற்பட்டது அதிர்ச்சியளிக்கிறது.

இது தொடர்பாக மத்திய விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் பிரபுல் படேல் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

(சி)

# இந்தியாவின் முதல் அணு உலை நீர்மூழ்கியை தொடக்கி வைத்தார் பிரதமர் மன்மோகன்

விசாகப்பட்டினம், ஜூலை 28

இந்தியக் கடற்படையில் முதன் முதலாக அணுசக்தி மூலம் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல் சேவையில் சேர்க்கப்பட்டுள்ளது.



இதன் தொடக்க விழா நேற்று முன்தினம் விசாகப்பட்டினத்தில் நடந்தது. பிரதமர் மன்மோகன்சிங் இதைத் தொடக்கி வைத்தார்.

ஐ.என்.எஸ்.அரிகந்த் என பெயரிட்டுள்ள இந்தக் கப்பல் 104 மீற்றர் நீளம், 10 மீற்றர் அகலம் கொண்டது.

இதில் 80 மெகாவோட் அணு உலை உள்ளது. இதை கல்பாக்கம் அணுமின் நிலையம் வடிவமைத்தது.

இந்தக் கப்பலைக் கட்ட ரூபா 14 ஆயிரம் கோடி செலவாகியுள்ளது. அணு சக்தி நீர் மூழ்கிக் கப்பல் உலகில் 5 நாடுகளில் மட்டுமே உள்ளது. அதில் இப்போது இந்தியாவும் சேர்ந்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பிரதமரின் மனைவி குருசரண் கௌர், பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி, ஆந்திர முதல்வர் ராஜசேர ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர். (சி)

# பெரிய புராணம் காட்டும் வாழ்வியல்; 5 ஆவது கருத்தரங்குத் தொடர் இன்று

கோப்பாய், ஜூலை 28

பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் என்ற கருப்பொருளில் இடம்பெறும் கருத்தரங்கில் 5 ஆவது நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.ஆரியகுளம் புதிய உயர் கல்லூரி பிரதான மண்டபத்தில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

''சிறுத் தொண்டர் புராணத்தின் கட்டமைப்பு'' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் செல்வி செல்வ அம்பிகை நடராஜாவும், ''சிறுத் தொண்டர் புராணம் காட்டும் அன்புநெறி'' என்ற தலைப்பில் புதிய உயர் கல்லூரி விரிவுரையாளர் திருமதி அருள்நங்கை சண்முகநாதனும் கருத்துரைகளை வழங்குவர்.

நிகழ்வின் இறுதியில் யாழ்.பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி இ.வேல்நம்பி, கோப்பாய் றோ.க.த.க.பாடசாலை அதிபர் ச.லலீசன், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா.பாலகணேசன், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆசிரியர் ச.மார்க்கண்டு ஆகியோர் இணைப்பாளர்களாகச் செயற்படும் கருத்தாடல் நிகழ்வும் இடம்பெறும்.

இக்கருத்தரங்கு உயர்தர, பட்டப் படிப்பு மாணவர்களுக்கு பயன்தரும் வகையில் அமைக்கப்பட்டிருந்தாலும் ஆர்வமுள்ள எவரும் கலந்து பயன்பெறலாம் என கருத்தரங்கு ஒழுங்கமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(203-72)

# கே.பிக்கு எதிராக...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது ஒரேயொரு தலைவர் திராவிடக் கழகத்தின் சிரேஷ்டரான 'பெரியார்' என்று அழைக்கப்படும் ஈ.வெ.இராமசாமி நாயக்கர்தான் எனக் கூறிய அண்ணாத்துரை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பதவியை பெரியார் தாமாக முன்வந்து ஏற்றுக் கொள்ளும்வரை தி.மு.க. தலைமைப் பதவி வெற்றிடமாகவே இருக்கும் என்றும் அறிவித்தார். அண்ணாத்துரை, 'அமைப்புச் செயலாளர்' ஆகவே பணிபுரிந்தார்.

எனினும், அண்ணாத்துரைக்குப் பின்னர் அந்தப் பதவிக்கு வந்த கருணாநிதி, தி.மு.கவின் யாப்பை 1969 இல் மாற்றியமைத்து தான் அதன் தலைவரானார்.

### சதிப் பிளவு

புலிகளின் உள்ளகப் பேச்சு மூலமான உடன்பாடு ஜூலை 20 இல் எட்டப்பட்டது. அதுபற்றிய அறிக்கையில் புலிகளின் நிறைவேற்றுக் குழு சார்பில் ராமும், சுரேஷும் ஒப்பமிட்டனர். அந்த அறிக்கை அதிக விவரங்களைக் கொண்டிராத போதிலும், கே.பியே புதிய தலைவர் என்பதையும் ஐக்கியம் எட்டப்பட்டது என்பதையும் அது கோடி காட்டியது.

மறுசீரமைக்கப்பட்ட புலிகள் அமைப்பு புதிய பாணியில் பயணிக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

ஆனால் விடயங்கள் சுமுகமாக நகரவில்லை. மனிதன் மட்டுமல்ல சுண்டெலியும் கூட நன்கு திட்டமிட்டு முன்னெடுக்கும் விடயங்கள் குழம்பி விடுவதுண்டு.

புதிய ஏற்பாட்டுக்கு இணங்கி, கே.பியின் தலைமைத்துவத்துக்கு நெடியவன் உடன்பட்டாலும் கூட, கே.பி. எதிர்ப்பு சதிக் கூட்டம் அதற்கு மறுத்து நின்றது.

ராம் மற்றும் சுரேஷினால் வெளியிடப்பட்ட அறிக்கைகளை 'தமிழ்நெற்' மற்றும் 'பதிவு' ஆகிய இணையத் தளங்கள் வெளியிட்ட விதமும் ஏனைய புலிகளின் ஊடகங்கள் இவ்விடயத்தில் பேணிய சந்தேகத்துக்கு இடமான மௌனமும் (இருட்டடிப்பும்) சேர்ந்து இந்தச் சதிக்கூட்டம் உடன்பாட்டுக்கு வர மறுக்கின்றது என்ற கருத்தையே ஏற்படுத்தின.

இந்த எதிர்ப்பு அணி புலிகளின் பிரபல செயற்பாட்டாளர்கள் பலரை உள்ளடக்கியது. அவர்களில் முக்கியமானவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான 'குதிரை கஜேந்திரன்' என்று அழைக்கப்படும் செல்வராசா கஜேந்திரன்தான். 2004 இல் நடைபெற்ற தேர்தலில் யாழ்ப்பாணத்தில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற கஜேந்திரன் இப்போது ஒஸ்லோவில் உள்ளார். அங்கு கே.பி. எதிர்ப்புக் குழுமத்தில் அவரே முக்கிய சக்தி.

ஏனையோரில் 'தமிழ்நெற்' இணையத் தளத்தின் ஆசிரியர் ஜெயச்சந்திரன் மற்றும் நிர்வாக ஆசிரியர் ஸ்ரீகரன் ஆகியோரும் அடங்குவர். இவர்களுள் ஜெயச்சந்திரன் நோர்வேயில் வசிப்பவர். ஸ்ரீகரன் அமெரிக்காவைச் சேர்ந்தவர்.

'தமிழ் நெற்'றுக்கு அப்பால், 'சங்கதி', 'பதிவு' ஆகிய தமிழ் இணையத்தளங்களும் கே.பியை எதிர்க்கின்றன. இவற்றில் சங்கதியை பிரான்ஸில் உள்ள ஆதித்தன் என்பவர் கட்டுப்படுத்துகின்றார். பாரிஸைத் தளமாகக் கொண்ட 'ஈழமுரசு' பத்திரிகையையும் இவரே நடத்துகின்றார். 'பதிவு' இணையத் தளத்தை வாகீசன் என்பவர் நடத்துகின்றார். இவரே புலிகளின் ஜேர்மன் தலைவராவார்.

தனிப்பட்ட வகையில் இயங்கும் தமிழ் ஊடகவியலாளர்களான இதயச்சந்திரன் என்று அழைக்கப்படும் நவநீதன் மற்றும் கிருஷ்ணரஜனி என அழைக்கப்படும் பரணீதரன் என்போரும் இந்தக் குழுமத்தில் உள்ளனர். இவர்கள் தமிழ் சஞ்சிகைகள் மற்றும் இணையத் தளங்களுக்கு எழுதுபவர்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்று இயக்குநரான கே.பி.ரெஜியும் கூட கே.பிக்கு எதிரானவர்தான். ரெஜியுடன் இவ்விடயத்தில் இணைந்து செயற்படுபவர் புலிகளின் பொருளாதார அபிவிருத்தி நிறுவனமாக TEEDOR என்ற அமைப்புக்கு முன்னர் தலைமை வகித்த 'ரூட் ரவி' ஆவார். இருவரும் லண்டனில் உள்ளனர்.

### சவால்கள்

லண்டனில் இயங்கும் மற்றொரு கே.பி. எதிர்ப்பாளர் பாம்பன் அஜித். இவர் முன்னர் பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலராக இருந்தவர். 1989 இல் கிட்டு என அழைக்கப்படும் கிருஷ்ணகுமாருடன் லண்டன் வந்த இவர், புலிகளின் முக்கிய புள்ளியான சங்கர் என அழைக்கப்படும் சொர்ணலிங்கத்தின் மைத்துனியை மணந்தார். தமிழ்நாடு அரசியல் வாதிகளுடன் அதீத தொடர்புகளை வைத்துள்ள அஜீத்தே, அந்த வட்டாரங்களில் கே.பிக்கு எதிரான உணர்வலைகள் அதிகரிக்கப் பிரதான காரணகர்த்தாவாவார்.

இதைத்தவிர, அன்புச்செல்வன் என ஒருவர். தமிழ் இளைஞர் அமைப்பு என்ற உலகளாவிய கட்டமைப்புக்கு இவரே தலைவர். இந்த அமைப்பு புலம் பெயர்ந்த தமிழர்கள் உள்ள தேசங்கள் எங்கும் ஊடுருவியுள்ளது. அண்மைக் காலத்தில் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கமைத்ததில் இதற்கு கணிசமான பொறுப்புண்டு.

இதுதான் இப்போதைய நிலைமை.

கே.பியின் தலைமையில் விடுதலைப் புலிகள் அமைப்பை மீள்சீரமைக்க கே.பிக்கும் நெடியவனுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டிருந்தாலும் கூட, நெடியவனைச் சூழவுள்ள குழுமம் தொடர்ந்தும் கிளர்ச்சி செய்யும் முனைப்பிலேயே உள்ளது. நெடியவனின் உண்மைத் தன்மை கூட சந்தேகிக்கவே படுகின்றது.

புலிகளின் செல்வாக்கு மிக்க ஊடகங்கள், புலிகளின் கிளை அமைப்புகள், இளைஞர் அமைப்புகள் ஆகியவை தமக்கு எதிராகச் செயற்படுகையில், புலிகளின் புதிய தலைவர் மிகச் சிரமமான இலக்கை எதிர்கொள்கின்றார். இந்தச் சவால்களை கே.பி. எப்படி எதிர்கொண்டு சமாளிக்கப் போகின்றார் என்பதை இருந்துதான் பார்க்கவேண்டும்.

- முற்றும் -


## யா/இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்
## பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்

மேற்படி சங்கப் பொதுக் கூட்டம் நாளை (29.07.2009) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 2008 ஆம் ஆண்டுவரை மேற்படி பாடசாலையில் கல்வி கற்ற அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி.

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் இந்துக்கல்லூரியின் சிரேஷ்ட பழைய மாணவனும், கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் சிரேஷ்ட தலைவனுமாகிய

சட்டத்தரணி
அமரர் கந்தையா சிவானந்தம்

அவர்களின் மறைவிற்காக எமது அஞ்சலியினைச் செலுத்தி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி,
கனடா பழைய மாணவர் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி



சட்டத்தரணி
அமரர் கந்தையா சிவானந்தம்
(பழைய மாணவர், யா/ கோக்குவில் இந்துக் கல்லூரி)

எமது கல்லூரியின் மூத்த பழைய மாணவரே, எம் கல்லூரியின் ஆங்கிலக் கல்வி விருத்திக்காய் 1984ஆம் ஆண்டு முதலாக ஆங்கிலப் போட்டிக்கான தங்கப்பதக்கத்தினை வழங்கி வருபவரே, முழுமையான சேவைகளை கல்லூரிக்கு உவந்தளித்த உத்தமரே, உயரிய பண்புகள் கொண்டவரே, எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## தவறிவிட்டது

தர்மசீலன் ராஜலக்ஸ்வன் என்பவரது தே.அ.அ (903072733V) கடந்த 15.07.2009 அன்று கோவிற் சந்தைக்கும் வதிரிக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியிலோ. அல்லது மொடோன் ஸ்ரோர்ஸ், நெல்லியடியிலோ ஒப்படைத்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

'கோவிற்சந்தையடி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.
T.P : 0779269059, 0772367441.

## தவறிவிட்டது

இராசநாயகம் றோசலின் என்பவரது தே.அ.அ.(805722282V) யும், இராணுவ அ.அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகமும் மற்றும் பரமநாதன் நீதிராணி (796714190V), செல்வநாயகம் பிரதீபா (868594098V) என்பவர்களின் தே.அ.அட்டைகளும் சங்கானை வைத்தியசாலைக்கும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சண்டிலிப்பாய் R.S.தொலைத் தொடர்பகத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே: 060 2006113

## மிருதங்கம் விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள 22 அங்குல நீளமான மிருதங்கம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0602216368

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் இன்று (28.07.2009) [illegible]
உடன் மேற்கொள்ளவும்.
[illegible],
ஆனைக்கோட்டைச் சந்தி. தொ.பே:0212222867

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
இலங்கைநாயகம்
வள்ளியம்மை

திதி: ஷப்தமி

பிறப்பு
13 ✱ 09 ✱ 1933

இறப்பு
07 ✱ 08 ✱ 2008



பலகோடி இன்பங்கள் இருந்தென்ன
பல உறவுகள் இருந்தென்ன
பல கோடி சொத்து சுகங்கள் இருந்தென்ன
எங்கள் அம்மாவுக்கு நிகர்-எமக்கு
இப்பாரினில் யார்தானோ!
ஆண்டு ஒன்றானாலும் நேற்றுவரை எம்முடன்
இருந்த நினைவுதான் ஆறவில்லை எம் நெஞ்சாம்மா!
காலனவன் உங்களைக் கவர்ந்துதான் சென்றானோ?
பொறுக்கவில்லையம்மா எம் நெஞ்சம் பொருமி வெடிக்கிறது
எப்போதாவது திரும்பி எம்மிடம் வருவீர்களா
என்றுதான் அம்மா எம்முள்ளம் இரஞ்சுகிறது
சிறகு ஒடிந்த பறவையாய் கொதி எண்ணெயில்
விழுந்த புழுவாய் எம்முள்ளம் உங்கள்
நினைவுகளால் துடிக்கிறது அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

செட்டி வளவு,
இணுவில் மேற்கு. குடும்பத்தினர்.

(87375)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று பதவிகளின் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோரின் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடமாகாண பொதுச் சேவையின் நன்னடத்தை உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

அன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் இந்த நேர்முப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

நேர்முப் பரீட்சைக்கான கடிதங்கள் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அழைக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

**கலாசார உத்தியோகத்தர்**

இ.இராஜேஸ்கண்ணன்- இமையாணன் உடுப்பிட்டி, ம.மேர்சி சுஜந்தினி- நாவாந்துறை, ச.நிருபா- சித்தன்கேணி, தி.உமாசுதன்-மூளாய், செ.தக்சாயினி- அரசடிறோட்,யாழ்ப்பாணம், கு.றஜீபன்- நல்லூர், ர.ஜெயகாந்தன்- கரம்பொன்,

**சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்**

சி.சிவபாலசுந்தரம்-கொக்குவில், ஸ்ரீரா.மயூரதி- திருநெல்வேலி, செ.நாகராஜா- கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம், தி.சஞ்சிதா- வவுனியா, பொ.சிவகுமார்- சுதுமலை, ம.மதிதாஸ்-புலோலி, சி.நிசாந்திலா- கோப்பாய், ச.ரஜீஸ்கண்ணா-வவுனியா, ம. மேர்சி சுஜந்தினி- நாவரந்துறை, க.கமலதாசன்- மானிப்பாய், க.தீபா- மீசாலை, தெ.வினோதன்-சுண்டிக்குளி, மா.ரதிவதனி-நல்லூர், பொ. இராஜராஜேஸ்வரி-இணுவில்,

**கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்**

சி.அகிலன்- கரணவாய், சா.சிவலிங்கம்- கோப்பாய், மா.தயாபரன்- அளவெட்டி, இ.பரணிகரன்-கொக்குவில், கு.சிவநந்தினி-கொக்குவில், இ.மதன்-திருநெல்வேலி, ப.சேயோன்- சுன்னாகம், வே.பாலசுந்தரம்- மீசாலை, ந.மகேஸ்வரன்- நீர்வேலி, கு.சத்தியகுமார்-தும்பளை, இ.சிறிதரன்- பொன்னாலை, கு.யோகன்ராஜ்- தாவடி, இ:கோகுலன்- புத்தூர், சி.பிரபாகரன்-கரவெட்டி, சி.நடேசன்- மல்லாகம், வ.மதியானந்தன்-மீசாலை,

# கொடிகாமத்தில் இலங்கை வங்கியின் சேவைநிலையம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

இலங்கை வங்கி கொடிகாமத்தில் தனது நடமாடும் சேவை நிலையத்தை நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு திறக்கவிருக்கின்றது.

கிளை முகாமையாளர் எஸ்.சந்திரகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் வைபவரீயாக சேவை நிலையத்தை திறந்து வைக்கிறார்.

# றோலர் மீன்பிடித் தொழிலை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்படுவது குறித்து அமைச்சரின் கவனத்துக்கு

சண்டிலிப்பாய், ஜூலை 27

மீன்பிடித் தொழில் ரீதியாக மீனவர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள மாறுபட்ட கருத்தினால் றோலர் தொழில் ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது.

குடாநாட்டில் ஏற்பட்ட போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து பல வருடங்களாகத் தடைப்பட்டிருந்த இழுவைப்படகு மீன்பிடித் தொழில் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து மீண்டும் இத் தொழிலை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்தத் தொழிலுடன் சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் வள்ளங்களைத் திருத்தியமைத்து தயார்ப்படுத்தி வந்தனர்.

இதேவேளை றோலர் தொழில் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதனால் கடல் வளம் நாளடைவில் பெருமளவில் அழிந்து விடும். ஏனைய மீனவர்களின் வருமானத்தில் பாரிய பாதிப்பு ஏற்படும் என்று கருதிய மாற்றுத் தொழில் செய்யும் மீனவர்கள் றோலர் தொழில் ஆரம்பிப்பதற்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

இதனால் அந்த வகைத் தொழிலை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

றோலர் தொழிலாளர்கள் இந்த விடயம் குறித்து சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

கடந்த சில வருடங்களுக்கு முன்பு றோலர் தொழில் செய்வதன் மூலம் கடல் வளங்களும் பாதிக்கப்படும் எனக் கருதி சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு மாற்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்காக பல லட்சம் ரூபா வழங்கப்பட்டது. இந்த நிதியைப் பெற்றவர்கள் மாற்றுத் தொழிலில் ஈடுபட்டு வந்தனர் (அ-115)

## வவுனியா வளாகத்துக்கு தெரிவான

# குடாநாட்டு மாணவர்கள் தபால் மூலம் பதிவுகளை மேற்கொள்ள வசதி

யாழ்ப்பாணம், ஜூலை 28

வவுனியா வளாக கற்கை நெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட யாழ். குடாநாட்டு மாணவர்கள் தமது பதிவுகளை பதிவுத் தபால் மூலம் மேற்கொள்ளலாம் என வளாகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் வி.ஸ்ரீதரன் அறிவித்துள்ளார்.

தபால் மூலம் பதிவு செய்ய விரும்பும் மாணவர்கள் ஆணைக்குழுவினால் அறிவுறுத்தப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் சிரேஷ்ட உதவி நிதியாளர், வவுனியா வளாகம் என்ற பெயருக்கு உரிய காசுக் கட்டளையுடன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், வவுனியா வளாகம், பூங்கா வீதி, வவுனியா என்ற முகவரிக்கு பதிவுகளுக்கான விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பவேண்டும்.

மேற்படி விண்ணப்பப்படிவத்தை பதிவுத் தபால் மூலம் அனுபியமைக்கான பற்றுச் சீட்டில் மாணவர்கள் தமது பெயரையும் சுட்டிலக்கத்தையும் 024 222 2265 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பி வைத்தால் அவர்களது பதிவை வவுனியா வளாகம் உறுதி செய்துகொள்ளும் எனவும் வி.ஸ்ரீதரன் மேலும் தெரிவித்தார். (1-7)

# வீட்டில் இருந்தவர்களை மயக்கிவிட்டு பல லட்சம் ரூபா பொருள்கள் திருட்டு

## கொக்குவில் மேற்கில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

கொக்குவில் மேற்கில் நித்திரையில் இருந்தவர்களுக்கு மயக்கமருந்து தெளித்து மயக்கிவிட்டு பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் துணிகரமாக திருடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டாரை மயக்கத்தில் ஆழ்த்திவிட்டு வீட்டில் இருந்து தொலைக்காட்சிப் பெட்டி, டெக், றேடியோ, கையடக்கத் தொலைபேசி என்பவற்றுடன் மற்றும் பல பொருள்களும் திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டில் திருடர்கள் தங்க நகைகளை தேடி நிலத்தை தோண்டியும் அலுமாரிகளை உடைத்தும் தேடியுள்ள போதிலும் இவைகள் எவையும் கிடைக்கவில்லையெனவும் அதில் கூறப்பட்டுள்ளது. (1-86)



வடக்கின் வசந்தம்

அதிஉத்தம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் “மஹிந்த சிந்தனை” தேசிய புனர்வாழ்வு வேலைத்திட்டத்திற்கு ஏற்ப வடபகுதி இலங்கை மக்களுக்கு நிவாரணமளிக்கும் உதார சேவைகளைக் குறிக்கோளாகக் கொண்டு

“வடக்கின் வசந்தம்” வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதியவர்களின் சிரேஷ்ட ஆலோசகரும் பாராளுமன்ற பிரதிநிதியுமான “வடக்கின் வசந்தம்” நிறைவேற்றுச் செயலணித் தலைவர் பசில் ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலில் வர்த்தக அபிவிருத்தி கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சர் கௌரவ பந்துல குணவர்தன அவர்களின் தலைமையில் சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்த அவர்களினதும் லங்கா சதொச தலைவர் நளின் பெர்ணாந்து அவர்களினதும் பங்களிப்புடன்

116 வது லங்கா சதொச விற்பனை நிலையம்

யாழ்ப்பாணத்தில்

லங்கா சதொச • LANKA SATHOSA

2009-07-28 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் நகரத்தில் திறந்து வைக்கப்படும்.

LAK SATHOSA GRACEFULLY FORWARD

"வின்சர்" திரையரங்கு கட்டிடம்,
இல. 140, கல்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இவ் அழைப்பு உங்களுக்காக..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் பேரழிவுக்கு மலையாளிகள் முக்கிய பங்கு!

## பழ.நெடுமாறன் குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 287

இலங்கைத் தமிழர் பேரழிவுக்கு காரணமாக இருந்தவர்களில் மலையாளிகளுக்கு முக்கிய பங்குள்ளது என்றும், இந்தியாவின் முக்கிய பதவிகளில் இருப்போர் அனைவரும் மலையாளிகளே என்றும் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

அம்பேத்கர் சட்டக்கல்லூரி மாணவர்கள் ஒருங்கிணைப்பு சார்பில் கடந்த சனிக்கிழமை பெங்களூர் தமிழ்ச் சங்கத்தில் 'ஈழத்தமிழரும், நமது கடமையும்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

சர்வாதிகாரி ஹிட்லரால் யூத மக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். அதைவிட மிகப்பெரிய கொடுமை இலங்கைத் தமிழர்களுக்கு நேர்ந்துள்ளது. இந்தியாவில் வாழும் தமிழர்களை மத்திய அரசு தமது நாட்டின் குடிகளாக நினைக்கவில்லை.

ஏறத்தாழ 3.5 லட்சம் தமிழர்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் மின்வேலி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டுள்ளனர். 3 ஆயிரத்து 500 பேருக்கு ஒரு கழிவறை வசதி மட்டுமே செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் மத்திய அரசு தான் காரணம்.



இலங்கைத் தமிழர் பேரழிவுக்கு காரணமாக இருந்தவர்களில் மலையாளிகளுக்கு முக்கிய பங்குள்ளது. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன், வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனன், இந்தியாவில் முக்கிய பதவி வகிக்கும் பி.கே.நாயர், ஜெனீவாவில் உள்ள மனித உரிமை ஆணையத்தின் இந்திய பிரதிநிதி கோபிநாத், ஐ.நா. சபை செயலாளரின் விவகாரத்துறை அதிகாரி விஜய் நம்பியார், இலங்கை இராணுவ தளபதி பொன்சேகாவின் இராணுவ ஆலோசகரும் விஜய் நம்பியாரின் சகோதரருமான சதீஷ் நம்பியார் ஆகிய அனைவரும் மலையாளிகள்.

இவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்கி இந்தப் பேரழிவை ஏற்படுத்தியுள்ளனர். சிவ்சங்கர் மேனனும், நாராயணனும் மாதத்துக்கு 4 தடவை இலங்கைக்குச் சென்று வந்தனர். போர் நிறுத்தம் பற்றி பேசுவதாக இலங்கை சென்று டில்லி திரும்பும் வழியில் சென்னையில் இறங்கி அவர்கள் தமிழக முதலமைச்சரையும் ஏமாற்றி விட்டனர்.

இலங்கையில் சீன நாடுகள் உட்பட நமது எதிரி நாடுகள் கால்பதித்து வருகின்றன. இது நமது நாட்டுப் பாதுகாப்புக்கு பாதிப்பாக அமையும். இதைப் புரிந்துகொள்ளாமல் மத்திய அரசு தனது தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுள்ளது.

உலகத் தமிழர்களுக்கு விடிவு காலம் பிறக்கும். அதுவரை நாம் ஒன்று திரண்டு எந்த ஒரு குழப்பத்துக்கும் ஆளாகாமல் போராட்டம் நடத்த வேண்டும் - என்றார்.



இந்தியா முழுவதும் நாகபஞ்சமி விழா நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி பீகாரின் தலைநகர் பாட்னாவில் பாம்புகளுக்கு பால் ஊற்றி பெண்கள் பூஜை செய்கின்றபோது.....

## தேர்தலில் வைகோ தோற்றமையால்

# இலங்கைத் தமிழினப் படுகொலையை தட்டிக் கேட்க ஆளில்லாமல் போனது

## நாஞ்சில் சம்பத் வருத்தம்

திருவொற்றியூர், ஜூலை 28



நாடாளுமன்றத் தேர்தலில் வைகோ தோற்றமையால் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலையைத் தட்டிக் கேட்க ஆளில்லாமல் போனது. தற்போது நடக்கவிருக்கும் இடைத் தேர்தலால் மாற்றம் ஏதும் ஏற்படப் போவதில்லை - என்று ம.தி.மு.க. கொள்கை பரப்புச் செயலர் நாஞ்சில் சம்பத் தெரிவித்தார்.

விலைவாசி உயர்வைக் கண்டித்து ம.தி.மு.க சார்பில் திருவொற்றியூரில் கடந்த சனிக்கிழமை கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தமிழ்நாட்டில் அரசியல் கட்சி தொடங்கி நடத்துவது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. இந்தியாவின் மிகச் சிறந்த அறிவாளிகளில் ஒருவராக போற்றப்பட்ட ராஜாஜி மற்றும் அண்ணாவால் பாராட்டப்பட்ட ஈ.வி.கே.சம்பத், தமிழ்நாட்டின் உரிமைக்காக போராடிய ம.பொ.சிவஞானம், நடிகர் திலகம் சிவாஜி ஆகியோர் தனிக் கட்சிகளைத் தொடங்கினர்.

ஆனால் அவர்கள் காலத்திலேயே அந்தக் கட்சிகள் எல்லாம் அழிந்து போயின. ஆனால் ம.தி.மு.க தொடங்கி 16 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வைகோ தோற்றதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. வைகோவா தோற்றார் என மக்கள் கேட்கிறார்கள்.

லண்டன் மாநகரை ஹிட்லரிடமிருந்து காப்பாற்றிய வின்செண்ட் சர்ச்சில் அடுத்து நடைபெற்ற தேர்தலில் தோற்றுப் போனார். அமெரிக்காவிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்த ஜார்ஜ் வாஷிங்ரன் அங்கு நடைபெற்ற தேர்தலில் தோற்றார்.

நாடாளுமன்றத் தேர்தலில் வைகோ தோற்றமையால் இலங்கையிஷ் நடைபெற்ற இனப்படுகொலையைத் தட்டிக் கேட்க ஆளில்லாமல் போனது - என்றார்.

# ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து தீர்மானம்; ஐ.நாவில் இடம்பெறச் செய்தோர் புலிகளே

## விடுதலை இராசேந்திரன் பேச்சு

சென்னை, ஜூலை 28

15 ஆயிரம் ச.கி.மீ. நிலத்தை இழந்த பின்பும் ஐக்கிய நாடுகளின் சபையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தீர்மானம் இடம்பெற செய்தவர்கள் விடுதலைப் புலிகளே - என்று விடுதலை இராசேந்திரன் கூறினார்.

நாடாளுமன்ற அமைச்சரவையின் ஒப்புதலின்றி, தமிழினத்திற்கு மனித உரிமைத் துரோகத்தை இந்தியா செய்துள்ளது. இந்திய - இலங்கைக் கூட்டுச் சதியை, சர்வதேச சமூகத்தின் முன்பும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளிடமும் அம்பலப்படுத்த வேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்திய - இலங்கைக் கூட்டுச் சதியை, சர்வதேச சமூகத்தின் முன்பும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளிடமும் அம்பலப்படுத்த வேண்டும்.

அமெரிக்காவின் மீதான செப்டெம்பர் 11 தாக்குதலுக்கு முன்பே இலங்கையுடன் சம அரசியல் பலத்தில் தமிழீழம் என்ற தனியரசை நடத்திக் காட்டியவர்கள் விடுதலைப் புலிகள். அவர்கள் சாதி, மத பேதமற்ற அரசியல் சாசனத்தை உருவாக்கி தமிழ்நிலத்தை ஆண்டவர்கள்.

புலிகள், இலங்கை இராணுவத்தை வெற்றி கொண்டு இராணுவரீதியாக பலம் பெற்று அரசு நடத்தும் போதுதான், அரசியல் தீர்வுக்கு ஒப்புக் கொண்டு நோர்வே பேச்சின்போது தன்னாட்சி சபை திட்டத்தை முன் வைத்தனர்.

இவ்வாறு இராணுவ ரீதியாக பலம் பெற்ற அரசியல் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக பட்டியலிட்டது சர்வதேசத்தின் தவறு.

தற்போது 15 ஆயிரம் ச.கி.மீ. நிலத்தை இழந்த பின்பும் ஐக்கிய நாடுகளின் சபையில் தமிழீழம் குறித்து தீர்மானம் இடம்பெற செய்தவர்கள் விடுதலைப் புலிகளே - என்றார்.



இந்தியாவில் கார்கில் போர் வெற்றியின் 10ஆம் ஆண்டை முன்னிட்டு கார்கில் மாவட்டம் திராஸ் பகுதியில் இராணுவத்தினரின் சாகச நிகழ்ச்சிகள் நடந்தது. இராணுவச் சிப்பாய் ஒருவர் கத்திகள் மீது படுத்து சாகசம் செய்கின்றபோது.....

# ஈழ அகதிகளின் உண்ணாவிரதப் போர் ஐந்தாவது நாளாகத் தொடர்ந்து தீவிரம்

செங்கல்பட்டு, ஜூலை 27

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் இலங்கை அகதிகள் 63 பேர் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி 5 ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினருக்கு அகதிகளைச் சந்திக்க, அனுமதி மறுத்தமையால் அவர்கள் பொலிஸாருக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

கியூப் பிரிவு பொலிஸாரால் பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டு செங்கல்பட்டு சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகள் 85 பேரில் 63 பேர் கடந்த புதன்கிழமையிலிருந்து 5 ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களுடன் டி.எஸ்.பி. பாலசுப்ரமணியம், கியூப் பிரிவு டி.எஸ்.பி. விஸ்வநாதன், இன்ஸ்பெக்டர் ஆல்பேர்ட் வில்சன் வட்டாட்சியர் வெங்கடேசன் உள்ளிட்டோர் தொடர்ந்து பேச்சில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் தங்கள் வழக்குகளை விரைவில் முடித்து விடுவிக்க வேண்டும், தங்கள் குடும்பங்களுடன் தாம் சேர்ந்து வாழவேண்டும், அமைச்சர்கள் அல்லது முதலமைச்சரின் பிரதிநிதிகள் தங்களுடன் பேச்சில் ஈடுபடவேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த சனிக்கழமை விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு சார்ந்த அமல்ராஜ் தமிழரசன் தலைமையில் நகரச் செயலர் பிரேம்குமார் அன்புசெல்வன் முன்னிலையில் அமைப்பின் தலைமைச் செயலர் வன்னியரசு உள்ளிட்டோர் அகதிகளிடம் பேச்சு நடத்துவதற்காக பொலிஸாருடன் வாக்குவாதம் செய்தனர். அதற்கு பொலிஸார் அனுமதி மறுக்கவே, அவர்கள் பொலிஸாருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

# அண்டை நாடுகளை அச்சுறுத்தும் எண்ணம் இந்தியாவுக்கு இல்லை

## மன்மோகன் தெரிவிப்பு

விசாகப்பட்டினம், ஜூலை 28



அண்டை நாடுகளை ஆக்கிரமிப்புச் செய்யும் எண்ணமோ அல்லது அச்சுறுத்தும் எண்ணமோ இந்தியாவுக்குக் கிடையாது - என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

உள்நாட்டில் முழுவதும் வடிவமைக்கப்பட்ட 'அரிஹந்த்' அணுசக்தி நீர்மூழ்கி கப்பலை விசாகப்பட்டினத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாட்டுக்கு அர்ப்பணித்து வைத்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

நாட்டின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு கடல் மார்க்கமாகவும் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மாறிவரும் சூழலுக்கேற்ப இந்தியா தனது இராணுவப் பாதுகாப்பைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

இதுபோன்று உள்நாட்டுப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு எடுக்கப்படும் நடவடிக்கைகளை அண்டை நாடுகள் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவோ அல்லது அச்சுறுத்தும் செயலாகவோ கருதக்கூடாது. இது முற்றிலும் உள்நாட்டு பாதுகாப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கையாகும். அதேசமயம், உலகளாவிய தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப நம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று.

கடற்படையில் சேர்ப்பதற்காக நவீன தொழில் நுட்பத்துடன்கூடிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் வாழ்த்துகள்.

உலகில் 5 நாடுகளிடம் மட்டுமே அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் உள்ளது. நாமும் அதனுடன் இணைந்துள்ளோம். அணுசக்தி நீர்மூழ்கி கப்பலை தனியார் பங்களிப்புடன் சேர்ந்து தயாரித்திருப்பது மகத்தான சாதனையாகும் - என்றார்.

# இந்தியப் படையால் விடுவிக்கப்பட்ட 61 மீனவர் இலங்கைக் கடற்படையிடம் நேற்று ஒப்படைப்பு

சென்னை, ஜூலை 28

சென்னை அருகே கடலில் பிடிபட்ட இலங்கை மீனவர்கள் 61 பேர் கடந்த சனிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரையும் இந்தியக் கடற்படையினர் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரிடம் நேற்று ஒப்படைத்தனர்.

சென்னை அருகே தமிழ்நாடு - ஆந்திரா எல்லைப் பகுதியில் நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்களை கடலோரக் காவல் படையினர் படகுகளுடன் பிடித்து சென்னை கொண்டு வந்து சிறையில் அடைத்தனர். 101 பேர் இவ்வாறு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இந்திய எல்லையில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த அவர்கள் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களை விடுதலை செய்வது பற்றி சென்னை கலெக்டர் தலைமையிலான கூட்டு நடவடிக்கை குழு விசாரணை நடத்தும்.

அவ்வாறு விசாரணை நடத்தப்பட்டதில் 61 பேரை விடுதலை செய்ய இரு நாடுகளின் நல்லெண்ண அடிப்படையிலும், மனிதாபிமான அடிப்படையிலும் கலெக்டர் தலைமையிலான குழு முடிவு செய்தது.

அதன்படி 61 இலங்கை மீனவர்கள் கடந்த சனிக்கிழமை இலங்கைத் தூதரக அதிகாரிகள் முன்னிலையில், இந்தியக் கடலோரக் காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடலோர காவல் படையினர் 61 மீனவர்களையும் சர்வதேச கடல் எல்லையில் வைத்து இலங்கைக் கடற்படையினரிடம் ஒப்படைக்கவிருந்தனர். அத்துடன் அவர்கள் வந்த 12 படகுகளும் ஒப்படைக்கப்படுகின்றன.

மேலும் 40 இலங்கை மீனவர்கள் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களும் விசாரணைக்குப் பின்னர் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தமிழ்த் திரையுலகைப் புறக்கணிக்கின்றார்; ரஹ்மான் மீது நடிகர் ராதாரவி குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 28



இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் தமிழ்ப் பட உலகை அடியோடு புறக்கணிக்கிறார். அவர் தமிழ்ப் படத் தயாரிப்பாளர்களை இழுத்தடிக்கிறார், அவமதிக்கிறார் - என்று நடிகரும், நடிகர் சங்க பொதுச் செயலருமான ராதாரவி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் ஒஸ்கார் விருது வாங்கினாலும், சினிமாவுக்கு அறிமுகமானது கவிதாலயா மூலமே தவிர, ஸ்லம்டாக் மில்லியனர் மூலமல்ல என்றும் அவர் விசனித்துள்ளார்.

'மண்டபம்' படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழா சென்னையில் நேற்றுமுன்தினம் [illegible] அங்கு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -



தமிழ்நாட்டில் தமிழ்ப் படங்களைத் திரையிட திரையரங்குகள் முன்னுரிமை தரவேண்டும். ஹிந்திப் படங்கள் வருகின்றன என்று தமிழ்ப் படங்கள் திரையிடுவதைத் தவிர்க்கக் கூடாது. தமிழ்ப் படங்களை திரையிடாத திரையரங்குகளை இழுத்து மூடவேண்டும்.

ஏ.ஆர்.ரகுமான் தமிழ்ப் படத்துக்கு இசை அமைத்துத்தான், இசையமைப்பாளராக அறிமுகமானார். அவருடைய முதல் படம் 'ஸ்லம்டாக் மில்லினர்' அல்ல. ஆனால் ரஹ்மான் தமிழ்ப் பட உலகை அடியோடு புறக்கணிக்கிறார்.

அவர் ஒஸ்கார் விருது பெற்றதற்காக தமிழ்த் திரையுலகம் சார்பில் பாராட்டு விழா நடத்த திகதி கேட்டோம். ஆனால் அவர் எங்களுக்கு திகதி தராமல், வேறு ஒரு மாநிலத்தில் பாராட்டு விழா நடத்த சம்மதித்திருக்கிறார் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியவர்கள் மற்றும் பிரிந்தவர்களை இணைக்கும் பணி இன்று ஆரம்பமாகிறது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

குடாநாட்டில் இயங்கும் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் 215 முதியவர்களை விடுவிப்பதற்கும் பிரிந்தவர்களை இணைப்பதற்குமான நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகின்றன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட 215 பேர் விடுவிக்கப்படவுள்ளனர். சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து இந்த முதியவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர்.

இன்று செவ்வாய்க்கிழமை முதல் மேற்படி முதியவர்கள் விடுவிக்கப்பட உள்ளதால் ஏற்கனவே அமைச்சர் முதியவர்களின் விடுவிப்பு தொடர்பில் கோரிக்கைகளை முன்வைத்தவர்களும் கோரிக்கைகளை முன்வைக்கத் தவறியவர்களும் அமைச்சரின் யாழ். பணிமனையோடு தொடர்பு கொண்டு நலன்புரி நிலையங்களில் உள்ள தமது முதிய உறவினர்களை இன்று முதல் நலன்புரி முகாம்களுக்குச்சென்று பொறுப் பேற்றுக் கொள்ள முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் உள்ள நலன்புரி முகாம்களுக்குள் பிரிந்து வாழும் குடும்ப உறவினர்களை மீண்டும் இணைத்து வைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பிரிந்து வாழும் 245 நபர்கள் வெவ்வேறு நலன்புரி நிலையங்களில் உள்ள தமது குடும்பத்தாருடன் இணைத்து வைக்கப்படும் நிகழ்வு இன்று ஆரம்பமாகின்றது. இதற்கமைய நலன்புரி நிலையங்களில் பிரிந்து வாழும் குடும்பத்தினர் தொடர்பில் மேலதிக விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. சரியான தகவல்கள் கிடைக்கப் பெறுமாயின் எஞ்சியிருப்பவர்களையும் அவர்களது குடும்பங்களுடன் இணைத்து வைக்க நடவடிக்கை எடுக் கப்படுமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா மேலும் தெரிவித்துள்ளார்- என்று உள்ளது. (அ-1)

# முகாமில் உள்ளவர்களில் ஒரு தொகுதியினரை உடன் விடுவிக்க சுதந்திரக்கட்சி நடவடிக்கை

## இன்று தெரிவு நடைபெறும் என்கிறார் இரத்தினேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜூலை 28

வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் முகாம்களில் இருப்பவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர்கள் தம்முடன் இணைக்க விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களில்ஒரு தொகுதியினரை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகளை முன்னெடுக்க கொழும்பில் இருந்து அதிகாரிகள் வந்துள்ளனர்.

யாழ். மாநகரசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிடும் ஆர்.இரத்தினேஸ்வரன் இத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் வெளியிட்டமை வருமாறு:-

யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியின் அதிபர் பி.யோகராஜன் தலைமையில் கல்லூரியின் மாணவர்களின் ஏற்பாட்டில் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் முகாம்களில் இருப்பவர்களை அழைத்து வந்து அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அமைச்சர் பியசேன கமகேயிடம் நேற்று விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டன. அவற்றில் ஒரு தொகுதியினரை இன்று செவ்வாய்க்கிழமை தெரிவுசெய்து உடன் விடுவிக்க எனது அலுவலகத்தில் பணிகள் இடம்பெறுகின்றது.

எனது வேண்டுகோளின்பெயரில் கொழும்பில் இருந்து அதிகாரிகள் இந்தப் பணிக்காக வந்து சேர்ந்துள்ளனர்-என்றார் அவர். (1)

# சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொகையை இடம்பெயர்ந்த மக்களுக்காகப் பயன்படுத்துக

## பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 28

''போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகளை மேம்படுத் துவதற்காகவே சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ள நிதியை இலங்கை அரசு பயன்படுத்த வேண்டும்''

- இவ்வாறு பிரான்ஸின் வெளிவிவகாரத்துறை அமைச்சு கோரிக்கை விடுத்தள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் அவர்களின் சொந்தக் குடிமனைகளுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதுடன், மனிதாபிமான அமைப்புகள் அவர்களுக்கான பணிகளை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கக் கூடாது எனவும் பிரான்ஸ் மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றது.

இலங்கைக்கு 250 கோடி டொலர்களைக் கடனாக வழங்குவதற்கான அங்கீகாரத்தை சர்வதேச நாணய நிதியம் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியது.

மனித உரிமை அமைப்புகள் பல உட்பட, பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் எதிர்ப்புக்கு மத்தியிலேயே இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.

'இந்தக் கடனைக் கொடுப்பதற்குப் பொருத்தமான தருணம் இதுவல்ல' என பிரிட்டன் ஏற்கனவே தெரிவித்திருந்தது.

இலங்கை அரசு கேட்டுக்கொண்டதைவிட 60 கோடி டொலர்களை அதிகமாகக் கொடுத்திருப்பதன் மூலம் - ஆயிரக்கணக்கான மக்களை முகாம்களில் அடைத்து வைத்திருக்கும் இலங்கை அரசின் மோசமான நடத்தைக்குக் கொடுக்கப்பட்டுள்ள வெகுமதியாகவே இதனைக் கருதவேண்டும் எனவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

தற்போது கடன் வழங்கப்பட்டுள்ள நிலையில், கள நிலைமைகள் ஏற்படும் முன்னேற்றங்கள் தொடர்பாகக் கண்காணிப்பதி லேயே பிரிட்டனின் கவனம் செலுத்தப்படும் என பிரிட்டன் நிதி அமைச்சர் ஸ்ரெபன் ரிம்ஸ் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை அரசு தனது பாதுகாப்புச் செலவீனங்களைக் குறைத்துக்கொள்வதில் அக்கறை செலுத்தும் அதேவேளையில், மனிதாபிமான நடவடிக்கைகளுக்குப் பெருமளவு நிதியைப் பயன்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றோம் என அவர் ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்திருக்கின்றார்.

விடுதலைப்புலிகளுடனான போரின் போது இடம்பெயர்ந்த சுமார் மூன்று லட்சம் மக்களை இலங்கை அரசு தடுத்து வைத்திருப்பதையிட்டு தமது கவலையை வெளிப்படுத்திய மனித உரிமைகள் கண்காணிப் பகத்தின் ஆசியப் பிராந்தியப் பணிப்பாளர், பிறட் அடம்ஸ் இலங்கைக்கான கடனை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் எடுத்த தீர்மானத்தைக் கடுமையாக விமர் சித்தார்.



இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை அவரது அமைச்சில் அண்மையில் சந்தித்து பேச்சு நடத்தினர். சங்கத் தூதுக்குழுவில் தலைவரான நா. இராஜநாதன், பொதுச்செயலாளர் த.மகாசிவம், துணைப் பொதுச்செயலாளர் மு.அருணகிரிநாதன், நிதிச்செயலாளர் சரா.புவனேஸ்வரன், நிர்வாகச் செயலாளர் தி.கணேசராஜா, மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் மு.தயானந்தன், மன்னார் மாவட்ட செயலாளர் ஏ.மடுத்தீன் ஆகியோர் கலந்துரையாடிக்கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

# எதிர்க்கட்சிகள் மலையகத்தில் இல்லை; எல்லா மக்களும் அரசுக்கே ஆதரவு

## கண்டியில் ஜனாதிபதி பெருமிதம்

கொழும்பு, ஜூலை 28

மலையகத்தில் எதிர்க்கட்சியென்ற ஒன்றே இல்லை எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் ஊவா மாகாணசபைத் தேர்தலில் மலையக மக்கள் அரசை வெற்றிபெறச் செய்வார்கள் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கண்டியில் உள்ள ஜனாதிபதியின் இல்லத்தில் பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்ச் சமூகத்தினரை சந்தித்த வேளை ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அதன்போது மேலும் தெரிவித்துள்ளதாவது :-

கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மலையக மக்களைப் பயன்படுத்தி வந்தனர்.

எனினும் இந்த வரலாறு தற்போது மாறியுள்ளது. தறபோது மலையக மக்கள் அரசின் முற்போக்குப் பணிகளில் நம்பிக்கை வைத்துள்ளனர்.தற்போதைய அரசு மலையக மக்களின் தேவைகள், அபிலாஷைகளைக் குறிப்பிடத்தக்க அளவில் பூர்த்தி செய்துள்ளது. நாட்டின் ஏனைய மக்கள் அனுபவிக்கும் அனைத்து வசதிகளை யும் மலையக மக்களுக்கு வழங்கியுள்ளது.

தற்போது அனைவரும் எதிர்க்கட்சியைக் கைவிட்டு, மோதல்களை மறந்து ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் கீழ் அணி திரண்டுள்ளனர்.

மலையகத்தில் எதிர்க்கட்சியினர் நிரப்புவதற்கான வெற்றிடம் எதுவுமில்லை.

மலையக மக்கள் நாட்டின் ஏனைய மக்களைப் போன்று சம உரிமைகளை அனுபவிக்கின்றனர். பொலிஸில் அவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். சர்வதேச அளவில் இராஜதந்திரிகளாக இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. (அ-சி)

# குறுகிய கால வெளிநாட்டுக் கடன்களே இலங்கையின் இக்கட்டு நிலைக்கு காரணம்

## நாணய நிதிய அதிகாரி கருத்து

கொழும்பு, ஜூலை 28

இலங்கை தனது வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்காக கடந்த காலங்களில் சர்வதேச ரீதியில் குறுகிய கால அடிப்படையில் பெற்ற கடன்களே அதன் இன்றைய இக்கட்டான நிலைக்கு காரணம் என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைக்கு நாணய நிதியம் வழங்கியுள்ள கடன், மோதலுக்கு பிந்திய புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கு உதவும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள இலங்கைக்கான நாணய நிதியக் குழுவின் தலைவர் பிரையன் அயசென் மேலும் தெரிவித் துள்ளவை வருமாறு:-

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடனான பொருளாதாரத் திட்டம் இலங்கையின் நாணயக் கையிருப்பை அதிகரிப்பதுடன் யுத்தத்திற்குப் பிந்திய புணர் நிர்மானப் பணிகளுக்கு ஆதரவு வழங்குவதற்கு உலக நாடுகளுக்கு அவசியமான கட்டமைப்பை வழங்கும்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதே அரசின் உடனடி முன்னுரிமைக்குரிய விடயமாக உள்ள போதிலும் எதிர்காலத்தில் புனர்நிர்மாண தேவைகள் உருவாகும்.

இது அரசுக்கு நிச்சயமாக மேலதிக வளங்களை வழங்கும். இதனைப் பயன்படுத்தி அரசு முக்கியமான மீள்கட்டுமான முயற்சிகளில் ஈடுபடலாம்.

இலங்கை குறுகிய கால அடிப்படையில் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு கொள் வனவுகளும், வரவு செலவு திட்டகடன்களுமே அதன் இன்றைய நிலைக்கு காரணம்.

இலங்கை பல வருடங்களாக உயர் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை எதிர் கொண்டுள்ளது.

இதன் காரணமாக அவர்கள் குறுகிய கால வெளிநாட்டுக் கொள்வனவில் ஈடுபட்டனர். இதனால் அவர்கள் தங்களை நிதியியல் ஆபத்தான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளனர் -என்றார்.

## வன்னி முகாம்களுக்குச் செல்ல அனுமதி கோரி

# ஐந்து எம்.பிக்கள் தாக்கல் செய்த மனு ஓகஸ்ட் 24ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 28

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா முகாம்களில் தங்கவைக்கப்பட்டோரின் முகாம்களுக்குத் தாங்கள் செல்வதற்கு உரிமையுண்டு என அறிவிக்கக் கோரி எதிரணியின் ஐந்து எம்.பிக்கள் கூட்டாகத் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கா, நிமால் காமினி அமரதுங்க, எஸ்.ஐ.இமாம் ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னரே ஒத்திவைக்கப்பட்டது.

ஜயலத் ஜயவர்த்தனா, மங்கள சமரவீர, லக்ஷ்மன் செனிவிரத்ன, மனோ கணேசன், ஹஸன் அலி ஆகிய ஐந்து எம்.பிக்களே இந்த மனுவைக் கூட்டாகத் தாக்கல் செய்திருந்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, சட்டமா அதிபர் உட்பட பலர் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

நேற்று இந்த மனு நீதிமன்றில் எடுக்கப்பட்டபோது அரசுத் தரப்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் இந்திரா தேவமுனி த சில்வா, மேற்படி மனு தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினதும், சட்டமா அதிபரினதும் கருத்து நிலைப்பாட்டை அறிந்து தெரிவிப்பதற்குக் கால அவகாசம் கோரினார்.

அதற்குக் கால அவகாசம் வழங்கும் விதத்தில் ஓகஸ்ட் 24ஆம் திகதிக்கு மனு மீதான பரிசீலனையை ஒத்திவைத்தது நீதி மன்றம். (சி)

# தென் மாகாணசபை கலைக்கப்படும்

தென்மாகாண சபை அடுத்த மாதம் 4ஆம் திகதி கலைக்கப்படும் எனவும் ஒக்டோபர் மாதத்தில் அதற்கானதேர்தல் நடாத்தப்படுமெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச் சபையை நாளை (29 ஆம் திகதி) கலைப்பதற்கு ஏற்கனவே தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதும் அது ஒரு சில தினங்களுக்குப் பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருவளைப் பள்ளிவாசல் சம்பவத்தில் சரணடைந்த 108 பேர் விளக்கமறியலில்

பேருவளை மஹகொடை மஸ்ஜிதுர் ரஹ்மான் பள்ளிவாசலில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாகக்களுத் துறை மேலதிக நீதிவான் சாந்தனி டயஸ் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட 103 சந்தேக நபர்களை எதிர் வரும் 29 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

இந்த 103 பேரும் சட்டத்தரணி பி. மானமடு மூலமாக பொலிஸாரிடம் சரண. டைந்துள்ளனர்.

நீதி மன்றத்தில் இடம் பெறவுள்ள அடையாள அணிவகுப்புக்கு இவர்களை உட்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். ஏற்கனவே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட28 சந்தேக நபர்களும் ஓகஸ்ட் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது உடைகளை அரச பகுப்பாய்வு பிரிவுக்கு அனுப்பி அறிக்கை சமர்ப்பிக் குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ரேுவளை மஹகொடவில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர். அத்தோடு 11 பேர் காய முற்றனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன. (சி)

## மாணவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அமைச்சர் கூறினார்.

பாடசாலைகளில் பணிபுரியும் கல்வி சாராத ஊழியர்கள் மூலம் மாணவர்கள் கையடக்கத் தொலைபேசி கொண்டு செல்வதனைத் தடுக்கும் புதிய நடைமுறை அமுல் செய்யப்படும் என்றும் அமைச்சர் அறிவித்துள்ளார். (அ-1)

## தபால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்களிப்பில் ஊழியர்கள் பெரிதும் அக்கறை காட்டவில்லை. மந்தமாகவே இருந்தது என்று தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பபாணம் மாநகர சபைக்கு 335 பேரும் வவுனியா நகரசபைக்கு 183 பேரும் வாக்களிக்க விண்ணப்பித்திருந்தனர்.

முதல்நாளான நேற்று வாக்களிப்பில் அவர்கள் அக்கறை காட்டவில்லை. இன்று இரண்டாவது நாளாக வாக்களிப்பு நடைபெறும்.

இதேவேளை-

ஊவாமாகாண சபைக்கான தேர்தலில் 55 சதவீதமாணவர்கள் நேற்று தபால் மூலம் வாக்களித்தனர் என்று தேர்தல் செயலகம் அறிவித்தது. (அ-1)

## வவுனியா நலன்புரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றன.

இந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைக்ளுக்காகவே இந்த விவரங்கள் உறுதிப்படுத்தப்பட்டு வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இடம்பெயர்ந்து தற்போது வவுனியா நலன்புரி நிலையங்களில் வசித்து வரும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். அதனை அடுத்தே யாழ். செயலகம் ஊடாக அவர் களது விவரங்களை உறுதிப்டுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குடும்பங்கள் யாழ். மாவட்டத்தில் வசித்த முகவரி, அவர்களின் வீடுகளின் நிலைமை ஆகியவற்றை பிரதேச செயலகங்களின் ஊடாக உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை யாழ். செயலகம் ஆரம்பித்துள்ளது.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களின் விவரங்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் யாழ் செயலகம் ஈடுபட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இதற்கென வவுனியா நலன்புரி நிலையங்களில் உள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களின் விவரங்கள் யாழ்.செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

அகதி முகாம்களிலுள்ள குடும்பங்கள் யாழ். மாவட்டத்தில் வ்கித்த முகவரி, அவர்களின் வீடுகளின் நிலைமை ஆகியவற்றைப் பிரதேச செயலகங்களின் ஊடாக உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை யாழ். செயலகம் ஆரம்பித்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக மீள் குடியேற்றுவதற்கு விருப்பம் தெரிவித்தவர்களின் விவரங்கள் யாழ். செயலகம் ஊடாக பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுக் கிராம அலுவலகங்கள் மூலம் அவற்றை உறுதிப்படுத்தி அறிக்கை விடும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது. (50-68)

## யாழ்.நகர......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். தேர்தல் நிலைவரம் தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

யாழ். மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் தற்போது தங்கள் தேர்தல் பிரசாரநடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. யாழ். நகரத்தின் அனைத்து வீதிகளிலும் தேர்தல் சுவர் ஒட்டிகளைக் காணக்கூடியதாக உள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களை விட இங்கு தேர்தல் பிரச்சாரத்திற்காக மாபெரும் பதாகைகள் மற்றும் 'கட்அவுட்' என்பன பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

யாழ் நகரத்தில் எந்த ஒரு அரசியல் கட்சியும் இதுவரையில் பெரிய அளவில் பிரசாரக் கூட்டங்களை சென்றவார இறுதி வரை நடத்தாததுடன், சிறிய குழுக்களாக சிறிய கூட்டங்களை நடத்துகின்றன.

எவ்வாறாயினும் தேர்தல் தொடர்பில் யாழ்.மநகரமக்கள் மத்தியில் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை என்பது முக்கிய விடயமாகும்- என்று உள்ளது. (அ-சி)

## வவுனியா அகதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவி அமைச்சர் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

முகாம்களின் நிலைமையை நேற்று முன்தினம் பார்வையிட்ட பின்னர் அவர் ஜனாதிபதி உட்பட உயர்மட்டத் தலை வர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதாக அவர் சொன்னார்.

இடம்பெயர்ந்த மக்கள் அடுத்த மாதமளவில் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டு விடுவார்கள் என்று இலங்கை அதிகாரிகள் தம்மிடம் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

இப்போது இவர்கள் தற்காலிகமாகவே தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தம்மிடம் தெரிவித்த அதிகாரிகள், மீள் குடியமர்வு பூர்த்தியானதும் நேரில் வந்து பார்வையிடுமாறு தமக்கு அழைப்பு விடுத்துள்ளதாகவும் கூறினார்.

மக்களின் மீள் குடியமர்விலேயே அமெரிக்கா கரிசனையாக இருக்கிறது. அதற்கு தேவையான உதவிகளை வழங்க அமெரிக்கா தயாராக இருக்கிறது.

நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்கு எட்டு மில்லியன் டொலர்களை வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (அ-1)

## விமானப் படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடவைகள் நடத்தப்படவுள்ளன. அதே சமயம் இருவழிப் பாதைக்குமான கட்டணமாக 19 ஆயிரத்து 100 ரூபா அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை மற்றும் சிகிரியா ஆகிய நகரங்களுக்கு விமான சேவைகளும் நடத்தப்படவுள்ளன. வாரமொரு முறை நடத்தப்படவுள்ள இச்சேவை ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 8 மணிக்கு இரத்மலானையிலிருந்து ஆரம்பமாகும். திருகோணமலைக்கு இருவழிப் பாதைக் கட்டணமாக 15 ஆயிரத்து 300 ரூபாவும் சிகிரியாவுக்கு இருவழிப் பாதைக் கட்டணமாக 9 ஆயிரம் ரூபாவும் அறவிடப்படும்.

கொழும்பிலுள்ள விமானப் படைத் தலைமையகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் விமான சேவை அனுமதிப்பத்திர கருமபீடத்தில் தினமும் காலை 8 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை சகல விமான சேவைகளுக்குமான அனுமதிப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். இதே வேளை, இவ்வாரம் யாழ். அதிஉயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியிலும் விமான அனுமதிப்பத்திர கருமபீடமொன்று திறக்கப்படவுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான 4 ஹெலிகொப்டர்களும், 2 விமானங்களும் திருகோணமலை, யாழ்ப்பாணம், சிகிரியா ஆகிய இடங்களுக்கு உள்ளூர் சேவையை வழங்கவுள்ளன. (அ-சி)

## அருத்த வருட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த வரவு - செலவுத் திட்டத்தை இவ்வருடம் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பாரெனவும் அவ்வரவு - செலவுத் திட்டத்தில் கடந்த 30 வருட கால மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னேற்றுதல், சொந்த இடங்களை விட்டுச் சென்று அகதிகளாக அல்லலுறும் மற்றும் முகாம்களில் த்டுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களை சொந்த இடங்களில் மீளக் குடியேற்றுதல் உட்பட அம்மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் பணிகளுக்கே முன்னுரிமை அளிப்பார் எனவும் - தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல், அவர்களுக்குப் புனர்வாழ்வு அளித்தல், வடக்கு, கிழக்கு யுத்தத்தால் அழிந்த மற்றும் சேதமடைந்த இடங்களை புனர்நிர்மாணம் செய்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் கண்ணிவெடிகளை அகற்றுதல் ஆகிய திட்டங்களுக்கு அதீக நிதி ஒதுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான பூர்வாங்க நட்வடிக்கையாக நிதியமைச்சு வரவு- செலவுத் திட்டம் தொடர்பாக சுற்றுநிருபம் ஒன்றைத் தயாரித்துள்ளது. அச்சுற்று நிருபம் எல்லா அமைச்சுகளுக்கும், எல்லா அரச நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அடுத்த வரவு- செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் அபிவிருத்திக்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## வவுனிய ா வரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் இடம் பெற்ற இந்த விசேட கூட்டத்தில் வடக்கில் உடன் மேற்கொள்ளவேண்டிய திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி அரச அதிபர்கள், ஜனாதிபதியின் ஆலோசகர் சந்திரா பெர்னாண்டோ, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பி.திவாரத்தின மற்றும் படை அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அங்கு பரிசீலனைக்கு எடுக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் வருமாறு:-

✱ வடக்கின் வசந்தம் திட்டங்களை உடன் விரைவாக முன்னெடுத்து வடக்கு மக்களின் வாழ்க்கைச் செலவை குறைக்க வேண்டும் என்று ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். அதனை தங்கு தடையின்றி நடைமுறைப்படுத்துவதற்கு சகல அரச அதிகாரிகளும் திட்டங்களில் முழுமையாக பங்களிக்க வேண்டும் என்று ஆளுநர் வலியுறுத்தினார்.

✱ ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவும் இந்த திட்டங்களை மக்களுக்கு பயன் தரக்கூடிய வகையில் ஒவ்வொரு அதிகாரியும், படையினரும் பங்களிக்க வேண்டும் என கேட்டுள்ளார் என்றும் ஆளுநர் சுட்டிக் காட்டினார்

✱ ஏ-9 வீதியூடாக லொறிகள் மூலம் பொருள்களை அனுப்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் கப்பல் கட்டணத்துக்கு வழங்கிய தொகை மீதமாக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக பொருள்களின் விலைகள் வீழ்ச்சியடைய வழி ஏற்படும் என்று ஆளுநர் பிரஸ்தாபித்தார்.

✱ மீள் குடியமர்வுக்குத் தேவையான பொருள்களை எடுத்துச் செல்ல முன்னுரிமை வழங்குதல்

✱ யாழ்ப்பாணத்தில் இருந்து குளிரூட்டி பொருத்தப்பட்ட பத்து லொறிகளிலும் இரண்டு தனியாரின் லொறிகளிலும் கடல் உணவுகள் தெற்கே எடுத்துச் செல்லப்படுவதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார். மேலும் எட்டு வாகனங்களை சி.டபிள்யூ.ஈ நிறுவனத்திடம் பெற்று 20 வாகனங்களில் கடல் உணவுகள் எடுத்து வர ஏற்பாடு செய்ய முடிவாகியுள்ளது.

✱ ஒன்று விட்ட ஒரு நாள் 40 லொறிகளில் மரக்கறி, பழம், கருவாடு, புகையிலை, மீன், வெங்காயம், போன்றவை குடாநாட்டில் இருந்து கொழும்புக்கு அனுப்பப்படுவதாக யாழ். அரச அதிபர் கே.கணேஸ் கூறினார்.

✱ கொழும்பு-யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபட 600 லொறி உரிமையாளர்கள் அனுமதி கேட்டுள்ளனர். அவற்றில் 180 லொறிகள் யாழ்ப்பாணத்திலிருந்து வர அனுமதி கேட்டுள்ளன. அவற்றுக்கு யாழ். அரச அதிபர்ஊடாக பாதுகாப்பு அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.

✱ கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பஸ்சேவையை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

✱ ஏ9 வீதி ஊடாக சகல பொருள்களையும் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது என்று அத்தியாவசிய சேவைகள் நாயகம் தெரிவித்தார். சீமெந்து, பென்ரோச் பற்றறிகள் மற்றும் மதுபானங்கள் கூட எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படுவதாக அவர் கூறினார். (அ-1)


**கருத்தரங்கு**
புவியியல்
S.P. கரன்
31.7.2009
1.8.2009
காலை 9மணி
வெளி மாணவருக்கும் அனுமதி
யூனிவேர்சல் யா/இந்து மகளிர் கல்லூரி அருகே

**விசேட கருத்தரங்கு**
வணிகக்கல்வி- திரு. S. யசோ
30.07.2009, 31.07.2009 2 p.m.
நடைமுறை விடயங்கள்
வெளிமாணவருக்கும் அனுமதி
யூனிவேர்சல் யா/ இந்து மகளிர் கல்லூரி அருகே

**கருத்தரங்கு**
தமிழ்
திரு. குழந்தை
3.8.2009
4.8.2009
காலை 9மணி
வெளி மாணவரும் பங்குபற்றலாம்.
யூனிவேர்சல்

**PHYSICS**
இலவச கருத்தரங்கு
2009
(விசாகா கல்லூரி வினாத்தாள் உட்பட)
ஜூலை 29, 30, 31 4-6 p.m.
இடநெருக்கடி காரணமாக பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்.
BY: K. Selvan
NEC பெருமாள் கோயில் அருகில்

**வீடு அல்லது கட்டடம் உடன் தேவை**
பிரபல நிறுவனம் ஒன்றிற்கு யாழ். நகரப் பகுதியில் இருந்து 2கிலோ மீற்றருக்கு உட்பட்டதாக இரண்டு வாகனங்கள் நிறுத்தக்கூடியதாக குறைந்தது 300 சதுர அடி இட அளவு உடையதாக சுற்று மதிலுடன் கூடிய வீடு அல்லது கட்டடம் உடன்தேவை.
தொடர்புகளுக்கு:- 0775943363



**கண்காட்சியும் விற்பனையும்**
வாடிக்கையாளர்களுக்கோர் நற்செய்தி...
நல்லூர் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலயப் பின்பகுதியில் (றியோ ஐஸ்கிறிம் கடைக்கு அருகில்) பிரமாண்டமான இடவசதியுடன் உங்களுக்கு தேவையானவற்றை நீங்களே தெரிவுசெய்து பெற்றுக்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள சகல வெளியீட்டுப் பிரிவுகளின் புத்தகங்களையும் ஒரே இடத்தில் பார்வையிட ஓர் அரிய சந்தர்ப்பம் மற்றும் பல்துறைசார்ந்த இந்தியப் புத்தகங்கள், கம்பியூட்டர் புத்தங்கள், சிறுவர்களுக்கான CD, DVD, பைல் வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகள் , நூலகங்கள், நகரசபை, பிரதேசசபை மற்றும் தனியார் வர்த்தகர்களுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.
அன்னை புத்தகசாலை சிறப்பு விற்பனை நிலையம், நல்லூர். [றியோ ஐஸ்கிறிம் கடைக்கு அருகில்]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்
நற்சிந்தனை
“கல்விக்காக எதையும் தியாகம் செய் எதற்காகவும் கல்வியைத் தியாகம் செய்யாதே!”

க.பொ.த.உயர்தர
கல்விச்சுடர்
28.07.2009 22 செவ்வாய்க்கிழமை
Special Guidance For A/L 2009&2010

க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும்
கல்வி இணைப்பிதழ்

யாழ்.ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் S.தங்கராஜாவின் வழிகாட்டலில்
S.T.ஜனார்த்தனன் தொகுத்து வழங்கும்

க.பொ.த உயர்தரப் பரீட்சை வினாத்தாள் - 2009

# பொது இரசாயனம் - 01

## பகுதி - 11 A

### அமைப்புக்கட்டுரை வினாக்கள்

01. அ. ஆவர்த்தன அட்டவணையில் உள்ள A, B, C என்ற அடுத்தடுத்த மூலகங்களின் முதல் மூன்று அயனாக்கற் சக்திப் பெறுமானங்கள் பின்வருமாறு. (KJ/mol)

| | 1ஆவது | 2 ஆவது | 3ஆவது |
|---|---|---|---|
| A | 494 | 4564 | 6924 |
| B | 744 | 1464 | 7750 |
| C | 578 | 1811 | 2745 |

1) மூலகம் B எக்கூட்டத்தைச் சேர்ந்தது?

.....................................................................

உமது விடைக்குரிய காரணத்தைத் தருக.

.....................................................................

2) அணு ஆரை கூடிய மூலகம் எது?

.....................................................................

உமது தெரிவுக்குரிய காரணத்தைத் தருக.

.....................................................................

3) மூலகம் C மூன்றாவது ஆவர்த்தனத்தைச் சேர்ந்ததாயின் அது ஆக்கும் முந்நேரான அயனின் இலத்திரன் நிலையமைப்பை $1S^2$, $2S^2$..... வடிவில் தருக.

.....................................................................

ஆ. 1) அணு எண் 29 ஐக் கொண்ட $1S^2$, $2S^2$ என்ற மூலகத்தின் இலத்திரன் அமைப்பை 1 வடிவில் தருக.

.....................................................................

2) இது எந்தத் தொகுப்பைச் சேர்ந்த மூலகம்?

.....................................................................

02. 1) அணுவெண் 11 - 18 வரையான மூலகங்களுக்கு மூன்றாம் அயனாக்கற் சக்தி அணுவெண் வரைபினை வரைக.

.....................................................................

2) $AX_4E0$, $AX_4E_1$, $AX_4E_2$ என்ற குறியீடுகளை உடைய VSERR கொள்கைக்கு அமைவான A ஆனது முறையே 2ஆம் ஆவர்த்தன, 3ஆம் ஆவர்த்தன, 5ஆம் ஆவர்த்தன மூலகங்களைக் கருத்தில் கொண்டு X ஆனது ஒரே அணுவாகக் கொண்டு எழுதுக.

.....................................................................

3) ICl, $Br_2$ என்பவற்றின் சார்மூலக்கூற்றுத்திணிவு சமனாகவுள்ள போதும் ICl இன் கொதி நிலை $Br_2$ இன் கொதிநிலையிலும் உயர்வாகும். இதற்கான காரணம்,

.....................................................................

03. 1) 1. A, B, C, D என்பன 3ஆம் ஆவர்த்தன மூலகங்களாகும். அவற்றின் அடுத்துள்ள H அயனாக்கற் சக்திப் பெறுமானங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மூலகம் | $I_1$ / $KJmol^{-1}$ | $I_2$ / $KJmol^{-1}$ | $I_3$ / $KJmol^{-1}$ | $I_4$ / $KJmol^{-1}$ |
|---|---|---|---|---|
| A | 1060 | 1900 | 2920 | 4960 |
| B | 786 | 1580 | 3230 | 4360 |
| C | 736 | 4050 | 7740 | 10500 |
| D | 577 | 1820 | 2740 | 11600 |

A, B, C, D எக்கூட்டத்தைச் சேர்ந்தவை எனத் தனித்தனியாக உய்த்தறிந்து குறிப்பிடுக.

.....................................................................

2. A, B, C; D இன் குறியீடுகளைத் தருக.

.....................................................................

2) 1. திரவ HF இல் HF பிணைப்பு காணப்படுகிறது. பங்கீட்டு வலுப்பிணைப்பினை கோட்டாலும் H பிணைப்பினை கோட்டாலும் அணுக்கள் அமைந்துள்ள முறையில் வரைந்து காட்டுக.

.....................................................................

.....................................................................

.....................................................................

2. திண்மப் பனிக்கட்டியில் H- பிணைப்புக் காரணமாக ஒரு ஒட்சிசன் அணுவைச் சுற்றி உள்ள O அணுக்கள் எவ்வாறு அமைந்துள்ளன? அதனை வரைந்து காட்டுக.

.....................................................................

.....................................................................

.....................................................................

3) $SiO_2$ அறை வெப்பநிலையில் உருகுநிலை கூடிய திண்மமாகவும், $CO_2$ அறை வெப்ப நிலையில் கொதிநிலை குறைந்த வாயுவாகவும் காணப்படுகின்றன. இத்தோற்றப்பாடுகளை விளக்குக.


.....................................................................

.....................................................................

04. 1) தரப்பட்டுள்ள இடைவெளிகளில் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.

H காலல் நிறமாலையில் பாமர் தொடர்க் கோடுகளைக் கருதும்போது அவை ................................ அதிகரிக்கும் திசையில் விலகிச் செல்லுகின்றன. லைமன் தொடர் கோடுகள் ......................... பகுதியில் விழுகின்றன. இவை H அணுவின் ......................... சக்தி மட்டத்திற்கு இலத்திரன்கள் ........................................ சக்தி மட்டங்களிலிருந்து ................................ போது சக்திக்கு ஏற்ப ........................................ படுத்தப்பட்ட கோடுகளாகும். லைமன் தொடரில் சக்தி குறைந்த காலலுக்குரிய இரு கோடுகளுக்கான இடைவெளியானது பாமர் தொடரில் சக்தி குறைந்த காலலுக்குரிய இரு கோடுகளுக்குரிய இடைவெளியிலும் .................................... ஆகும். பசன், பாமர், லைமன் தொடர்களில் மிகவும் சக்தி குறைந்த காலலுக்குரிய கோடுகள் அலை நீளம் அதிகரிக்கும் திசையில் ................................ செல்லும் லைமன் தொடர்கோடுகளுள் பாமர் தொடர்கோடுகள் கலந்து ........................................

2) A,B,C,D,E என்பன நான்கு மூலகங்களைக் குறிக்கின்றன. அவற்றின் மின்னெதிர் இயல்புப் பெறுமானங்கள் முறையே 4.0, 3.5, 3.0, 2.5, 2.1 ஆகும். கீழ்தரப்படும் கட்டமைப்பைப் பயன்படுத்தி கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.




| அணு | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| ஒட்சியேற்ற எண் | | | | | |
| வலுவளவு | | | | | |

3) $NH_3$, $SF_6$ மூலக்கூறுகளின் வடிவங்களை உய்த்தறிக.

.....................................................................

.....................................................................

.....................................................................

05. 1) A,B,C,D,E,F,G,H,I என்பன ஆவர்த்தன அட்டவணையில் அணுவண் ஒழுங்கில் அமையாத அடுத்துவரும் மூலகங்களின் முதலாம் அயனாக்கற் சக்திகள் ஆகும். இம் மூலகங்கள் இரண்டாம், மூன்றாம் ஆவர்த்தனத்தைச் சேர்ந்தவையாகும். முதலாம் அயனாக்கற் சக்திகள் முறையே 2080, 1681, 1402, 1314, 1086, 800, 738, 577, 496 ($KJmol^{-1}$இல்) ஆகும். இவற்றில் ஒரே கூட்ட மூலகங்களில் ஒன்று உலோகம். மற்றையது அல்லுலோகம் ஆகும். A,B, ..................... I வரையான மூலகங்களுக்கான கூட்டங்களை இனங்காண்க.

.....................................................................

.....................................................................

.....................................................................

2) திணிவுத் திருசியமானியில் பாகங்களின் செயற்பாட்டினை விளக்குக.

1. அயனாக்கும் அறை:-

.....................................................................

2. ஆர்முடுகல் அவைக்கும் அறை :-

.....................................................................


3. காந்தப்புலம் :-

.....................................................................

4. அயன் உணரி:-

.....................................................................

3) கீழே திணிவுத்திருசியம் ஒன்று தரப்படுகின்றது




1. தரப்பட்ட திருசியத்திற்குப் பொருத்தமான மூலக்கூறு எதுவாகும்?
($CO_2$, $C_3H_8$, $N_2O$, $CH_4$, CO
பொருத்தமான மூலக்கூறின் கீழ்க்கோடிடுக.

2. மேலே உள்ள திருசியத்தில் உள்ள திணிவுகளுக்குக் காரணமான அயன்கள் எது?

| திணிவு | காரணமான அயன் |
|---|---|
| 14 | ................................ |
| 16 | ................................ |
| 28 | ................................ |
| 44 | ................................ |

06. 1) அணுவெண் 20இற்கு உட்பட்ட A, B,G, E, J எனும் அடுத்தடுத்து ஆவர்த்தன அட்டவணையில் அமையும் மூலகங்களில் J ஆனது உருவாக்கக்கூடிய ஒட்சைட்டு $J_2O_3$ எனும் மூலக் கூற்றுச்சூத்திரம் உடையது.

1. J இற்கு சாத்தியமான கூட்டம் யாது?/ கூட்டங்கள் யாவை?
மு.கு :- தவறான விடைக்கு புள்ளிகள் கழிக்கப்படும்.

.....................................................................

2. J ஆனது அறைவெப்பநிலையில் ஈரலிப்பான வளியில் விரைவாக தீப்பற்றி எரிந்து ஒட்சையிட்டினை உருவாக்கக்கூடியது. ஆனால் நீருடன் தாக்கமற்றது. எனின், J இன் இலத்திரன் நிலையமைப்பினை வழமையான 1S ................. வடிவில் தருக.

.....................................................................

3. J இன் ஒட்சைட்டு ஆனது மூலகம் A இன் ஐதரொட்சைட்டு நீர்க்கரைசலுடன் தாக்க முறும் இத்தாக்கத்திற்கான ஈடு செய்த சமன்பாட்டைத் தருக.

.....................................................................

.....................................................................

2) 1. $IF_3$ எனும் சேர்வைக்குச் சாத்தியமான கேத்திரகணித வடிவத்தை/ வடிவங்களை வரைக.
மு.கு :- தனிச்சோடி இலத்திரன்கள் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். உறுதியற்ற வடிவமும் கருதப்படலாம்.

.....................................................................

.....................................................................

.....................................................................

2. பின்வரும் சேர்வைகளின் லூசியின் கட்டமைப்பினை (புள்ளி - புள்ளடி) தருக.

அ. $NaNO_2$ - ........................................

ஆ. $O_3$ - ........................................

இ. CO -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

ஆசிரிய ஆலோசகர்சங்க ஆனுசரனையுடன் கல்விவளவாளர் நிலையம் நடத்திய முன்னோடிப்பரீட்சை

**வணிகக்கல்வி-01** நேரம் - 3 மணித்தியாலம்

## பகுதி-1

*** 01 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு விடையளிக்கும்போது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

1. பின்வருவனவற்றுள் எது ஒரு வணிகத்தில் உடைமையாளர் அக்கறை கொள்வதற்கான காரணம்ஆகும்?
   1. உறுதித்தன்மை 2. தொழில் திருப்தி 3. கொடுப்பனவுகள்
   4. சந்தைப்பங்கு 5. வேலை வாய்ப்பு

2. தேவைக்கான தீர்வு:
   1. விருப்பம் 2. கேள்வி 3. திருப்தி
   4. உற்பத்தி 5. வணிகம்

3. பின்வருவனவற்றுள் எது ஒரு உற்பத்தி வளம் தொடர்பாக தவறானது ஆகும்?
   1. இயற்கைவளம் 2. உழைப்பு 3. அறிவு
   4. நிகழ்வு 5. முயற்சியாண்மை

4. ஒரு வணிக நிறுவனத்தின் விரிவானதும் நீண்டகாலத்திலானதுமான வீச்சிலான ( Broad, long- range) அடைவு வெளிப்படுத்துவது:
   1. இலக்கு 2. குறிக்கோள் 3. தூரநோக்கு
   4. இலட்சியநோக்கு 4. உபாயமார்க்கம்

5. பின்வருவனவற்றுள் எப்பேரண்டச் சூழல் காரணி அதிகளவு வணிக வாய்ப்புக்களைத் தோற்றுவித்துள்ளது?
   1. பொருளாதாரச்சூழல் 2. பூகோளச்சூழல் 3. தொழில்நுட்பச்சூழல்
   4. மக்கட்சூழல் 5. இயற்கைச்சூழல்

6. இலங்கை அரசாங்கத்தின் பிசிக்கால் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாக உள்ள அமைப்பு எது?
   1. திறைசேரி 2. அரச வர்த்தகவங்கி 3. இலங்கை மத்திய வங்கி
   4. நிதித்திட்டமிடல் அமைச்சு 5. உள்நாட்டு இறைவரித்திணைக்களம்

7. SA 5000 என்பதனை வெளிப்படுத்தும் சர்வதேச தரம்:
   1. சூழல் பாதுகாப்பு முகாமை 2. உற்பத்தித்தர முகாமை
   3. சமூக பொறுப்பு முகாமை 4. கணக்காய்வு முகாமை
   5. செயற்கை முகாமை

8. பின்வருவனவற்றுள் எது கூட்டுறவு தொடர்பான பெறுமதிகளில் தவறானது:
   1. சுய உதவி 2. சுயபொறுப்பு 3. பங்களிப்புபகிர்வு
   4. ஜனநாயகம் 5. சமத்துவம்

9. வரையறுத்த கம்பனியின் அனுகூலம் ஒன்றாகக் கருத முடியாது:
   1. வரையறுத்த பொறுப்பு 2. உரிமைமாற்றும் வசதி
   3. நிதி பெறும் வாய்ப்பு 4. இடையறாவழி உரிமை
   5. இலகுவாக உருவாக்கக்கூடிய தன்மை

10. வெளிநாட்டுக் கம்பனி (Overseas Company ) என்பது:
    1. ஒன்றுக்குமேற்பட்ட நாடுகளில் நடவடிக்கை மேற்கொள்ளும் ஒரு கம்பனி ஆகும்.
    2. வெளிநாடுகளில் தொழிற்படுவதற்கு இலங்கையில் பதிவு செய்துள்ள கம்பனி ஆகும்.
    3. வெளிநாட்டில் உருவாக்கப்பட்டு இலங்கையில் தொழிற்படும் கம்பனி ஆகும்.
    4. வெளிநாடுகளில் இருந்து மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் ஒரு கம்பனி ஆகும்.
    5. பங்குச்சந்தையில் பங்கு விற்பனை செய்யத் தகுதியுள்ள கம்பனி ஆகும்.

11. கேட்டவுடன் செலுத்தமுடியாததும் அவதானநிலை காணப்படுவதுமான பணம் குறிப்பது:
    1. பண்டப்பணம் 2. கடன்பணம் 3. கட்டளைப் பணம்
    4. நியமப்பணம் 5. வங்கிப்பணம்

12. பின்வருவனவற்றுள் எது ஒரு உரிம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாகக் கருதப்படமுடியாது?
    1. தேசிய சேமிப்பு வங்கி 2. வரையறுத்த தேசிய அபிவிருத்தி வங்கி
    3. வரையறுத்த சனச அபிவிருத்தி வங்கி 4. DFCC வங்கி
    5. அரச ஈட்டு முதலீட்டு வங்கி

13. ஆயுளுறுதி, தனிப்பட்ட விபத்தக்காப்புறுதி, உடல் நலக்காப்புறுதி என்பவற்றுக்குப் பொருத்தமற்ற தத்துவம் எது?
    1. அண்மைக் காரணத்துவம் 2. இழப்பீடு
    3. மிக்குயர் நம்பிக்கை 4. காப்புறுத்தும் உரிமை
    5. மேற்குறித்த அனைத்தும்

14. இயலளவு தொடர்பாகவும் கிரயம் தொடர்பாகவும் மிகவும் அனுகூலமான போக்குவரத்து எது?
    1. நீர் வழி 2. விமானப்போக்குவரத்து 3. தெருந்தெரு
    4. புகையிரதம் 5. குழாய்வழி

15. தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படை அம்சமாகக் கருதமுடியாதது எது?
    1. செய்தி அனுப்புவர் 2. செய்தி 3. சந்தர்ப்பம்
    4. வாய்மொழி 5. பின்னூட்டல்

16. பொருட்களைத் தம்மிடம் வைத்திருந்து உற்பத்தியாளருக்காக பொருட்களை விற்பனை செய்யும் முகவர்:
    1. விற்பனை முகவர் 2. தரகர் 3. தரகு முகவர்
    4. உற்பத்தி முகவர் 5. ஏலவர்

17. சென்மதி நிலுவையின் நடைமுறை கணக்கில் உள்ளடங்குபவற்றில் தவறானது எது?
    1. நிதிக் கணக்கு 2. பண்டக்கணக்கு 3. சேவைக் கணக்கு
    4. வருமான கணக்கு 5. மாற்றல் கணக்கு

18. சர்வதேச நாணய நிதியத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?
    1. ஐக்கிய அமெரிக்காவில் வாசிங்டன் 2. இங்கிலாந்தில் லண்டன்
    3. பிரான்ஸில் பாரிஸ் 4. சுவிற்லாந்தில் ஜெனிவா
    5. ஜப்பானின் ரோக்கியோ

19. நிகழ்கால வேலைகளை நிறைவேற்றுவதற்கும் வரலாற்று அறிக்கைகளைப் பேணுவதற்கும் பயன்படுத்தப்படும் தகவல் முறை.
    1. பரிமாற்ற முறை வழியாக்க முறைமை 2. தீர்மான ஆதார முறைமை
    3. நிறைவேற்றுனர் ஆதார முறைமை 4. அறிவு வேலை முறைமை
    5. முகாமைத்தகவல் முறை

20. பின்வருவனவற்றுள் எது வெப்தள விபரக்கொத்துக்களை (WEB Directories ) உள்ளடக்கிய தொகுதி எது?
    1. Allthe Web / MSN / Teoma.
    2. About / Beacoup / Google.
    3. Askjeeves / Google / Yahoo.
    4. About / Beacoup / Opendictory.
    5. Internet Public Libruary / Opendirectory / Altavista

**21 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களைநிரப்பி விடையளிக்குக.**

21. வணிக நிறுவனத்தின் விவேகச் செயற்பாடுகளின் திரட்சி .................................... என அழைக்கப்படும்.

22. புவிமாநாட்டு அங்கத்துவ நாடுகள் சூழல்பாதுகாப்பு தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை.................................... என அழைக்கப்படும்.

23. வணிகத்தின் இலாபத்தன்மையினைப் பாதுகாப்பதற்குப் பேணப்படும் சொத்துக்கள் .................................... ஆகும்.

24. பங்குடமைக்குத் தேவையான மூலதனத்தை ஈடுபடுத்தி நிர்வாகத்தில் பங்குபற்றாத வெளிநபர் அறிந்துள்ளபங்காளர் .................................... ஆவார்.

25. ஒரு கம்பனி இன்னுமொரு கம்பனியின் மூலதனத்தில் பெரும்பகுதி பங்குகளை கொள்வனவு செய்து குறித்த கம்பனியைக் கட்டுப்படுத்துதல்.................................... ஆகும்.

26. குறிப்பிட்ட நபருடைய வைப்பை ஏற்று வேறு ஒருவருக்கு குறித்த பணத்தொகையை கொடுப்பனவு செய்வதற்கு உடன்பட்டு நிதி நிறுவனங்கள் பிறப்பிக்கும் ஆவணம் ....................................ஆகும்.

27. சிறப்புத்தேர்ச்சிமூலம் ஒரு நாடு 1. .................................... 2. .................................... போன்ற நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

28. இணைய (Internet) சேவையை இணைக்கும் இடைநடுவர் .................................... ஆகும்.

29. கணனி முறைமையொன்றிலே பயன்படுத்தப்படும் பௌதீக உபகரணங்கள் .................................... என்படும்.

30. முகாமைத்தகவல் ஆனது 1. .................................... 2. .................................... 3. .................................... எனப்படும்.

*** 31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.**

31. அடிப்படைத் தேவைகளின் நான்கு வகைகளையும் பெயரிடுக.
    1. .................................... 2. ....................................
    3. .................................... 4. ....................................

32. நேரில் உற்பத்தியின் வகைகள் மூன்றும் எவை?
    1. ....................................
    2. ....................................
    3. ....................................

33. ''பபவாஅ'' (SWOT) ஆய்வின் பகுதிகளைக் குறிப்பிடுக.
    ....................................

34. 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனி சட்டப்படி நிர்வாகம் மற்றும் சட்டம் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்கு உருவாக்கப்பட்ட அமைப்பு எது?

35. ISO தரத்திற்கு அமைவாக அறிமுகப்படுத்தப்பட்ட கடன் அட்டை எவ்வாறு அழைக்கப்படும்?
    ....................................

36. நாணயமாற்று வீதத்தில் ஏற்படும் மாற்றத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் சுட்டெண்கள் எவை?
    ....................................

37. பல்வேறு வகையான உணவு பாணவகைமற்றும் பல்வேறு உற்பத்திகளை உற்பத்தி செய்பவர் மேற்கொள்ள வேண்டிய காப்புறுதி ஒப்பந்தவகை எது?
    ....................................

38. தலாவருமானத்துக்கு அமைய உலகின் மிகப்பாரிய பிராந்திய சங்கம் எது?
    ....................................

39. தகவல் தயாரிப்பதற்கான தொழில் நுட்பமுறைகள் யாவை?
    ....................................

40. தரவுப் பணியாளர்களைக் குறிப்பிடுக.
    ....................................

## பகுதி-11

*** 01 ஆம், 2 ஆம் வினாக்கள் உட்பட நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. அ) 1. வணிகமொன்றின் வெற்றிகரத்தன்மை என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
2. உற்பத்திகளை வகைப்படுத்தும் அடிப்படையையும் அவற்றின் உபபிரிவுகளையும் குறிப்பிடுக.
ஆ) 1. புவிமாநாடு (Earth sumit)என்பதன் மூலம் கருத்திற் கொள்ளப்படும் காரணிகள் யாவை?
2. நுண்ணறிவுச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள் எவை?
இ) தற்காலத்தில் சேவை உற்பத்தியின் பங்களிப்பு உயர்ந்த மட்டத்தில் இருப்பதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு விளக்குக.
ஈ) பணவீக்கத்தில் பணக்கொள்கைக் கருவிகள் ஏற்படுத்தும் தாக்கத்தினை அட்டவணை வடிவில் விளக்குக.
உ) 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கு அமைய கம்பனிகளின் அடிப்படையான வகைகளையும், வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் வகைகளையும் தனித்தனியாகக் குறிப்பிடுக.
ஊ) தனியுடைமை வணிகங்களின் அனுகூலங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

02. அ) பின்வருவனபற்றிச் சிறுகுறிப்புக்கள் எழுதுக.
1. கட்டளைப் பணம் (FIAT Money) 2.பண்டப் பணம் (Commondity Money)
3. கடன் பணம் (Credit Money)
ஆ) 1. வரவட்டை (Debit Card) முன்புறத்தில் (Front side) காணப்படும் தகவல்களைக் குறிப்பிடுக.
இ) 1. மறுகாப்புறுதிக்கும் (Re Insurance), ஒப்புறுதி (Underwriting) என்பவற்றுக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக.
2. மறுகாப்புறுதிக்கும் மூலம் காப்புறுதிக்கம்பனிக்கு கிடைக்கும் அனுகூலங்கள் யாவை?
ஈ) 1. பூகோளச்சந்தைக்குள் நுழைவதன் மூலம் இலங்கைக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்களைக் குறிப்பிடுக.
2. பூகோள வியாபார நடவடிக்கை பிரதான தடைகள் எவை?
உ) இலத்திரன் வர்த்தகத்திற்கும் (E- Commerce ), இலத்திரன் வணிகத்திற்கும் (E- Business) இடையிலான வேறுபாட்டினை விளக்குக.
ஊ) நடமாடும் வணிகத்தின் (M.Commerce) மூலம் வணிகருக்கும், வாடிக்கையாளருக்கும் ஏற்படும் அனுகூலங்களை தனித்தனியே குறிப்பிடுக.

03. அ) இலட்சிய நோக்கக்கூற்று (Mission Statement) என்பதனை விளக்கி, அதன் அடிப்படை அம்சங்களைக் குறிப்பிடுக.
ஆ) இலங்கையின் நவீன கைத்தொழில் கொள்கையின் இலக்குகள் யாவை?
இ) வணிக நடவடிக்கையில் பூகோளச்சூழல் சவால்களைக் குறிப்பிடுக.
ஈ) நுகர்வோர் உரிமைகளையும் பொறுப்புக்களையும் குறிப்பிடுக.

04. அ) இலங்கையில் பங்குடைமை தொடர்பாகச் செல்வாக்குச் செலுத்தும் அதிகாரச் சட்டங்களையும் கட்டளைச் சட்டங்களையும் குறிப்பிட்டு அவை செல்வாக்குச் செலுத்தும் முறைபற்றி விளக்குக.
ஆ) 1. அங்கீகாரவணிகம் உருவாக்கப்படும் முறைகளைக் குறிப்பிடுக.
2. உடைமையாக்கல் (Acquisitions), ஒன்றிணைதல் (Mergers) என்பவற்றுக் கிடையிலான வேறுபாட்டினை விளக்குக.
இ) 1. தனியார் மயமாக்கல் என்பதனை விளக்குக.
2. தனியார் மயப்படுத்தலின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.
ஈ) பின்வருவன பற்றிச் சிறுகுறிப்புக்கள் எழுதுக.
1. உபாய முயற்சியாண்மை முகாமைத்துவ முகவர் நிறுவன ( SEMA)
2. கம்பனிகளின் பிணக்குத் தீர்தல் சபை.
3. பங்கு ஒப்புறுதி அளித்தல் (Share Under Writing)

05. அ) வணிகர் வங்கி (Marchant Bank) வழங்கும் சேவைகளைக் குறிப்பிடுக.
ஆ) வணிக வங்கிகளினால் பேணப்படும் பிரதான அந்நிய நாணய வைப்புக்களைக் குறிப்பிட்டு விளக்குக.
இ) 1. பெருந்தெருப் போக்குவரத்தில் பயணிகளுக்கான சேவை செயற்றிறன் அற்றதக் காணப்படுவதற்கான காரணங்கள் யாவை?
2. போக்குவரத்து முறைமையின் அடிப்படை அம்சங்களை உதாரணம் மூலம் குறிப்பிடுக.
ஈ) பின்வருவன பற்றிச் சிறுகுறிப்புக்கள் எழுதுக.
1. முன்கூட்டிப் பணம் செலுத்தப்பட்ட அட்டை(Prepaid Card)
2. வழி உண்டியல் (Way bill)
3. செலாவணி மாற்றுவீதம்(Exchange rate)

06. அ) ஒரு நாட்டின் சர்வதேச வியாபாரத்தின் தன்மையைப் பகுப்பாய்வு செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய அளவீடுகளைக் குறிப்பிட்டு விளக்குக.
ஆ) 1. இலத்திரன் வணிகத்தின் மிகப்பிரதான வகைகளைக் குறிப்பிடுக.
2. உலக வியாபார நிறுவனத்தின் (WTO) மிகப்பிரதான தொழிற்பாடுகள் இரண்டையும் குறிப்பிடுக.
இ) 1. இணையத்திலிருந்து (Internet) பெற்றுக்கொள்ளக்கூடிய வணிகச் சேவைகள் யாவை?
2. தகவல் முறைமையின் பொறுப்பினை விளக்குக.
ஈ) பின்வருவனபற்றிச் சிறுகுறிப்புக்கள் எழுதுக.
1. சர்வதேச நாணயநிதியம் (IMF) 2. தீர்மானத் துணைமுறைமை (DSS)
3. கணினி வலையமைப்பு (Computervet work)

**நிறைவுபெற்றன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

ஆசிரிய ஆலோசகர்சங்க ஆனுசரணையுடன் கல்விவளவாளர் நிலையம் நடத்திய முன்னோடிப்பரீட்சை

# கணக்கீடு -01

நேரம் - 3 மணித்தியாலம்

## பகுதி-1

* **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
வினா 01 - 20 வரையான வினாக்களிலிருந்து சரியான விடையைத் தெரிவுசெய்க.

01. பின்வருவனவற்றில் கணக்கீட்டின் வெளியீடுகளாக கருதமுடியாதது எது?
1) வருமானக்கூற்று. 2) வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்.
3) உரிமைமாற்றம் பற்றிய கூற்று. 4) காசுப்பாய்ச்சல் கூற்று.
5) ஐந்தொகை.

02. கொள்கை மாறாமை எண்ணக்கருவினை பின்பற்றுவதன் மூலம் நிதிக்கூற்றுக்களின் எப் பண்பு உறுதி செய்யப்படுகின்றது?
1) எளிமைத்தன்மை. 2) நடுநிலைத்தன்மை.
3) ஒப்பீட்டுத்தன்மை. 4) நம்பகத்தன்மை.
5) பொருண்மைத்தன்மை.

03. கணக்கீட்டுக்கருமங்களில் ஒன்றாகிய 'வகைப்படுத்தல்' கருமத்தை நிறைவு செய்வதற்கு பயன்படுவது எது?
1) மூல ஆவணங்கள். 2) முதற்பதிவேடுகள்.
3) பேரேடுகள். 4) பரீட்சை மீதி.
5) முடிவு அறிக்கைகள்.

04. நிறுவன உரிமையாளர் ஒருவர் தனது தனிப்பட்ட வாகனமொன்றை நிறுவன ஐந்தொகையில் காட்டுமாறு கணக்காளரை வலியுறுத்துகின்றார். இது எவ்வெண்ணக்கருவை மீறுவதாக உள்ளது.
1) பண அளவீட்டு எண்ணக்கரு. 2) வெளிப்படுத்தல் எண்ணக்கரு.
3) பாதுகாப்பு எண்ணக்கரு. 4) அலகுசார் எண்ணக்கரு.
5) முக்கியத்துவ எண்ணக்கரு.

05. ரூபா 6,400 பெறுமதியான வரவுத்தாள் ஒன்றுக்கு மூலப்பதிவேட்டில் ரூபா 4,600 எனப் பதியப்பட்டிருந்தது. இவ்வழுவினால்,
1) விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியைவிட, விற்பனைப் பேரேட்டு மொத்த மீதிகள் அதிகமாக இருக்கும்.
2) விற்பனைப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியைவிட, விற்பனைப் பேரேட்டு மொத்த மீதிகள் குறைவாக இருக்கும்.
3) கொள்வனவுப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியைவிட, கொள்வனவுப் பேரேட்டு மொத்த மீதிகள் அதிகமாக இருக்கும்.
4) கொள்வனவுப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியைவிட, கொள்வனவுப்பேரேட்டு மொத்த மீதிகள் குறைவாக இருக்கும்.
5) மேற்கூறிய எவையுமல்ல.

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா 06, 07இற்கு விடையளிக்குக.
அ. 2007 மார்ச் 31இல், வங்கிக்கூற்றின்படி மீதி ரூபா 36,000
ஆ. 2007 ஏப்பிரல் மாத வங்கிக்கூற்றிலிருந்தான தகவல்கள் பின்வருமாறு
- சமர்பிக்கப்பட்ட காசோலைகள் ரூபா 14,000 (2007 மார்ச் இல் வரையப்பட்ட ரூபா8,000 காசோலை உட்பட)
- வசூலிக்கப்பட்ட காசோலைகள் ரூபா 18,000 (2007 மார்ச் இல் வைப்பிலிடப்பட்ட ரூபா 5,000 காசோலை உட்பட)
- நிலையான கட்டளைக்கொடுப்பனவுகள் ரூபா 5,000
- நேரடி வைப்புக்கள் ரூபா 6,000
இ. 2007 ஏப்பிரல் மாத வங்கிக்கணக்கு தகவல்கள் பின்வருமாறு:
- வைப்பிலிடப்பட்ட காசோலைகள் ரூபா 16,000
- வரையப்பட்ட காசோலைகள் ரூபா 11,000

06. 2007 ஏப்பிரல் 30இல் சரியான வங்கிமீதித் தொகை யாது?
1) ரூபா 39,000 2) ரூபா 38,000 3) ரூபா 42,000
4) ரூபா 41,000 5) ரூபா 37,000

07. 2007 ஏப்பிரல் 30இல் வங்கிக்கூற்று புலப்படுத்தும் மீதி யாது?
1) ரூபா 40,000 2) ரூபா 44,000 3) ரூபா 43,000
4) ரூபா 39,000 5) ரூபா 41,000

08. 2008 டிசம்பர் 31இல், மாதுலா நிறுவனத்தின் பௌதீக ரீதியிலான கையிருப்பு எடுத்தலானது இருப்பின் பெறுமதியானது கிரயத்தில் ரூபா 48,000 என மதிப்பிடப்பட்டுள்ளது எனினும், இவ்விருப்புக் கணிப்பீட்டின்போது பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படவில்லை.
- 2008 நவம்பர் மாதத்தில் கிரயத்துடன் 25% இலாபம் சேர்த்து ரூபா 30,000 ஆக விற்பனை விலையிட்டு 'விற்பனை இன்றேல் திருப்பியனுப்புக' எனும் நிபந்தனையில் பண்டங்கள் அனுப்பப்பட்டிருந்தன. இவற்றில் மூன்றில் இரு பங்கானவை விற்பனை செய்யப்பட்டிருந்தது. மிகுதி திரும்பி வரவேண்டிய கால எல்லை இன்னமும் முடிவுறவில்லை.
- 2008 டிசம்பர் 31 இலுள்ள இருப்பினுள் ரூபா 10,000 கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பண்டங்கள் சேதமடைந்துள்ளன. எனினும், இவற்றை ரூபா 7,000இற்கு விற்கமுடியும் எனவும், இது தொடர்பாக விற்பனைச்செலவு ரூபா 1,000 ஏற்படும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

வியாபாரக்கணக்கு, இலாபநட்டக்கணக்கு, ஐந்தொகை போன்ற அறிக்கைகளில் தோன்றும் உருப்படிகளின் சரியான பெறுமதியை தெரிவுசெய்க.

| | வியாபாரக்கணக்கு | இலாபநட்டக்கணக்கு | ஐந்தொகை |
|---|---|---|---|
| 1) | ரூபா 51,000 | ரூபா 5,000 | ரூபா 46,000 |
| 2) | ரூபா 56,000 | ரூபா 4,000 | ரூபா 52,000 |
| 3) | ரூபா 48,000 | ரூபா 4,000 | ரூபா 44,000 |
| 4) | ரூபா 56,000 | ரூபா 4,000 | ரூபா 52,000 |
| 5) | ரூபா 56,000 | ரூபா 2,000 | ரூபா 54,000 |

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா 09,10இற்கு விடையளிக்குக.**
அச்சுதன் 2007 ஜனவரி 01இல் வியாபாரமொன்றை ஆரம்பித்தார். அவரது 2007ஆம் ஆண்டின் இலாபநட்டக்கணக்கு, காசேட்டிலிருந்தான தகவல்கள் வருமாறு:

| விவரங்கள் | காசேட்டிலிருந்து | இலாபநட்டக்கணக்கிலிருந்து |
|---|---|---|
| மின்சார செலவு | ரூபா 8,000 | ரூபா 11,000 |
| காப்புறுதி செலவு | ரூபா 10,000 | ரூபா 8,000 |
| வாடகை வருமானம் | ரூபா 9,000 | ரூபா 13,000 |

09. 2007 டிசம்பர் 31இல் ஐந்தொகையில் தோன்றும் உருப்படிகளின் தொகுதி,
1) அட்டுறு மின்சாரம் ரூபா 3,000, முற்பணக்காப்புறுதி ரூபா 2,000, அட்டுறு வாடகை வருமானம் ரூபா. 4,000
2) அட்டுறு மின்சாரம் ரூபா 3,000, முற்பணக்காப்புறுதி ரூபா 2,000, முற்பண வாடகை வருமானம் ரூபா 4,000
3) முற்பண மின்சாரம் ரூபா 3,000, அட்டுறு காப்புறுதி ரூபா 2,000, அட்டுறு வாடகை வருமானம் ரூபா 4,000
4) முற்பண மின்சாரம் ரூபா 3,000, அட்டுறு காப்புறுதி ரூபா 2,000, முற்பண வாடகை வருமானம் ரூபா 4,000
5) முற்பண மின்சாரம் ரூபா 2,000, முற்பணக் காப்புறுதி ரூபா 2,000, அட்டுறு வாடகை வருமானம் ரூபா 4,000

10. அட்டுறு அடிப்படையில் 2007இற்குரிய இலாபம் ரூபா 60,000 எனில், காசு அடிப்படையில் இலாபம் யாது?
1) ரூபா 63,000 2) ரூபா 57,000 3) ரூபா 65,000
4) ரூபா 55,000 5) ரூபா 61,000

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா 11, 12இற்கு விடையளிக்குக.**
நிறுவனமொன்று ரூபா 81,000 பெறுமதியான பொறியொன்றினை 2005 ஜனவரி 01இல் கொள்வனவு செய்தது. இதன் எஞ்சும் பெறுமானம் ரூபா 16,000 எனவும், பயன்தரு ஆயுட்காலம் நான்கு ஆண்டுகள் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

11. ஒடுங்குபாக முறையில் தேய்விடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆண்டுத்தேய்மான வீதம் யாது?
1) 25% 2) 20% 3) 33 1/3% 4) 10% 5)12%

12. 2007ஜூன் 30 இல் இப்பொறி ரூபா 35,000இற்கு விற்கப்படின் 2007ஆம் ஆண்டின் இலாப நட்டக்கணக்கில் தாக்கல் செய்யப்படும் பொறிதேய்வு, இலாபநட்டம் ஆகியன பின்வருமாறு:

| | தேய்மானம் (ரூபா) | இலாபம் (ரூபா) |
|---|---|---|
| 1) | 12,000 | 11,000 |
| 2) | 6,000 | 5,000 |
| 3) | 8,125 | 15,375 |
| 4) | 6,000 | 21,000 |
| 5) | 6,000 | 5,000 |

13. A, B ஆகிய இரு நிறுவனங்களின் ஏடுகளிலிருந்தான 2008ஆம் ஆண்டுக்கான தகவல்கள் வருமாறு:

| நிறுவனங்கள் | A | B |
|---|---|---|
| வருட இறுதி மூலதனம் (ரூ) | 83,000 | 77,000 |
| வருட ஆரம்ப மூலதனம் (ரூ) | 68,000 | 70,000 |
| ஆண்டுக்காலத்தில் மேலதிக மூலதனம் (ரூ) | 22,000 | 35,000 |
| எடுப்பனவுகள் (ரூ) | 15,000 | 18,000 |

2008ஆம் ஆண்டுக்குரிய A, B நிறுவனங்களின் இலாப, நட்டங்கள் முறையே,
1) இலாபம் ரூபா 8,000 இலாபம் ரூபா 10,000
2) நட்டம் ரூபா 8,000 நட்டம் ரூபா 8,000
3) இலாபம் ரூபா 8,000 நட்டம் ரூபா 10,000
4) நட்டம் ரூபா 8,000 இலாபம் ரூபா 10,000
5) நட்டம் ரூபா 45,000 நட்டம் ரூபா 24,000

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா 14,15 இற்கு விடையளிக்குக.**
அ. 2008ஆம் ஆண்டில் காசாகப் பெற்ற சந்தா:
- 2007இற்குரியது ரூபா 4,600
- 2008இற்குரியது ரூபா 43,000
- 2009இற்குரியது ரூபா 6,400
ஆ. 2008ஆம் ஆண்டுக்குரிய சந்தாவில் ரூபா 4,800 சென்ற ஆண்டிலேயே கிடைத்திருந்ததுடன் ரூபா 8,200 இவ்வாண்டிறுதி வரை கிடைக்கப்பெறவில்லை.
இ. 2007ஆம் ஆண்டுக்குரிய சந்தாவில் ரூபா 5,600 அவ்வாண்டின் இறுதிவரை கிடைக்கப் பெறவில்லை.

14. அட்டுறு அடிப்படையில் வருமானச்செலவுக்கணக்கில் தாக்கல் செய்யப்படும் சந்தாத்தொகை யாது?
1) ரூபா 55,000 2) ரூபா 58,000 3) ரூபா 56,000
4) ரூபா 52,000 5) ரூபா 45,000

15. சந்தா வருமதிகளுக்கு கணக்கு வைப்பதில்லை எனும் கொள்கை பின்பற்றப்படின் வருமானச் செலவுக்கணக்கில் தாக்கல் செய்யப்படும் சந்தாத்தொகை யாது?
1) ரூபா 55,600 2) ரூபா 52,400 3) 57,200
4) ரூபா 50,800 5) ரூபா 53,600

16. பங்குடமையொன்றில் எடுப்பனவுகளுக்கு ஆண்டொன்றிற்கு 20% வட்டி கணிப்பிடப்படுகின்றது. குறித்தவொரு நிதியாண்டில் ஒவ்வொரு மாத நடுப்பகுதியிலும் பங்காளர் ஒருவர் மாதமொன்றுக்கு ரூபா 3,000இனை தொடர்ச்சியாக ஒரு வருடத்துக்கு பற்றியுள்ளார். பற்று வட்டித்தொகை யாது?
1) ரூபா 3,900 2) ரூபா 3,300 3) ரூபா 3,600
4) ரூபா 300 5) ரூபா 325

17. இலாபநட்டங்களை முறையே 5 : 3 : 2 எனும் விகித்தில் பகிரும் பங்காளர்களான P, Q, R ஆகியோரது பங்குடைமையமைப்பில் Rஇற்குரிய ஆண்டுக்குரிய இலாபப்பங்கு ரூபா 20,000இற்கு குறைவடைய மாட்டாது என மற்றைய பங்காளர்கள் உத்தரவாதமளித்துள்ளனர்
2008ஆம் ஆண்டுக்குரிய பகிர்வுக்குரிய இலாபம் (மூலதனவட்டி, பங்காளர் சம்பளம் நீக்கி) ரூபா 80,000 எனில், ஒவ்வொரு பங்காளருக்கும் கிடைக்கக்கூடிய இலாப்பங்கு யாது?

| | P | Q | R |
|---|---|---|---|
| 1) | ரூபா 37,500 | 22,500 | 20,000 |
| 2) | ரூபா 36,000 | 24,000 | 20,000 |
| 3) | ரூபா 40,000 | 20,000 | 20,000 |
| 4) | ரூபா 38,000 | 22,000 | 20,000 |
| 5) | ரூபா 40,000 | 24,000 | 16,000 |

18. ஒப்பந்தமின்றி செயற்படும் பங்குடைமை தொடர்பாக பிழையான கருத்தை தெரிவிக்கும் கூற்றினை தெரிவுசெய்க.
1) ஒவ்வொரு பங்காளனும் மூலதனத்தை சமனாக இடுதல் வேண்டும்.
2) மூலதனத்திற்கு ஆண்டொன்றிற்கு 5% வட்டி கணிப்பிடப்படும்.
3) பங்காளர்கள் நிர்வாகத்தில் ஈடுபடலாம் ஆனால், சம்பளம் பெறும் உரிமையில்லை.
4) இலாபநட்டங்கள் சமனாக பகிரப்படும்.
5) பங்காளர்களது பற்றுக்களுக்கு வட்டி அறவிடப்பட மாட்டாது.

**பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா 19,20இற்கு விடையளிக்குக.**

இலாபநட்டங்களை 5 : 3 எனும் விகித்தில் பகிரும் பங்காளர்களான X , Y ஆகியோரது பங்குடைமையமைப்பில் Z புதிய பங்காளராக சேர்க்கப்பட்டார். புதிய பங்குடைமை அமைப்பில் X, Y, Z ஆகியோரிடையேயான இலாபநட்டங்கள் முறையே 3 : 2 : 1 எனும் விகிதத்தில் பகிரப்படும். Z ரூபா 8,000 காசினை நன்மதிப்புக்கட்டணமாக கொண்டுவந்தார்.

19. X,Y ஆகியோரிற்கு இழப்பு இலாபநட்ட விகிதம் முறையே,
1) 5 : 3 2) 3 : 2 3) 3 : 1
4) 2 : 1 5) 3 : 5

20. X,Y ஆகியோரிற்கு கிடைக்கும் நன்மதிப்புப் பங்குகள் முறையே,

| | X | Y |
|---|---|---|
| 1) | ரூபா 4,000 | 4,000 |
| 2) | ரூபா 5,000 | 3,000 |
| 3) | ரூபா 4,800 | 3,200 |
| 4) | ரூபா 6,000 | 2,000 |
| 5) | ரூபா 3,200 | 4,800 |

**வினா 21 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்குக.**

21. கணக்கீட்டுத் தகவல்களைப் பயன்படுத்தும் உட்கட்சியினர் நால்வரைக் குறிப்பிடுக.

22. கடனடிப்படையிலான வியாபாரக்கொடுக்கல்,வாங்கல்களில் பயன்படுத்தப்படும் நான்கு மூல ஆவணங்களையும், அவற்றுடன் தொடர்புடைய முதற்பதிவேடுகளையும் குறிப்பிடுக.

| | மூல ஆவணங்கள் | முதற்பதிவேடுகள் |
|---|---|---|
| 1) | .................................... | .................................... |
| 2) | .................................... | .................................... |
| 3) | .................................... | .................................... |
| 4) | .................................... | .................................... |

23. பகுதி சமப்படுத்தும் முறையில் பேரேடுகள் பராமரிக்கும்பொழுது கடன்விற்பனை, கடன்கொள்வனவுகளுக்கு பொதுப்பேரேட்டிலான இரட்டைப்பதிவினைக் குறிப்பிடுக.
1) கடன் விற்பனை .................................... வரவு
.................................... செலவு
2) கடன் கொள்வனவு .................................... வரவு
.................................... செலவு

24. பரீட்சை மீதியின் இணக்கத்தை பாதிக்காத வழுக்கள் நான்கினைக் குறிப்பிடுக.

25. காசேட்டு மீதியைவிட வங்கிக்கூற்று மீதி கூடுதலாக இருப்பதற்கு காரணமாக அமைந்த 'விடுபாடுகள்' இரண்டினைக் குறிப்பிடுக.

26. 'மாற்றல் கிரயங்கள்' உள்ளடக்கியுள்ள கிரயக்கூறுகள் மூன்றினைக் குறிப்பிடுக.
1. .................................... 2. ....................................
3. ....................................

27. தொக்குகளின் கிரயத்தை தேறியநிகரப்பெறுமதிக்கு குறைத்து எழுதுவதற்கான இருமுறைகள் எவை?
1. .................................... 2. ....................................

28. இலங்கைக்கணக்கீட்டு நியமம் 18 இன்படி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தவேண்டிய தகவல்கள் நான்கினைக் குறிப்பிடுக.
1. .................................... 2. ....................................
3. .................................... 4. ....................................

29. பங்குடமையில் நன்மதிப்பு கணிப்பிடப்படும் சந்தர்ப்பங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
1. .................................... 2. ....................................
3. .................................... 4. ....................................

30. பங்காளர் சேரலின் போது சொத்துக்கள் மீளமதிப்பிடப்படுவது ஏன்?
....................................................................................................

**வினா 31 தொடக்கம் 35 வரையான வினாக்களிலுள்ள வெற்றிடங்களில் பொருத்தமான சொற்களை இட்டு வசனத்தைப் பூர்த்தி செய்க.**

31. நிறுவனத்தின் செயற்பாட்டுவிளைவுகளை வெளிப்படுத்தும் அறிக்கை .................................... ஆகும்.
32. நிறுவன பெறுபேறுகளை அறிந்து கொள்வதற்கு அதனுடைய ஆயுட்காலம்வரை காத்திருக்காது அதன் ஆயுட்காலத்தை சிறுசிறு காலப்பிரிவுகளாகப்பிரித்து பெறுபேறுகளை கணிப்பிடுவதற்கு அடிப்படையாக அமைந்த எண்ணக்கரு .................................... எண்ணக்கரு ஆகும்.
33. காணி, கட்டிடக்கொள்வனவு தொடர்பான சட்டக்கட்டணம் ஒரு .................................... செலவாகும்.
34. தனிவியாபாரம் ஒன்றினால் செலுத்தப்பட்ட வருமான வரி .................................... கணக்கில் வரவுவைக்கப்படும்.
35. காசேட்டின் வரவுப்பக்க கழிவுநிரலின் கூட்டுத்தொகை .................................... கணக்கில் வரவு வைக்கப்படும்.

*வினா 36 தொடக்கம் 40 வரையான வினாக்களில் உள்ள வாக்கியங்கள் குறிப்பிடும் கருத்துக்கள் சரி எனில் 'சரி' எனவும், பிழை எனில் 'பிழை' எனவும் குறிப்பிடுக.*

36. இலங்கை கணக்கீட்டு நியமம் 05 இன்படி தொக்குகளின் கிரயத்தை கணிப்பிடுவதற்கான சூத்திரம் முதலுள் முதல் வெளியே முறையாகும். ( )
37. சொத்தின் முடிவுப் பெறுமதி என்பது, பயன்தரு ஆயுட்காலமுடிவில் சொத்தினை விற்பனை செய்வதன் மூலம் தேறும் பெறுமதியிலிருந்து அச்சொத்தினை அகற்றுவதற்கு ஏற்படும் செலவுகளை நீக்கிவரும் தொகையாகும் ( )
38. ஒரு பண்டம் விற்பனை செய்யப்படும் போழுது மட்டுமே அது தொடர்பான கொள்வனவுக்கிரயம் ஒரு செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படும் ( )
39. இரு நிதியாண்டின் இறுதித் திகதியிலுள்ள தேறிய சொத்தில் ஏற்படும் அதிகரிப்பு இலாபத்தை மட்டுமே பிரதிபலிக்கும் ( )
40. [illegible]ாக ஒரு நிதியாண்டின் பேரேட்டு புத்தகத்திலுள்ள அனைத்துக்கணக்குமீதிகளும் மீதியின்றி மூடப்படும். ( )

தொடர்ச்சி அடுத்தவாரம் வெளிவரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலாம்** பக்கத் தொடர்ச்சி...

07\. 1) அணுவெண் 3இலும் குறைந்த மூலகங்களைக் கருதுக. தரப்பட்ட கோடுகளில் பொருத்தமான மூலகங்களை எழுதுக.

1. $MOCl_3$ வகை சேர்வையை உருவாக்கும் மூலகம் எது?/ மூலகங்கள் எவை?
   ..............................................................................................
2. $MO_4^{2-}$ உறுதியான அயனை உருவாக்கும் மூலகங்கள் எவை?
   ..............................................................................................
3. $M_2O_7^{2-}$, $N_2O_7^{2-}$ அயன்களைக்கொண்ட சேர்வைகளுக்கு நீர் சேர்த்துப்பின்பு NaOH கரைசல் சேர்த்தபோது $N2O_7^{2-}$இற்கான கரைசல் நிறமாற்றமடைந்தது. M, N இனை இனங்காண்க.
   ..............................................................................................
4. NaOH நீர்க்கரைசலுடன், $NH_4OH$ நீர்க்கரைசலுடன் $MSO_4$ திண்மத்தை சிறிதளவைச் சேர்த்தபோது நிறமற்ற கரைசல் பெறப்பட்டதோடு PHஉம் குறைந்திருந்தது. M இற்கு பொருத்தமான மூலகம் எது?/ மூலகங்கள் எவை?
   ..............................................................................................
5. ஒரு ஒட்சி வன்னமிலத்தைத் தோற்றுவிக்கக்கூடிய மூலகம் எது?/ மூலகங்கள் எவை?
   ..............................................................................................
6. நீர்க்கரைசலில் எம் மூலகத்தின் அயனை தாழ்த்துவது கடினம்?
   ..............................................................................................
7. எம் மூலகம் வலிமையான ஒட்சியேற்று கருவி?
   ..............................................................................................
8. அதியுயர் ஒட்சியேற்ற நிலையில் $MO_2$ வகை திண்ம நிலை ஒட்சைட்டை உருவாக்கக் கூடிய மூலகம் எது?/ மூலகங்கள் எவை?
   ..............................................................................................
9. எம் மூலகம் மூலகங்களின் நைத்திரேற்றுக் கரைசல்களுக்கு NaOH கரைசல் சேர்க்க வெண்ணிற வீழ்படிவு பெறப்பட்டு பின்பு கபிலநிறமாக மாறும்?
   ..............................................................................................
10. NaOH நீர்க்கரைசலுடன் வெப்பமேற்ற எம் மூலகம்/ மூலகங்கள் இரு வழி விகாரம் அடைந்து சேர்வைகளை உருவாக்கும்/ உருவாக்குகின்றன.
   ..............................................................................................

2) x,y என்ற மூலகங்களைக் கருதுக. x இன் அணுவெண் >y இன் அணுவெண் x ஆனது நீருடன் சேரும்போது w என்ற கரைசலையும் z என்ற வாயுவையும் தந்தது. மூலகம் y ஆனது w கரைசலுடன் தாக்கம் புரிந்து v என்ற கரைசலையும் T என்ற வாயுவையும் தந்தது. x, y, z, w, v, t இற்கு பொருத்தமான குறியீடுகளைத் தருக்.

X ..................................... Y .....................................
Z ..................................... W .....................................
T .....................................

3) P, Q எனும் மூலகங்கள் அறை வெப்ப நிலையில் வாயு நிலையில் காணப்படக்கூடியவை. இவை அணுவெண் 10இலும் குறைந்தவை இவை ஒன்றுடன் ஒன்று உயர் நிபந்தனையில் தாக்கமுற்று R எனும் வாயுவை அறை வெப்பநிலையில் தோற்றுவித்தது. இது மிகை S வாயுவுடன் தாக்கம் புரிந்து T என்ற திரவம் பெறப்பட்டது. அதற்கு நீர் சேர்க்க R என்ற வாயுவும் வேறொரு விளைவு Xஉம் பெறப்பட்டது. X நீருடன் தாக்கம் புரிந்து X இனை ஒரு விளைவாகத் தருகின்றது. P, Q, R, S, T, X இற்கான குறியீடுகளைத் தருக.

P ..................................... Q .....................................
R ..................................... S .....................................
T ..................................... X .....................................

08\. 1) P, Q, R, S, T என்பன ஆவர்த்தன அட்டவணையில் 2ஆம் அல்லது 3ஆம் ஆவர்த்தனங்களில் காணப்படும் அடுத்து வரும் மூலகங்களாகும். இவற்றின் கொதிநிலைகள் மாறும் விதம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| மூலகம் | P | Q | R | S | T |
|---|---|---|---|---|---|
| கொதிநிலை ($^0C$) | 2550 | 4800 | -196 | -183 | -188 |

2) 1. மூலகம் T இற்குரிய இலத்திரன் நிலை அமைப்பை IS, 2 2S, 2 என்ற வழக்கமான வடிவத்தில் எழுதுக.
   ..............................................................................................
   2. மூலகம் S இனது 1ஆம் அயனாக்கற் சக்தி, R இன் 1ஆம் அயனாக்கற் சக்தியிலும் கூடுதலானதா அல்லது குறைவானதா? உமது விடைக்குரிய காரணத்தைத் தருக.
   ..............................................................................................
   3. மூலகம் Pஇன் புளோரைட்டின் இரசாயன சூத்திரத்தை எழுதுக.
   ..............................................................................................

3) 1. மூலகம் M இன் அணுவெண் 28. M இற்குரிய இலத்திரன் நிலை அமைப்பை $IS^2$, $2S^2$, .......... வடிவில் தருக.
   ..............................................................................................
   2. $M^{2+}$ அயனைக் கொண்ட கரைசலுக்கு NaOH கரைசலைக் சேர்க்கும்போது நீர் அவதானிக்கக் கூடியது யாது?
   ..............................................................................................
   3. $M^{2+}$ அயன்களைக் கொண்ட கரைசலுக்கு $NH_3$ நீர்க்கரைசலை மிகையாக இடும்போது, உம்முடைய அவதானம் மேலே கூறிய (2) அவதானத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை எழுதுக.
   ..............................................................................................

3) மூலகம் ஒன்றிலிருந்து பெறப்படும் நேர்க்கதிர்கள் அடிப்படைத் துணிக்கைளில் ஒன்றான புரோத்தன்களால் ஆக்கப்பட்டது என்பதற்கான ஆதாரங்களைத் தருக.
..............................................................................................

## பகுதி,- 11 B
## கட்டுரை வினாக்கள்

01\. அ. 1) பல்விகித சமவிதியைக் கூறுக.
2) ஈயத்தின் இரண்டு ஒட்சைட்டுகள் (மஞ்சள் நிறம், கறுப்பு நிறம்) உமக்குத் தரப்பட்டால் ஆய்வுகூடத்தில் இவ்விதியை எவ்வாறு வாய்ப்புப் பார்ப்பீர்?

ஆ. X என்ற மூலகம் ஆக்கும் ஆவிப்புறப்புள்ள 4 சேர்வைகளைப் பற்றிய தரவுகள் பின்வருமாறு:-


| சேர்வை | ஆவியடர்த்தி | சேர்வையில் உள்ள X இன் சதவீதம் (நிறைப்படி) |
|---|---|---|
| A | 83.9 | 15.9 |
| B | 26.6 | 81.2 |
| C | 37.4 | 86.6 |
| D | 13.8 | 78.2 |

X இன் சாத்தியமான அணு நிறையைத் துணிக.

02\. அ. 1) மெல்லிய பொற் தகட்டின் மீது ∝ கதிர்களை மோதவிடும்போது பெறக்கூடிய சில அவதானங்களைக் றிப்பிடுக.
2) இந்த அவதானங்களை எவ்வாறு விளக்குவீர்?

ஆ. அணுவின் இலத்திரன்கள் வெவ்வேறு சக்தி மட்டங்களில் காணப்படுகின்றன என்பதற்கு ஆதாரமான இரு பரிசோதனைகள் தருக.

இ.




மேலே உள்ள ஆவர்த்தன அட்டவணையில் சில மூலகங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
1) மிகவும் குறைந்த முதலாவது அயனாக்கற் சக்தியைக் கொண்ட மூலகம் எது? உமது தேர்வுக்குரிய காரணம் என்ன?
2) இரண்டாவது ஆவர்த்தனத்தில் மிகவும் குறைந்த இரண்டாவது அயனாக்கற் சக்தியைக் கொண்ட மூலகம் எது?
3) மூலகத்தின் அணு ஆரையிலும் பார்க்கக் கூடிய அயனாரையைக் கொண்ட மூலகங்கள் எவை?
4) மூலகம் yஇன் தொடர் அயனாக்கற் சக்திப் பெறுமானங்களை அகற்றப்பட்ட இலத்திரன்களின் எண்ணிக்கைக்கு எதிராகக் குறித்துப் பெறக்கூடிய பருமட்டான வரைபைத் தருக. (X அச்சு - அகற்றப்பட்ட இலத்திரன், y அச்சு - அயனாக்கற் சக்திப் பெறுமானம்)

03\. அ. 1) சல்பூரிக்கமிலத்தை எவ்வாறு சல்பரீரொட்சைட்டாக மாற்றுவீர் என்பதைத் தருக.
2) சல்பரீரொட்சைட்டு தொடர்பாக பின்வரும் தாக்கங்கள் ஒவ்வொன்றிற்கும், சமன் செய்த சமன்பாடுகளினூடாக ஒவ்வொரு உதாரணம் தருக.
   1. சல்பரீரொட்சைட்டு ஒவ்வொரு உதாரணம் தருக.
   2. சல்பரீரொட்சைட்டு ஒட்சியேற்றப்படும் தாக்கம்.
   3. சல்பரீரொட்சைட்டு ஒட்சியேற்றலோ, தாழ்த்தலோ அடையாத தாக்கம்.

ஆ. 1) $HNO_3$ இலிருந்து $HNO_2$ 2) $KClO_3$இலிருந்து $Cl_2$
3) $MgSO_4$ இலிருந்து Mgo எவ்வாறு ஆய்வுக்கூடத்தில் தயாரிக்கப்படலாம் என்பதைச் சுட்டிக்காட்டுக.

இ. ஐதரசன் ஏலைட்டுக்களின்
1) வெப்பவுறுதி
2) கொதிநிலை ஆகியவை தொகுதி வழியே எவ்வாறு மாற்றமடையும் என்பதைக் காரணத்துடன் தருக.

04\. அ. பின்வருவனவற்றிற்கு விளக்கம் தருக.
1) Ba உடன் ஒப்பிடும்போது Mg இன் தாக்கங்கள் மந்தமானவை.
2) திண்ம அயடீன் நீரில் மிகக்குறைவாகவே கரையும்; ஆனால், காபநாற் குளோரைட்டில் அதிகளவு கரையும்.
3) Cl(g)இன் ஆரை Na(g) ஆரையை விடக்குறைவு.

ஆ. பின்வருவனவற்றிற்குச் சமன் செய்த சமன்பாடுகள் தருக.
1) Pbஇலும் பார்க்க Mg வலுவுள்ள தாழ்த்தியாகத் தொழிற்படும் தாக்கம்.
2) $NH_4Cl$ நீர்க்கரைசல் ஒரு அமிலமாகத் தொழிற்படும் தாக்கம்.
3) செறிந்த நைத்திரிக்கமிலத்தினுள், H, S ஐச் செலுத்தும்போது $H_2S$, $H_2SO_4$ ஆக ஒட்சியேற்றப்பட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதற்கான தாக்கம்.

இ. Q என்னும் நிறமற்ற உப்பின் நீர்க்கரைசல்,
1) மிகை $HNO_3(aq)$ + BaCl2(aq) உடன் வெள்ளை வீழ்படிவு.
2) மிகை $HNO_3(aq)$ + $Ba(NO_3)_2$ (aq) உடன் மாற்றமேதும் இல்லை.
3) KI உடன் மஞ்சள் வீழ்படிவு.
4) 3இல் பெற்ற வீழ்படிவை வெப்பமேற்றல் - வீழ்படிவு கரையும்.
மேலே அவதானிக்கப்பட்ட நோக்கல்களிலிருந்து Q ஐப்பற்றி எடுக்கக்கூடிய முடிவுகளைக் காரணத்துடன் தருக.

05\. அ. 1) வளியில் விடப்பட்ட Na துண்டு ஒன்றில் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கான சமன்பாடுகளைத் தருக. (குறிப்பு:- சமன்பாடுகள் ஈடுசெய்யப்பட வேண்டும்.)
2) Na ஆனது Mg இலும் பார்க்க நீருடன் தாக்குதிறன் கூடியது என்பதற்கான பரிசோதனை ஆய்வுகூடத்தில் எவ்வாறு மேற்கொள்ளுவீர் என எழுதுக.
3) ஆய்வுகூடத்தில் Na ஆனது பரவீன் எண்ணெய்களின் கீழ் வைக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணத்தை விளக்குக.
4) மூலகங்களின் கற்றயனாரைகள் அவற்றின் அணு ஆரைகளைப் பார்க்கிலும் குறைவாக இருப்பதேன் என விளக்குக.

ஆ. 1) வளியில் $N_2$ உண்டென்பதைக் காட்டுவதற்கான பரிசோதனை ஒன்றைத் தருக. (குறிப்பு:- நடைபெறும் தாக்கங்களுக்கு ஈடுசெய்யப்பட்ட சமன்பாடுகளை எழுதுக.)
2) ஐதரசன் அணுவின் காலல் நிறமாலையை விளக்கி, அது எவ்வாறு உண்டாகிறது என்பதைச் சக்திமட்ட வரைபினால் விளக்குக.
3) $CO_3^{2}$, $SO_4^{2-}$, $Cl^-$ என்னும் அயன்களைக்கொண்ட நீர்க்கரைசல் உமக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வயன்களின் செறிவுகளைத் துணியும் முறை ஒன்றினைத் திட்டமிடுக.

06\. அ. பின்வரும் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் சமப்படுத்திய சமன்பாடு எழுதுக.
1) $H_2S$ தாழ்த்தும் கருவியாக. 2) $SO_2$ ஒட்சியேற்றும் கருவியாக.
3) $H_2SO_4$ நீரகற்றும் கருவியாக. 4) $H_2O_2$ ஒட்சியேற்றும் கருவியாக.
5) $(NH_4)_2$ $(r_2O)$ இன் வெப்பப்பிரிகை. 6) $F_2(g)$ நீருடன்.

ஆ. M என்னும் உலோகம் d தொகுப்பிற்குரியது. மின்முலாமிடவும், கலப்பு உலோகம் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. M ஆனது அதியுயர் ஒட்சியேற்ற நிலையில் உண்டாக்கும் ஒட்சி அயனின் நிறம் செம்மஞ்சள் ஆகும்.
1) M இனை இனம் காண்க. 2) M இன் இலத்திரன் நிலையமைப்பினை தருக.
3) ஒட்சி அயனின் சூத்திரத்தை எழுதுக.
4) $(NH_3)_{(aq)}$ உடன் ஆக்கும் சிக்கல் அயனின் சூத்திரத்தையும் நிறத்தையும் தருக.
5) இதன் ஒட்சைட்டுக்கள் 3யும் அவற்றின் அமில மூல இயல்புகளையும் தருக.
6) கலப்புலோகமாக பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக.

இ. $I_2(aq)$ இற்கும் $Na_2S_2O_3$ இற்கும் இடையேயான தாக்கத்தினை எழுதுக.
$Na_2S_2O_3$ கரைசலின் செறிவு $0.1 moldm^3$. இதனை பயன்படுத்தி $KJ/I_2(aq)$ கரைசலின் $25cm^3$ இனை நியமிக்கும்போது $30cm^3$ கரைசல் பயன்படுத்தப்பட்டது. $KJ/I_2(aq)$ இன் செறிவு யாது?

07\. அ. $SO_4^{2-}$, $Mg^{2+}$, $Cl^-$ ஐ மாத்திரம் கொண்ட நீர்க்கரைசலில் இவ் அயன்களின் செறிவை அறிய முறை ஒன்றை பிரேரிக்குக.

ஆ. $KNO_3$, $Ba(NO_3)_2$ கொண்ட திண்ம கலவையின் வேறு ஒரு இரசாயனச்சேர்வையும் பயன்படுத்தாது அவை ஒவ்வொன்றினதும் சதவீதத்தை அறியும் முறையை பிரேரிக்குக.

இ. $BaC_2O_4$ உம் $Ba(OH)_2$ உம் கொண்ட திண்ம கலவை தரப்பட்டுள்ளது. $KHCO_3$ உம் தரப்பட்டுள்ளது. வேறு எந்த சோதனைப் பொருளையும் (நீரைத் தவிர) பயன்படுத்தாது தரப்பட்ட $BaC_2O_4(S)$ + $Ba(OH)_2$ இருப்பதை எவ்வாறு காட்டுவீர்?

ஈ. நீர் $H_2SO_4$ இருக்கும்போது HCOOH ஆனது $KMnO_4$ இனால் $CO_2$ ஆக ஒட்சியேற்றப்படுவதற்கான சமன்படுத்திய இரசாயனச் சமன்பாட்டைத் தருக.

உ. $KNO_3$ + $MnSO_4$ + $Na_2CO_3$ என்பவற்றைத் கொண்ட திண்மக் கலவை வெப்பமேற்றப்பட்டால் பெறப்படும் இரசாயனத் தாக்கத்தின் சமன்படுத்திய சமன்பாட்டைத் தருக.

08\. அ. 1) 1. $H_2SO_4$
2. $H_2S$ ஆகியவற்றிலிருந்து ஆரம்பித்து எவ்வாறு கந்தகவீரொட்டைத் தயாரிப்பீர் என்பதைச் சமன்பாடுகள் மூலமும், தேவையான நிபந்தனைகளைத் தழுவதன் மூலமும் சுட்டிக்காட்டுக.

2) கந்தகவீரொட்சைட்டு,
   1. ஓர் ஒட்சியேற்றியாக 2. ஒரு தாழ்த்தியாக
   3. ஓர் அமிலமாகத் தொழிற்படுவதை எடுத்துக்காட்டுவதற்கு எவ்வாறு ஆய்வுகூடத்தில் (ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு செய்கை வீதம்) பரிசோதனைகள் செய்துகாட்டுவீர் என்பதைச் சுருக்கமாக விவரிக்குக.
   குறிப்பு:- உமது பரிசோதனை ஒவ்வொன்றிலும் கந்தகவீரொட்சைட்டின் தொழிற்பாடு காரணத்துடன் எடுத்துக்காட்டப்படல் வேண்டும்.
3) கந்தகவீரொட்சைட்டின் கைத்தொழில் பயன்கள் 3 தருக.

ஆ. HF, HCl, HBr, Hr ஆகியவற்றில்.
1) எது அதிகூடிய தாழ்த்தும் இயல்புடையது?
2) எது அதிகுறைந்த கொதிநிலை உடையது? உமது விடைகள் ஒவ்வொன்றிற்கும் சுருக்கமாக காரணங்களைத் தருக.

இ. ஆவர்த்தன அட்டவணையின் 3உம் ஆவர்த்தன மூலகங்களில் ஒட்சைட்டுகளாகிய $Al_2O_3$, $SiO_2$ ஆகியவற்றின் அமில மூல இயல்புகளைத் தீர்மானிப்பதற்கு எவ்வாறு ஆய்வுகூடத்தில் பரிசோதனைகள் மேற்கொள்வீர் என்பதைச் சுட்டிக்காட்டுக. **நிறைவுபெற்றன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org